காஞ்சி

ஆசிரியர்: அண்ணாதுரை

ஆண்டு மலர் 1965

விலை ரூ 1/=

எம்ஜியார்
பிக்சர்ஸ்
அடிமைப்பெண்
ஈஸ்ட்மென் கலர்
கதை, டைரக்ஷன்
ELEGANT
எம்.ஜி.ஆர்
ஒளிப்பதிவு·வின்சென்ட்-சுந்தரம் * வசனம்·சொர்ணம் * ஸ்டுடியோ·சத்யா

அவர்களின்

வெலிங்டன் ராக்ஸி
ஸ்ரீ முருகன் ராம்
ஏவிஎம்
புரொடக்ஷன்ஸ்
அளிக்கும்
முருகன் பிரதர்ஸ்
காக்கும்
கரங்கள்
கதை
டைரக்ஷன் A.C. திருலோகசந்தர் M.A
MB
முருகன் பிரதர்ஸ்

ஆகஸ்ட் வெளியீடு!
G.N.வேலுமணியின்
சரவணா பிலிம்ஸ்
எம்
ஜி
ஆர்
நடிக்கும்
கலங்கரை
விளக்கம்
சரோஜாதேவி
நம்பியார் · நாகேஷ் · V.கோபாலகிருஷ்ணன்
மனோரமா · G.சகுந்தலா
கதை · மா.லட்சுமணன்
திரைக்கதை · G.பாலசுப்ரமணியம்
வசனம் · சொர்ணம்
பாடல்கள் · புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் · வாலி
பஞ்சு அருணாசலம்
ஒளிப்பதிவு · தம்பு · கலை · பாலு
ஸ்டில்ஸ் · சாரதி
ஸ்டுடியோ · சத்யா
டைரக்ஷன் · K.சங்கர்
ELEGANT

காஞ்சி

ஆண்டு மலர்

1965

நன்றி-வணக்கம்

'காஞ்சி' ஆண்டு மலர் உமது கரம்பட்டுச் சிறப்படைகிறது.

'காஞ்சி'யிடம் உமக்குள்ள பரிவு தாய்க்குச் சேயிடம் உள்ள பாசத்துக்கு நிகரானதாகும்; அளவிட்டுரைத்திட முயலுவது பேதமை.

'காஞ்சி' உமது உள்ளத்திற்கு உவகை அளித்திடும் வடிவம் பெற்றிட முயற்சி மேற்கொண்டுள்ளேன்; வாழ்த்தி வரவேற்றிடுவீர் எனும் நம்பிக்கையுடன்.

'காஞ்சி' ஓராண்டாக நடைபெற்று, உமது ஆதரவினல் குறுநடை பயிலும் குழவிப் பருவத்துக்கே உரிய கோலம் காட்டி நிற்கிறது.

'காஞ்சி' ஆண்டு மலரில், இதழாசிரியராக இருந்து சிறப்பளித்து வரும் சி. என். ஏ. சுவையும் பயனுமிக்க எழுத்தோவியங்களைத் தந்துள்ளார். நாவலரும், கலைஞரும், மற்றும் தோழர் பலரும் எழிலோவியமளித்து ஊக்குவித்துள்ளனர்.

'காஞ்சி' கழகத்தின் கருத்துப் பெட்டகமாய்த் திகழ்ந்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறேன். உமது நல்லுரையை நாடி நிற்கின்றேன்.

'காஞ்சி' இதழ் தொடர்ந்து எழிலுடன் விளங்கிட எல்லாத் துணையும் புரிந்திடுவீர் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

'காஞ்சி' இதழினை ஆதரித்திடும் அன்பர்கள் அனைவர்க்கும் நன்றியறிதலான வணக்கம். உமது வாழ்த்தினை வழங்கி, இதழினை மேலும் பயனுள்ளதாக்கித் தாருங்கள்.

தங்கள்,

இளங்கோவன்.

செப்டம்பர்
வெளியீடு
புரட்சி நடிகர்
எம் ஜி ஆர்
Somu.
மோகன்
புரொடக்ஷன்ஸ்
ஆசைமுகம்
கதை
T.N.பாலு
திரைக்கதை-வசனம்
ஆரூர்தாஸ்
பாடல்கள்
வாலி
இசை
S.M.சுப்பையா நாயுடு
தயாரிப்பு
P.L.மோகன்ராம்
ஸ்டுடியோ
சத்யா
டைரக்ஷன்
P.புல்லையா
ALL RIGHTS CONTROLLED BY SUBBU & CO(P) LTD. MADRAS-17.
ELEGANT

தம்பி

காக்கும் கரங்கள்

ஏந்தக் கரம் பட்டால் காயும் கனியுமோ,

எந்தக் கரத்தின் வலிவினாலே தமிழர்தம் எதிர்கால வாழ்வு ஏற்றம் அடைய இருக்கிறதோ,

எந்தக் கரம் தன்னலத்துக்காகத் தருக்கர்முன் குவிந்திடாதோ,

எந்தக் கரம் ஏற்புடையனவற்றுக்கெல்லாம் உறுதுணையாக இருந்திடுவதோ,

எந்தக் கரம் தமிழர்க்கு அறநெறியைக் காட்டி வருகின்றதோ,

எந்தக் கரம் கழகம் மேற்கொள்ளும் தொண்டினுக்காகப் படைக்கலனை ஏந்தி வருகிறதோ,

எந்தக் கரம் இழிவினைத் துடைத்து இன்னலை முறியடித்து, மொழிகாத்து, தமிழ் வழியை அமைத்துத் தரவல்லதோ,

அந்த காக்கும் கரத்திடம் 'காஞ்சி' இதழின் ஆண்டு மலர் உறவாடி உவகை அடைகின்றது.

ஒவ்வொரு கிழமையும் 'காக்கும் கரங்களில்' என் கருத்தினைத் தாங்கி வரும் மடல் சேருகிறது, பெருமிதத்துடன் ஏற்றுககொள்ளப்படுகிறது என்பதனை அறிந்து அளவிலா அக மகிழ்ச்சி அடைந்து வருகின்றேன்.

தம்பி! உன் தகுதிமிக்க கரங்களுக்கு ஏற்றவிதமான எழில் கூட்டி இதழினைத் தந்திடும் முயற்சியில் என் இளைய மகன் இளங்கோவன் ஈடுபட்டு வருகின்றான் என்றாலும், இதழின் எழிலைவிட, என் இதயத்தில் ஊற்றெனப் பெருகிடும் அன்பினையே பெரிதெனக் கொண்டிடுவாய், மகிழ்ந்து வரவேற்பாய் என்பதனை நானறிவேன்.

ஒவ்வொரு பிரச்சினையையும் உன்னிடம் எடுத்துக் கூறிடுவதன் மூலம், எனக்கே ஒரு தெளிவும், உறுதியும பிறந்திடக் காண்கினறேன; நான் அளித்திடும் கருததினுக்கு நறுமணம் தான் கூட்டி நாலு திசைதனிலும் சேர்த்திடுவாய் எனற நம்பிகை கொண்டுள்ளேன்; நான் அறிவேன் உன் திறமை.

தம்பி! எப்படியோ நமது உள்ளமதில் தாயகம் குறித்துப் பற்று நிரம்பிக் கிடக்கிறது. முன்பிருந்த நிலையினை நாமறிந்திடச் செய்யும் இலக்கியச் செல்வங்கள் இனிதே பெற்றுள்ளோம்; இணையற்ற செல்வமது, மறுப்பார் எவருமில்லை! எனினும் ஈடற்ற கருவூலம் பெற்றவரே நாமெனினும் இற்றை நாளில் எத்தனை இடர்ப்பாடும் இழிநிலையும் வந்துற்றதென்பதனை எண்ணும்போது, ஏனோ நமக்கிந்த மெய்யுணர்வு நெஞ்சில் இடம் பிடித்து நிறைந்துளது என்றும் நாம் கவலைப்படுகின்றோம்; கண்கசியும நிலையுந்தான.

எதிர்ப்புகள் அல்ல, நமது இதயத்தை வாட்டுபவை; களம் நின்றுப் போராட கலங்கிடப் போவதில்லை; நமக்கிருக்கும் கவலையெலாம், மரபு மறந்திடுவார் மாற்றாருடன் கூடி மாண்பு கெடுத்திடவும் துணிகின்றாரே, அவரும் தமிழர்! ஆம்! அவர்க்கும் சேர்த்தன்றோ அருந்தொண்டு ஆற்றுகின்றோம்! அதனை அறிந்திடாது, கனியிருக்கக் காய் கவர்வார்போலும், தாய் அருகிருக்க ஓர் பேய் மகளைப் பின் தொடர்ந்து செல்கின்றாரே! என்செய்வோம்!!

எக்கேடு எவர்க்கெனினும் எமக்கு ஈந்திடுவீர் சுவை என்றால், சேர்ந்திடுவோம் உம்மோடு, உற்றாரை மாற்றாராய்க் கருதிக்கொண்டு, என்றுரைத்து நிற்கின்றாரே, இவர் நிற்கும் இடமும் தமிழ் மண்தானே, ஐயோ! வழிவழி அம்மண்ணுக்கு வந்த மாண்பதுவும் இவர் தீண்டி நிற்பதனால் மங்கி மடிந்திடுமே, எவர் இவரைத் திருத்திடுவார், என்று இவர் விழி திறக்கும்? உற்றவழி அதற்கு என்ன? என்றெண்ணி ஏங்குகிறோம்; மாற்றார் படை கண்டு, அல்ல, அல்ல; அவர்தம் பலம் கண்டும் அல்ல, அல்ல, உண்மை வென்றிடும் என்ற உறுதி நமக்குண்டு என்பதனால்.

வெள்ளையனை விரட்டிவிட்டோம், வெற்றி முரசு கொட்டிவிட்டோம், அதற்குப் பின்னர் முரசொன்று அறைந்திடவும், முழக்கம் எழுப்பிடவும், அறமென்றும் நெறியென்றும் பலவற்றைக் கூறிடவும், தேவை துளியும் இல்லை, தெரிந்திடுவீர்! தெளிந்திடுவீர்! அன்னியன் ஆண்டபோது மிகத்தேவை கிளர்ச்சி பல; இன்றல்ல; கதை முன்பே முடிந்ததுகாண் என்கிறார் 'கன'மானார்.

அரசு கட்டிலிலே அமர்ந்துவிட்ட காரணத்தால், எதையும் செய்திடலாம், எம்முறையும் திணித்திடலாம், வரி பலவே திரட்டிடலாம், வயிற்றினில் அடித்திடலாம், வாழ்வே சுமையாகி வாட்டுதே என்போரை, வாழ்வா பெரிது? நாடன்றோ? எனக்கேட்டு, வாயை அடக்கிடலாம், மீறிட முனைவோரைச் சிறையில் அடைத்திடலாம் சின்னாபின்னமாக்கிடலாம், என்றெல்லாம் ஆர்ப்பரித்து ஆடுகின்றார் வெறியாட்டம்.

அவர் கூற்று ஏற்றிடுவோர் அறிவினை அடகு வைத்தோர்! தமிழராகார்!! அரசாள முனைந்தோர்கள் எவரெனினும், நம்மவரெனினும், கேடு செய்திடுவோர்கள் போடும் உடை யாதெனிலும், எதிர்த்து நின்றிடுதல் நம் கடமை; நம் உரிமை: நம் வீட்டு நெருப்பெனினும் ஊரழிக்க விடலாமோ! புற்றரவு நம் வீட்டுப் பூந்தோட்டம் உள்ளதெனில் நச்சுப்பல் தீண்டிடுமேல் நமைச் சாகவைக்காதோ!! ஏனோ இவர்க்கிந்த எளிய உண்மை ஏறவில்லை; எம்மையா எதிர்க்கின்றீர் என்றுரைக்கின்றாரே; கொடுமையின் வடிவமது யாதெனினும் தாக்கிடுதல் நம் கடமை; நம் உரிமை!! நாமெல்லாம் இந்நாட்டு மன்னர்! நமை ஆள்வோர் நாம் கொண்ட ஊழியரே!

இந்த விதமான எண்ணம் இன்று நந்தம் தமிழகத்தில் நன்றாக வேரூன்றி, ஆல்போல் தழைத்திருக்கக் காண்கின்றோம். அத் தருவை அழித்திடவே முனைகின்றார் ஆளவந்தார், இருளாட்சி நடாத்திடவே. ஏற்கப்போமோ!

ஆண்டு பதினேழாகி அவதி தீரவில்லை, அல்லல் போகவில்லை. அவர் வகுத்த பாதையிலே அகன்ற வாய்ப் பள்ளங்கள், நெருப்புக்குண்டம்; ஏனென்று கேட்டாலோ, எதிர்ப்பா? எமக்கா? என்று கிளம்புகின்றார், மக்கள் வாழ்வறுத்துத் தம் வாழ்வைக் கொழுக்கச் செய்யும் மாநிதியைப் பெற்றவர்கள் புடை சூழத்தானே!

ஏழைக்காம் இவ்வாட்சி, எவருக்கேனும் இருந்திடுமேல் அய்யப்பாடு, எழுவீர் எம்முடன் வருவீர் திடலை நோக்கி, எத்தனை ஆர்வமுடன் எமது தலைவர்தாமும் பேசுகிறார் காணீர் பெருமைமிகு கொள்கைபற்றி. ஜனநாயக சோஷியலிசம் எமது கொள்கை; பொருள் என்ன அறிவீரோ தான்; பொன்னும் பொருளும் குவிந்துவிடும், ஏழையர்க்கு என்பதாகும் என்கின்றார்கள்; கண்சிமிட்டி நிற்கின்றார்கள் முன்னணியில் கனதனவான்களாம் வாண்டையார் மூப்பனார் நெடும்பலத்தார், வகைமிக்க பட்டக்காரர்போன்றார் பல்லோர்.

இதற்கென்ன செய்வதென எண்ணிப் பார்த்திட்ட நான் என் தம்பி இருக்கின்றான் பகை முடிக்க பழிதுடைக்க என்ற உறுதிபெற்று, எடுத்துரைத்தேன் அவர்க்கெல்லாம், நாட்டில் உள்ளதொரு ஆட்சிமுறை மக்களாட்சியாகும், மக்கள் ஆணையின்முன் மற்றெதுவும் நில்லாது, ஆகவே அரசாள வந்தவரே, அறிந்திடுவீர், அருந்தமிழை அழித்திடும் உம் அக்ரமச் செயலினுக்கு அடிபணியோம், சிறைக்கஞ்சோம்; பொதுத் தேர்தல் களத்தினிலே நின்றிடுவோம், பொறுப்புணர்ந்து மக்கள்தாமும் புத்தாட்சி கண்டிடுவார், வாக்குரிமை வலிவு கொண்டு.

ஏளனம் செய்கின்றார் என் தம்பி! நம்மையெலாம். கோட்டை பல கட்டிக் கொலுவிருக்கும் எம்மிடமா காட்டுகின்றீர் உம் வீரம், நீட்டுகின்றீர் உம் வாளை, எம்மிடம் உள்ள பலம் நீரறிய மாட்டீர்! இருபது இலட்சங்கள் எமது பேழை விழும்! ஏழை எளியோரை எமது வலை பின்னிவிடும். எதிர்ப்பென்ன கதியாகும் என்பதனை எடுத்துரைக்கத் தேவையில்லை. இழுத்து வா! பூட்டிப் போடு! என்றுரைக்கும் வல்லமையைப் பெற்றுள்ளோம் பாதுகாப்புச் சட்டத்தால், ஏனோ வீணாய் எமை எதிர்க்கின்றீர், எவரெவர்க்கு என்ன விலை என்பதறிவோம் நாம், எதிர்த்து நிற்காதீர், எறிபட்டுப் போகாதீர் என்கின்றார்.

அவர் கூறி வருவதுபோல் பெருநிதியும் குவிந்திடுது; காண்கின்றோம் நித்த நித்தம். வாளுக்கும் வேலுக்கும் வல்லம்பு தனக்கும், கரி பரி மிகக் கொண்டு களம் நிற்கும் படையினுக்கும் அஞ்சாது போரிட்ட ஆற்றல் மரபு வந்தோம், ஆர்ப்பரிப்புக்கு அஞ்சுவதா! துஞ்சுவதேயெனினும் அஞ்சிடுவோர் நாமலவே! பஞ்சை பராரிகளோ பாராண்ட நம் தமிழர், பளபளக்கும் வெள்ளிப் பணத்துக்குப் பல்லிளிக்க!—என்று உள்ளம் உரைக்கிறது, தம்பி! நீ உரைத்திடுவது வேறோ!!

இட்டடி நோக எடுத்த அடி கொப்பளிக்க வட்டில் ஏந்திவந்த வடிவழகிமீது கொண்ட மையல் மிகுதியினால் மாய்ந்தான் அம்பிகாபதி என்பார்; மாற்றான் என்றறியாது மாறுவேடம் புரியாது பாசறைக்குள் பகைவனையே சேர்த்ததனால் வீழ்ந்தான் ஓர் மன்னன் என்பார்; இவை யாவும் கதையெனினும், நமது கருத்தினிலே தெளிவுண்டாக்கும் பாடம் உண்டு, காண்பாய் தம்பி!

நோக்கம்தனிலே நமக்கோர் உறுதி உண்டாமென்றால், பாக்கம் பல தந்தாலும், பகைவர் முன் பல்லிளித்து நில்லோம்; பதவிப் பானம் தந்த மயக்கம் மேலிட்டதாலே பற்பல பேசுகின்றார்; பொருளற்ற பேச்சு, மருள்வோம் அல்லோம்; மறவர் நாம், மறவோம் என்றும்.

தம்பி! உன் ஆற்றல் அறிந்ததனால் அறைந்தேன் நான் இவ்வாறெல்லாம், அஃதுணர்ந்து விழிப்பு மிகுந்திடுக! எழுச்சி மிகக் கொள்க! கட்டுப்பாட்டுடனே கடமையாற்றிடுக! கண்ணியம் மறவாமல் காரியமாற்றிடுக! என்று நாட்டினருக்கு, இன்றுதொட்டு எடுத்துரைத்து, வீழ்த்திடுவோம் வஞ்சகத்தை, காத்திடுவோம் தமிழ் மரபை, விரட்டிடுவோம் இந்தியின் ஆதிக்கத்தை என்றெவரும் சூளுரைத்துக் கிளம்பிடும் வகையே செய்க! முனைந்து நீ இதனைச் செய்தால், முத்தமிழ்க்கு உரியவனே! மும்முரசு கொண்டவனே! முக்காலும் உண்மை, வெற்றி ஈட்டிடலாம்' வேற்று மொழி ஓட்டிடலாம், வெந்த உள்ளம் கொண்ட மக்கள் சிந்தையில் தேன் பெய்திடலாம், நல்லாட்சி அமைத்திடலாம், அறிந்திடுக அன்புத் தம்பி!

அண்ணன்,



★

விற்பனையாகிறது

அண்ணாவின்

கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்
ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி
ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை
ரூ. 2-00

கிடைக்குமிடம்:

பரிமளம் பதிப்பகம்,

சின்ன காஞ்சீபுரம்.

கோலாலம்பூர் பொதுக்கூட்டத்தில்
மலேசியத் தலைமையமைச்சர் துங்கு அப்துல் ரகிமான்
அவர்களின் உருவப்படம் அண்ணாவிடம்
அன்பளிப்பாக வழங்கப்பட்ட காட்சி.



மலேசியத் தலைநகரான கோலாலம்பூர் மெர்தேகா ஸ்டேடியத்தில் நடந்த
வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் காட்சி—ஒரு தோற்றம்.

உழைப்போம் வாரீர்!

[புலவர் பொன்னிவளவன்]

சோலையிலே திரிகிறது வண்டின் கூட்டம்
சுடர்நிலவு திரிகிறது நீல வானில்
சாலையிலே நாம் அவைபோல் திரிய லாமா?
சமுதாய முன்னேற்றம் காணு கின்ற
வேலையிலே ஈடுபட்டுப் பாடு பட்டு
வெற்றிபெற வேண்டாமா! எத்தர் கூட்டம்
மூலையிலே முக்காடு போட்டுக் குந்தும்
முன்னேற்றக் கழகத்தின் பணியைக் கண்டால்?

பாட்டெழுதிப் புகழ்பெற்றுள் ஔவை! பாரி
பலருக்குத் தந்துதந்து புகழைப் பெற்றுன்!
ஆட்டனத்தி ஆட்டத்தால் புகழைப் பெற்றுன்!
அம்பெய்துப் புகழ்பெற்றுன் வல்வில் ஓரி!
'கூட்டத்தால் பேச்சாலே புகழைப் பெற்றேம்;
கொள்கைதனை முழங்கியதால் புகழைப்
பெற்றேம்;
நாட்டுக்குத் தொண்டாற்றிப் புகழைப் பெற்றேம்
நாம்!' என்ற நிலைநிலைக்க உழைப்போம் வாரீர்!

பூப்பந்தல் மேலமர்ந்த வண்டு தேனைப்
புசிக்கட்டும்; இசைகொடுக்க மறக்க லாமா?
சாப்பாட்டை மறக்காத மனிதன் சொந்தச்
சரித்திரத்தை மறக்கமட்டும் தவற வில்லை;
நாய்ப்பாடு படுகின்ற தென்ன கத்தார்
நலிவகற்றிப் பொலிவேற்ற வழியா இல்லை?
வாய்ப்பந்தல் போடுகின்ற ஆட்சி நீக்கி
வலிவுள்ள புதுஆட்சி அமைப்போம் வாரீர்!

ஒட்டகம்தன் வயிற்றில்நீர் சேர்த்து வைக்கும்!
உணவாகும் பொருள் எறும்பு சேர்த்துவைக்கும்!
திட்டமிட்டு எதுதேவை எனத்தெ ரிந்து
தினம்சேர்ப்போம் நாம்வெற்றி பெறுவ தற்கு
ஒட்டடைதான் பெருமூச்சில் பறக்கும்! எங்கள்
உயிர்நிகர்த்த முன்னேற்றக் கழகம் மாற்றுர்
விட்டுவரும் பெருமூச்சில் பறப்ப துண்டா?
விரல்நகத்தால் பிளந்திடுமா பாறைக் கற்கள்?

ஏழையிடம் ஏமாந்தால் குறைந்த துன்பம்!
எதிரியிடம் ஏமாந்தால் அழிந்தே போவோம்!
கோழையிடம் ஏமாந்தால் வெட்கக் கேடு!
கொள்கையிலார் முன்நாமும் தோற்க லாமா?
வாழைப்பூ போல்குனிந்து வாழ மாட்டோம்!
வண்ணச்செந் தாமரைபோல் நிமிர்ந்து
நிற்போம்
மோழைகளோ கோழைகளோ இல்லை இங்கே!
முன்னேற்றக் கழகம்இது வீரர் கோட்டம்!

குணம்காப்பான் பண்பாளன்! தேன்இ னிப்புக்
குரல்காப்பான் பாகவதன்! இரும்புப் பெட்டிப்
பணம்காப்பான் பணக்காரன்! குறைந்தி டாது
பருத்தஉடல் எடைகாப்பார் சிலபேர்! குன்றூ
மணம்காக்கும் மகிழம்பூ காய்ந்த பின்னும்
மதிப்புபெறும்! தாய்மொழியாம் தமிழைக்
காத்தால்
வணங்காத தலையெல்லாம் வணங்கும்! நம்மை
வரலாறு வரவேற்று இடம்கொ டுக்கும்!

மட்டமொழி இந்திதனைப் புகழ்ந்து பேசி
மதிப்பளித்துத் தனிப்பட்டம் கட்டி, வெல்லக்
கட்டிநிகர் தமிழ்தன்னைப் பட்ட மாக்கிக்
காற்றினிலே பறக்கவிடும் ஆட்சி யாளர்
விட்டுவைப்பா ராதமிழை? கழகம் இன்றேல்
விளையாடிப் பார்ப்பார்கள் இன்னும்! நாட்டைக்-
கட்டழகுத் தமிழ்தன்னை - இனத்தைக் காக்கக்
கழகம்தான் துணை!வேறு யாரு மில்லை!

வெட்டாமல் ஊறுது கிணறு! செந்நெல்
விதைக்காமல் விளையாது கழனி! வேர்வை
கொட்டாமல் பாட்டாளி குந்திக் கொண்டால்
குவலயத்தில் பஞ்சம்தான் குடியி ருக்கும்!
ஒட்டாரக் கதர்மனித வட்டா ரத்தின்
ஓயாத தொல்லைகளை ஓய வைப்போம்!
எட்டட்டும் உலகத்தின் திசைக ளெட்டும்
இயக்கத்தின் செல்வாக்கு! உழைப்போம் வாரீர்!

சமதர்மமும் சர்வேஸ்வரனும்

சர்வேஸ்வரனே சகலவற்றினுக்கும் பொறுப்பானவர்–அண்டங்கள் இயங்குவதும் ஜீவன்கள் உலவுவதும், மலருவதும், மடிவதும் எல்லாம் அவன் செயலே என்று உள்ளம் உருகியும் உருகிடவும் உபதேசம் அருளும்போது கேட்க இனிக்கிறது, நம்பிக்கை சுரக்கிறது — பண்டு முதல் இன்றுவரை. சர்வேஸ்வரனே சகலவற்றினுக்கும் பொறுப்பேற்றிடுபவர் எனவே அவர் ஆணையின் வழிப்படியே அனைத்தும் நடக்கிறது என்று பலமிகு படை கொண்டு தாக்கிடும் பகைவர் தலைவன் கூறி, நாட்டினை நாசமாக்கி எதிர்த்தோரை அழித்து மற்றவரை அடிமை கொண்டு ஆர்ப்பரித்திடும் நிலையில் கூறிடும் போது, "சர்வேஸ்வரனை ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் இந்த அழிவு அவன் சம்மதம் பெற்றது அல்ல! அவன் பெயரைக் கூறிக்கொண்டு அக்ரமத்துக்குத் திரையிடுவதனை அறிவோம் நாங்கள்" என்று கூறிடுகின்றனர் குமுறிடும் மக்கள்!

அன்று அலர்ந்து மணம் பரப்பிடும் மலரை ஆண்டவன் அளித்திடுகிறார் என்று ஏற்றுக்கொண்டு மகிழ்ந்திடும் மனதினரால் நெருப்பைக் கக்கி நாசத்தை விளைவிக்கும் எரிமலை வெடித்திடுதல் அவன் செயலே என்று ஏற்றுக்கொள்ள இயல்வதில்லை. உலகிலே ஒவ்வோர் காலத்தில் ஓரோரிடத்தில் ஓரோர் முறையினைப் புகுத்தியோர் அனைவரும், சர்வேஸ்வரனின் சம்மதம் பெற்றதே இம்முறை என்றுதான் செப்பிவந்தனர். அம்முறையால் பலனும் சுவையும் பெற்றோர் ஒப்பினர்; மற்றையோர் ஐயப்பாடே கொண்டனர், சிலரோ வெளிப்படையாகவே மறுத்தனர். அரசனின் அதிகாரம் அளவற்றதாக இருத்தல் வேண்டும், அவர்தம் ஆணையின்படி நடந்திடுவதால் தமக்குக்கேடு பல நேரிடுவதாயினும், மக்கள் மகேசனிடம் முறையிட்டுக் கொள்ளலாமேயன்றி மன்னனை எதிர்த்திடுதல் கூடாது; அது சர்வேஸ்வரனுக்குச் சம்மதமானதல்ல என்று எடுத்துரைக்கப்பட்ட போது, 'ஆம்' என்றனர் மக்கள் பலகாலம். பிறகு அடுக்காதே! என்றனர். சர்வேசன் மக்களை அழித்திடவோ மன்னனைப் படைத்திருப்பான்? மன்னன், மகேசன் பெயர் கூறி நமது மதியை மயக்கப் பார்க்கிறான். மக்கள்குரலேமகேசன் குரல் என்று முழக்கமெழுப்பினர்— மன்னன் ஏதும் செய்ய சர்வேஸ்வரனின் சம்மதம் பெற்றுள்ளான் என்ற பழைய பேச்சைத் துச்சமென்று தள்ளி விட்டனர். அது போன்றேசெல்வவான்களின் நிலைக்குக் காரணம் அவர்கள் முன்பு செய்த தவம்! அவர்கள் அந்நிலையில் இருப்பது ஆண்டவனின் அருள் அவர்களுக்குக் கிடைத்ததால்; ஆகவே சர்வேசனுக்குச் சம்மதமான அந்த முறையைக் குறை கூறுவது தவறு, எதிர்ப்பது பாபம் என்று மக்கள் கருதினர்; ஆலய அதிபர்கள் உபதேசம் அருளினர்; பலகாலம். பிறகோ, மக்கள் அனைவரும் மகேசன் மைந்தரே! சிலரைச் சீராட்டிடவும் பலரை வாட்டி வாட்டி வதைத்திடவும் பெம்மானின் மனம் ஒப்புமோ! பேதமை அது போல் எண்ணுதல்! எல்லார்க்கும் எல்லாம் என்பதே எம்மானின் ஆணை! அதனைக் கெடுத்திடும் செல்வவான்கள் சர்வேசனைச் சான்றுக்கும் துணைக்கும் அழைப்பது அடாத செயல்; இனி அதற்கு இடந்தரோம் என்று எக்காளமிட்டனர் மக்கள்—எளியோர் எனும் நிலையில் தள்ளப்பட்டிருந்தோர்.

கூர்ந்து நோக்கும்போது எவரெவருக்கு எந்தெந்த முறை சுவையும் பயனும் தந்ததோ, அம்முறையே இறை பணித்த முறை என்று எடுத்தியம்பும் போக்கு பலகாலமாக இருந்து வந்திருக்கிறது என்பது புலனாகும்.

இவ்வளவும் 'அவர்' பெயர் கூறி இங்குளோர், தத்தமது ஆற்றல் வாய்ப்புதனைப் பயன்படுத்தி நலன்களைத் தேடிக்கொள்ளும் நிலையில் முன்பு, முறை பலவற்றினுக்கு இறை அருள் உண்டென்று கூறி வந்ததுபோன்றே, சமதர்மம் சர்வேஸ்வரனின் சம்மதம் பெற்றதோர் நன்னெறி என்று இன்று நேற்றல்ல, இருநூறாண்டுகளுக்கு முன்பிருந்தே, இங்கு அல்ல ஐரோப்பிய நாடுகளில், கவிஞர்கள் கூறிடலாயினர்.

அநீதியும் அக்ரமும் நெளியும் போது, கடவுள் இருக்கிறார், கவனித்துக் கொள்வார் என்று கருதியிருந்து வந்த காலமும்,

கடவுளே! இந்தவிதமான அக்ரமம் நடக்கிறதே! இதனைச் செய்திடுவோனை அழித்திடலாகாதா என்று முறையிட்ட காலமும்,

கடவுள் இருக்கிறாரா? எங்கே இருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார், எவர்பக்கம் சார்ந்திருக்கிறார்? என்று வெகுண்டுரைத்த காலமும்,

மனிதன் செய்திடும் சூது சூழ்ச்சிகளுக்குக் கடவுள் ஏன் பொறுப்பேற்க வேண்டும்! மனிதனை

மனிதன் கெடுக்கும்போது, கெடுமதியாளனை வீழ்த்திட வழிதேட வேண்டுமேயன்றி, வந்து அவனை வதைத்திடுக! என்று கடவுளை வழிபாடு செய்து கொண்டிருப்பதா! என்று கேட்டு, கொதித்தெழுந்து கேடுகளைந்திட முனைந்திடும் காலமும்எனும் இன்னோரன்னவகையினவான காலம் பல வடிவமெடுத்தன. இவைகளுக்கு, கவிஞர்கள் தமது கருத்துச் செறிவினால், வடிவம் கொடுத்து வந்தனர்; சீர்திருத்தவாதிகள் செயல்முறை வகுத்தனர். கேடுகளைந்திட ஆற்றல் மிக்க அணி வகுப்புகள் ஆங்காங்கு அமைந்தன. அந்த அணி வகுப்புகளுக்குஆண்டவன் அருள் உண்டு என்று, புது முறை காண விழைந்திடுவோர் கூறி வரவேற்றனர்; பழைய முறைகள் சர்வேஸ்வரனின் சம்மதம் பெற்றவை என்று உபதேசித்து வந்த மார்க்க அமைப்புகளில் இடம் பெற்ற புதுமுறைக்கு சர்வேசன் சம்மதம் தந்துள்ளான் என்று கூறிட முன் வந்தனர்.

மன்னனுக்காகவும், சீமான்களுக்காகவும் வாதாடி வந்த ஜெபமாலை, மக்களுக்காக வாதாடும் கட்டம் பிறந்தது.

இன்று சமதர்மம் சர்வேஸ்வரனின் சம்மதம் பெற்றது என்று வாதாட மறுத்திடும் மதக் கோட்டங்கள் மிகச் சிலவாக மட்டுமே இருந்திட முடியும்.

இந்நிலை தோன்றுமுன்பு, ஆதிக்க அரசு முறை, அடக்கியாளும் செல்வவான்களின் முறைஇருப்பது சர்வேசனின் சம்மதம் பெற்றது என்று வாதாடப்பட்டு பெரும்பாலான மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தபோது, மக்களுக்காகப் புதிய சிந்தனைத் தெளிவைத் தந்திட்ட சில அறிவாளர்கள், கேடு சூழ்ந்திடும் முறைகளை ஆதரிக்கும் கடவுளரும் கடவுளர் ஆவரோ! அவர்தமை நாம் ஏற்கப்போமோ! என்று கேட்டனர் கோபமிகுதியுடன்சிலர்;பலர் கேலிக் குரலில்.

கி. மு. 480ல் கிரேக்க நாட்டில் இருந்தயூரிமிடிஸ் எனும் கவிஞர் பெருமகன், கடவுளர் உளரா? விண் மீதா! என்று கேட்டுக் கேலிசெய்தார்.

விண்மீது கடவுள் உளர்
என்றே விளம்புகின்றுரா சிலர்?
இல்லை! இல்லை! கடவுளர் ஆங்கிலை.
மூடமதியினர் மூடமதிக் கதைகூறி
மூடமாக்க முனைகின்றுர்; இசையாதீர்!
காரணம் காட்டுவேன் கருத்தில்
கொண்டு உண்மை காண்பீர்!
கொலையொடு கொள்ளை சூது
சூழ்ச்சிகள் செய்திடு மன்னர்
திருநகர் பலவும் தீக்கிரையாக்குவர்
இச்செயல் புரிந்திடும் இவரெலாம்
சாந்தசீலர் தமைவிட இன்பமாய்
வாழ்கின்றுர்!
கடவுளை நம்பிடும் சிறுநாடுபல
கடவுள்நெறி இகழும் பேரரசுக்குப்
பலியாயின!
படைபலம் கொண்டவன்
அடிமை கொள்கின்றுன்!

என்ற கருத்துடைய கவிதையைப் புனைந்தளித்தார்.

கடவுளைக் குறைகூறுவதா! கடவுளை மறுப்பதா! என்ற நடுக்கம் அவருக்கு எழவில்லை; செய்திடும் தீய செயலினுக்கெல்லாம் கடவுள் பெயர்கூறிக் கயவர் மற்றவரை ஏய்க்கின்றனரே, இதுஎன்ன அக்ரமம் என்றகோபமே அவர் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்திருக்கிறது. கடவுளையேமடக்கிக்கேள்வி கேட்டிடும் துணிவினை மக்கள் பெற்றுவிட்டால், கொடுங்கோலர்களை எதிர்த்து விரட்டிடும் துணிவு எளிதாகப் பெற்றுவிடுவர் என்று எண்ணிய கவிஞர்கள் பலர் தோன்றினர்.

செல்வம் திரட்டிக் குவித்து, செருக்குடன் வாழ்ந்திடுவோர், கடவுளை வழிபடும் முறையைக் கேலி செய்து, மக்களின் வாழ்வைச் செல்லரித்ததாக்கிடும் தீய செயலைச் செய்துகொண்டே ஆண்டவனுக்குக் காணிக்கை செலுத்திவிட்டால் பாபம் கழுவப்பட்டுப் போய்விடும் என்ற நினைப்புடன் வந்தனை வழிபாடு செய்திடும் வஞ்சக முறையினைக் கவிஞர்கள் சிலர் வன்மையாகக் கண்டித்துள்ளனர்; சிலர் அந்த நிலைபற்றி நையாண்டி செய்திடும் முறையில் கவிதைகளை இயற்றித் தந்துள்ளனர்.

அமெரிக்கக் கவிஞர் ஆர்தர் கியடர்மன் என்பார், வஞ்சக மனத்தினன் ஆண்டவனை வழிபடு முறைபற்றி நகைச்சுவை மிகுந்திடும் கவிதை இயற்றினுர். செல்வவான் ஆண்டவனை வேண்டுகின்றுனும், இம் முறையில்.

உடையாரும் இல்லாரும்
உவந்தேத்துகின்றுர்கள்
அடியேனின் விண்ணப்பம்
அன்புடன் கேட்பீர், ஐயே!
இன்னும் ஓர் கோடி ஐந்து
கிடைத்திடவே அருள்புரிவீர்
பாடுபட்டுத் தேடுவதோ
பகற்கொள்ளை தன்விளைவோ
நேர்மைவழி வருவதுவோ
குறுக்குவழிச் சரக்கோ
முறைபற்றி இலைகவலை.
சட்டம் எனைக் கொட்டாமல்
சர்வேசா! காத்திடுவீர்!
பேழைகள் வழிந்திடவே
பெரும்பொருள் தருவீரேல்
பதினுறில் ஒருபாகம்
பகிர்ந்தளிப்பேன், பகவானே!

செல்வம் திரட்டுவோனின் 'பக்தி'யின் குட்டு உடைபடத்தக்கவிதமான இவ்விதமான கவிதைகளைப் படித்திடும் மக்கள் வாய்விட்டுச் சிரித்திடவும், வஞ்சகத்தைச் சாடிடவும், கடவுளையும் ஏய்த்திடத் துணியும் கனவானை வெறுத்திடவுமான மனப்பான்மையை வெகுஎளிதாகப் பெற்றனர். பக்திமான்—திருப்பணி பல புரிந்தோன்—விருது பெற்று, அதனையேதமது வஞ்சகத்தை மறைத்திடும் திரையாக்கிக் கொண்டிருந்த சீமான்கள் திகைத்தனர், தமது திரை கிழித்தெறியப் படுவது கண்டு. இதுபோன்ற கவிதை மூலம் புதுக் கருத்து, புரட்சிக் கருத்து



பெற்ற மக்கள், பூமான் செய்திடும் பூஜையைப் பார்க்கும்போதெல்லாம்,

பதினறில் ஒருபாகம் பகிர்ந்தளிப்பேன் பகவானே!

என்றபாடலை எடுத்துக் கூறி ஏளனம் செய்யாமலா இருந்திருப்பர்.

படைபலம், சட்டம் என்பவைகளைக் காட்டி, மக்கள் உள்ளத்தில் எதிர்ப்புணர்ச்சி எழாதபடி தடுத்துவிடமுடிந்ததைவிட, 'பக்திமான்'— 'ஆண்டவன் அருள் பெற்றவன்' என்ற அரண் அமைத்துக்கொள்வது, எளிதாக முடிந்தது, வெற்றிகரமாகவும் நடந்துவந்தது.

எத்தகைய போலி பக்தி அவர்கள் கொண்டிருப்பது என்பதனைக் கவிஞர்கள் அழகாக எடுத்து விளக்கியபோது அரண் தகர்ந்துவிட்டது.

ஏழைபடும்பாடுபற்றி ஏதுமறியா நிலையில் இருந்திடுதல் அழகலவே! என்று ஆண்டவனுக்கு எடுத்துக் கூறிடும் முறையிலும், விளக்கமளித்திடும்விதத்திலும் கவிதைகள் வெளிவரலாயின.

மிக்க சுகத்திலே இருந்திடுவோருக்கு, கஷ்டத்தில் உழல்வோரின் நிலைமையினை உணர்ந்துகொள்ள முடிவதில்லை, அதேநிலைதான் கடவுளுக்கும், விண்ணுலகில் ஒளிமயமான இடத்திலே கொலுவீற்றிருக்கிருர், வேதனையின் தன்மை அவருக்கு எங்ஙனம் விளங்கிடும்என்றே கேட்டிருக்கிருர் ஒரு கவிஞர்.

கடவுளை நிந்திக்கிருனே கயவன் என்று எவரும் கூறிட இயலாத முறையில், நகைச்சுவை கலந்து, முறையீட்டினை வெளியிடுகிருர் லூயி உன்டர்மேயர் எனும் அமெரிக்கக் கவிஞர், 1885-ம் ஆண்டு பிறந்தவர்.

நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளி, சுரங்கத்திலே உள்ள குளிர், இருள், இடர்ப்பாடு ஆகியவற்றினைக் கடவுள் அறியவில்லையே என்று கேட்டிடுவதுபோல் அமைந்துள்ளது அவருடைய கவிதை.

துவக்கமே நகைச்சுவையுடன் அமைகிறது.

கடவுளே! குறைகூற
எனக்கு விருப்பமில்லை.

காரணம் கேட்டிடும் இடம்
அல்ல, சுரங்கம்.

மழைநீர் தேங்கிடும்
குட்டைகள்

குளிருடன் இருளும்
இருந்திடும் இடம்

இவ்விதமாகச் சுரங்கத் தொழிலாளி தான் வேலைசெய்யும் இடத்திலே உள்ள நிலைமையை விளக்கிவிட்டு, கடவுள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்துவருகிருர் என்பதை அவருக்கே நினைவுபடுத்துகிருன்.

கடவுளே! விண்மீன்கள்
ஒளிதரும் இடம்,

கதிரவன் அருகினில்
இருக்கிருன், இதமளிக்கிருன்

ஒளிமிக்க விண்ணுலகில்
இருக்கின்றீர்

சுரங்கத்தின் நிலைமை
எப்படி உமக்குப் புரியும்!

என்று கேட்கிருன், கோபத்துடன் அல்ல, விளக்கம் அளித்திடும் முறையில். நம்பமறுப்பாரோ நாதன் என்ற ஐயப்பாடு எழுகிறது, சுரங்கத் தொழிலாளிக்கு ஆகவே 'ஆண்டவனே! நீயே வந்துபார், நான் சொல்வது புரியும்' என்று கூறுகிருன்.

பூமிக்கு அடியில் இருள்
குகையில்

விளக்கொன்று தலையினில்
சுமந்துகொண்டு

ஆழ்குழி இறங்கிடில்
அலுத்துப் போவீர், நீரும்
ஆமாம்!

என்று தெரிவித்துவிட்டு. தனது தேவை என்ன என்பதனைத் தேவனுக்குத் தெரிவிக்கிருன்.

இருளன்றி வேறில்லை
ஆங்கே

பொறி அசைவதன்றி
வேறு அசைவு இல்லை

கடவுளே! எமது அன்பு
பெற நீர் விரும்பிடின்

கைப்பிடி விண்மீன்
வீசுவீர் இங்கு!

விண்ணுலகில் தேவைக்கு அதிகமாகவே உள்ளன ஒளிதரு நட்சத்திரங்கள். சுரங்கத்திலேயோ இருள் மயம். ஆகவே விண்ணுலகில் வீணுக்கு ஒளிவிட்டுக்கொண்டுள்ள விண்மீன்களில் ஒரு கைப்பிடி அளவு எடுத்து இங்கு வீசும் ஐயா! என்று கேட்கிருன் இறைவனை.

இத்தனை உருக்கத்துடன் அமைந்துள்ள கவிதை, புதுக் கருத்தையளித்திடத் தவறிடுமா! புதியதோர்எழுச்சி, விழிப்புணர்ச்சி, கடவுட் கொள்கை பற்றிய புதிய தெளிவு யாவும் சமூகம் பெற்றது.

பாட்டாளிகள் தமது நிலைகுறித்து உருக்கத்துடன் எடுத்துரைத்திடலாம், உரிமையுடன் பரமனிடம்

பிரிட்டனில் முதல் சைவ ஓட்டல்

லண்டனில்இந்தியருக்குச் சொந்தமான முதல் ஓட்டல் என்றும் பிரிட்டனிலேயே முதல் இந்திய சைவ உணவு விடுதி என்றும் கூறப்படும் ஓர் ஓட்டல் அங்கு திறக்கப்படுகிறது.

ஓவியரும், கவிஞரும், ஓட்டல் சொந்தக்காரருமான ரமேஷ் படேல், வர்த்தகர் சுரேஷ் சோக்சி ஆகிய இருவரும் கூட்டாகச் சேர்ந்து இவற்றை ஆரம்பிக்கின்றனர். ஓட்டல் ஷாருஜ எனப்படும் இந்த ஓட்டலில் இந்திய சிற்றுண்டிச்சாலை, இந்திய சைவ உணவு விடுதி ஆகியவையும் அடங்கியுள்ளன. லண்டன் கிரேட் ரசல் தெருவில் அமைந்துள்ள இந்த ஓட்டலும் உணவு விடுதியும் மே 8-ந் தேதி திறந்துவைக்கப்படும். இந்திய ஹைகமிஷனரும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் திறப்பு விழாவில் கலந்துகொள்வார்கள்.

திறப்புவிழாவுக்கு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, உள்நாட்டு மந்திரி குல்சாரிலால் நந்தா, மற்ற இந்திய மந்திரிகள் ஆகியோரிடமிருந்தும் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், முன்னாள் மந்திரி ரெஜினல் மாட்லிங் ஆகியோரிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்துள்ளன. திறப்பு விழாவில் கலந்துகொள்ள இலங்கை ஹைகமிஷனர், நேபாளத் தூதர், மொரிஷஸ் கமிஷனர் ஆகியோர் இசைந்துள்ளனர்.

புதிய ஓட்டலில் சுத்த சைவ சாப்பாடு கிடைக்கும். இந்தியாவின் சில பகுதிகளில் இருக்கும் வழக்கப்படி தனித்தனி பிரிவுகளைக் கொண்ட வட்டமான உலோகத் தட்டுகளில் உணவு படைக்கப்படும். இந்தியரல்லாத அபிமானிகள் இதனை ருசிபார்க்குமாறு ஊக்குவிக்கப் படுவார்கள். உணவு விடுதியுடன் இணைந்த ஓட்டலில் 18 அறைகள் இருக்கின்றன.

ரமேஷ் படேல் 4 வருடங்களுக்கு முன்னர் காபி ஓட்டலை ஆரம்பித்தார். அது வெற்றிகரமாக அமைந்தது. அந்த வெற்றி காரணமாகவே அவர் சோக்சியுடன் கூட்டு சேர்ந்து ரூ. 8 லட்சத்து 66 ஆயிரம் செலவில் காபி ஓட்டலுடன் சைவ உணவு விடுதி, தங்கும் வசதி கொண்ட ஓட்டல் ஆகியவற்றையும் சேர்த்துப் புதிய இடத்தில் ஆரம்பித்துள்ளார்.

முறையிட்டுக்கொள்ளலாம், எமக்கு இழைக்கப்படும் அநீதியைக் காணீர் என்று கதறலாம், ஆயினும் விண்ணுலகக் கடவுள் பாட்டாளிகளின் துயர்போக்கிட, அவர்பக்கம் பரிந்துபேசிட வரவாபோகிருர், நாம் பதினுறில் ஓர் பங்கு பரமனுக்குப் பகிர்ந்தளிக்கின்ருேமே, பரமன் நம் பக்கம்தான் நிற்பார் என்ற நம்பிக்கை செல்வவான்களுக்கு ஏற்படத்தக்கவிதத்தில், ஏழையர் நலிவு தொடர்ந்து படர்ந்து இருந்து வந்தது. இத்தனைக்காலமாகஇல்லா தாருககாகப் பரிவுகாட்ட வராத இறைவன் இனியா வரப்போகிருன்! — என்றெண்ணி இறுமாந்து கிடந்திடலாயினர் செல்வபுரியினர். அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திடமுனைகிருர் ஓர்அறிவாளர். உம்மாலே கொடுமைப் படுத்தப் பட்டுக் குமுறிக் கிடக்கின்ருரே ஏழையர், அவர்களைத் தேவன் விடுவித்தால் உமதுகதி என்னுகும் என்பதுபற்றி ஒருகணம் எண்ணிப் பார்த்ததுண்டா? எண்ணிப் பார்த்திடுவீர்! என்று கூறுகிருர் அப்டன் சிங்ளர் எனும் முற்போக்காளர்.

நலிந்துகிடப்போரைக் காண, மக்களாக உருவினுலும் மாக்களாக நிலையினுலும் உள்ள ஏழை எளியோரைக் காணும்படி, நாட்டின் நாயகர்களேயும் நளினிகளேயும் அழைத்துச் சென்று காட்டி, பிறகு எச்சரித்திடுவதுபோன்ற முறையில் அமைந்திருக்கிறது அப்டன் சிங்ளர் தீட்டியுள்ள புரட்சிக் கவிதை.

நாட்டின் நாயகரே!
நளினிகளே!
வாசமிகு மாடம் கூடம்
வண்ண மலர்ப்பள்ளி நீங்கி
வந்திடுவீர் என்னுேடு.
காட்சி காண.

என்று கூறி அழைத்துச் செல்கின்ருர் ஏழையர் உலகு காண. ஏழையர் உலகில், முரட்டுக் கூச்சல்,

முன்னுேர்கள்செவிவீழ்ந்த
முரட்டுக் கூச்சலது
காரிருள் சூழ்கானிடையே
குகை மாந்தர் எழுப்பியது
ஈண்டதுபோல் எழுந்துளது
செவிமடுப்பீர்!
செந்தேனே!!
கூண்டிலடைபட்ட
குற்றுயிர்கள்
சிற்றுயிர்கள்
கூவிக்கிடக்கும் கோலம் நீர்
கண்டிடலாம்
உம்மால் விளைந்திட்ட ஓவியம்
கண்டிடுவீர்!
அங்கோர் உரு எழுப்பும்
ஒலிகேளீர்!
ஆழ்ந்ததூக்கம்-குறட்டைச்
சத்தம்
இங்கொரு உறுமல் கேளீர்!
வெறிமிகு விலங்கு போலும்!!
அதோ ஓர் ஓலம்! விழித்த
விலங்கின் விம்மல்.
ஆங்கோர் சொறி நோய்ப்
பிராணி தானும்
கிளப்பிடும் 'பிராண்டும்'
சத்தம்!
நாட்டின் நாயகரே! நளினிகளே!
வந்தென்னுடன் காண்பீர்
சாட்சிதனே
உம்கைவண்ணம் தந்ததிவை!!
உமது மகிழ்ச்சிக்கும் மமதைக்கும்
உற்பத்திப் பீடம் இது!
பவனிவர உம் தேரில்
பிணைத்த பிராணிகள் இவை!
இவர்கொட்டும் குருதியே
நெய்மணக்கும் விருந்து
உமக்கு!
கண்டிடுவீர்! என்று கேட்பேன்!
விண்டிடுவீர்
பண்டுபோல் பரமனவர்
பாரினுக்கு
அழலேந்தும் வேல்தனையே
அனுப்பிவைத்தால்
என்ன கதியாவீர்! ஏந்தல்களே
எண்ணிடுவீர்!
கூண்டுடைத்து இவ்
விலங்குகளை
தேவன் விடுவித்தால்
என்னுகும்!
வறியவர் உம் வீதி எலாம்
கலக்கிடுவர் அறிவீர் இன்றே!

எத்துணை இறுமாப்புடன் இருப்பவர்களாயினும், இந்த எச்சரிக்கை கேட்டிடும்போது குலை நடுக்கம் கொள்ளத்தானே செய்வர்? அக்ரமம் இது என்று தெரிந்திருந்தும் அவர்கள் அச்சமற்று இருப்பதன் காரணம், கூண்டிலடைபட்ட குற்றுயிரை, சிற்றுயிரை, விம்மிக் கிடந்திடும் விலங்குகளை, ஆண்டவன் விடுவிக்க மாட்டார் என்ற தைரியம்தான்.

அந்தத் தைரியத்தைத் தகர்த்தெறியும் நோக்குடன் சிங்ளர் எச்சரித்திடுகிருர்.

பரமன், பாட்டாளிகளுக்காக வருவது கூட இருக்கட்டும், பரமன் எதிரில் பாட்டாளிகளும் பதைக்கப் பதைக்க அவர்களைக் கொடுமை செய்திடுவோரும் நின்றிடும் நாளில் இன்று இங்கே வாய்மூடிக் கிடக்கும் வறியவர்கள் பரமன் முன்னே, தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எடுத்துப்பேச ஆரம்பித்தால், பரமனின் மனம் என்ன பாடுபடும், எத்தனை கடுங்கோபம்எழும், ஏதேது செய்திடத் துடிப்பார் என்பது பற்றி எண்ணிப் பார்த்தீர்களாஎன்று செல்வவான்களைப் பார்த்துக் கேட்டிடும் பாணியில் கவிதை தீட்டினுர் மற்றுேர் கவிஞர். ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கத்தக்க வீரமுழக்கம் என்று இந்தக்கவிதையினைச் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

ஏழை எந்த நிலையில் இருக்கிருன்? எந்த நிலைக்கு ஏழை கொண்டுவரப்பட்டிருக்கிருன் இந்தக்கதி இவனுக்கு ஏற்பட வேண்டுமென்று இறைவன்இவனைப்

பன்றிக்கு எத்தனைக் குளம்பு!

நான்சி ஆஸ்டோர் என்ற மாது 1919 முதல் 1944 வரை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினராகஇருந்தவர். அந்தப்பதவிவகித்த முதல் பிரிட்டிஷ் பெண் அவர்தான். கன்சர் வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர் அவர். அவரை ஒருமுறை சபையில் மற்றெரு உறுப்பினர் குறும்பாகக்கேட்டார். "அம்மையாரே, பன்றிக்கு ஒரு காலில் எத்தனைக் குளம்புகள் இருக்குமெனச் சொல்லமுடியுமா?"

அதற்கு அம்மையார் பதிலளித்தார்:

"சொல்வதென்ன; உங்கள் காலில்உள்ள பூட்டைக் கழற்றிவிட்டு நீங்களே எண்ணிக் கொள்ளலாமே!" இவ்வளவு சாமர்த்திய மாகப் பேசக்கூடிய அந்த மாதுதான் சர்ச்சிலிடம் ஏமாந்துவிட்டார். "நீங்கள் என் கணவராக இருந்திருந்தால் உங்கள் காப்பியில் விஷம் போட்டிருப்பேன்" என்று சர்ச்சிலிடம் நான்சி ஆஸ்டோர் கூறினுர். "நீங்கள் என் மனைவியாக இருந்திருந்தால் நான் அதைக் குடித்துவிட்டிருப்பேன்" என்று பட்டென்று அடித்துவிட்டார் சர்ச்சில்.

படைத்தான்? இவனை இந்தக் கதிக்குக் கொண்டு வந்த உம்மைப் பரமன் சும்மாவா விட்டு விடுவான்? என்றெல்லாம் கேட்கின்றார் புரட்சிக் கவி.

காலமெல்லாம் கடும்உழைப்பு
அவன் கூனிக் கிடக்கின்றான்.

கட்டாந்தரையை நோக்குகிறான்
மண்வெட்டிமீது சாய்கிறான்.

காலதேவன் கீறிவிட்ட
கோடுகள்—முகத்தில்.
முதுகிலே பெரிய சுமை
உலகம் ஏற்றிவைத்தது.

மகிழ்ச்சி மாய்ந்துவிட்டது
நம்பிக்கை தீய்ந்துவிட்டது.

அவனுக்கு அக்கதிவரச்
செய்தவர் யார்?

திகைத்துக் கிடக்கின்றான்
சிந்தனையற்று.

எருதுக்கு இவனும்
உடன் பிறப்பாளனே!

அவன் புருவத்தைக்
கவலைக்கோடு ஆக்கிய
கைதான், யார் கை?

அவன் சிந்தனை விளக்கினை
அணைத்தது எவரின் மூச்சு?

நீராரும் கடலுடுத்த
நிலமிசை அரசாள

விண்மீனின் ஒளிகாண
விண்ணைக் காண

நித்தியத் தன்மையினை
உணரும் நேர்த்திபெற

வல்லவன் படைத்தது
இந்த உருவையா?
கதிரவனை, அதன் வழியைக்
கணித்தவன்
கண்டதுவும் இக்கனவா!

இதனினும் பயங்கரம்
இல்லை, வேறோருருவம்

உலகிலுள பேரரசைக்
குருட்டறிவைக் கண்டிக்கும்
பேசா உருவம் இது!

ஆத்மா அழிவதனை
அறியச் செய்யும்

குறிதாங்கி
இவனே காண்!

பாரினுக்குப் பேராபத்து
அளித்திட வல்லதிது
வேறில்லை!

அவனுக்கும் நிம்மதிக்கும்
இடையேதான், எத்தனை தூரம்

வேதவேதாந்தம், அவன்
அறிவானா?

இசைதரும் இனிமை
அவன் நுகர்வானா?

பகலவன் விரித்திடும்
பொன்னிறக் கதிரும்

காற்றினில் மிதந்திடும்
மலர்தரு மணமும்

எதனை அவன் அறிவான்?
எங்ஙனம் அறிவான்?

குனிந்து கிடக்கிறான்
குவலயம் இழைத்த
கொடுமைதனைத் தாங்கி!

மனிதத் தன்மையை
மாய்த்தனர் காணீர்!

உடைமை பறித்தனர்
உரிமை அழித்தனர்.

காணீர்! கேளீர்!
வருவது அறிவீர்!

நீதிதேவர்காள்! நெஞ்சினில்
கொள்வீர்

என்று இயம்பிடும்
பேசா உருவம்

மண்ணைக் கொத்திடும்
உழவன்; உணர்வீர்!

பற்பல நாட்டினிலே
பட்டயம் பெற்ற

மேட்டுக் குடியினரே!
மேலோரே! கோலோரே!
உருகி உடல்கருகி
உள்ளம் வெந்த

இவ் வுருவம்தானே
நீர்அளிக்கும் காணிக்கை
சொல்வீர் இறைவனுக்கே?

நெஞ்சை நிமிர்த்தி இவன்
நேர்த்தியாய் நடைபோட

வழிஉண்டோ? செய
வல்லீரோ?
ஒளிநிறைக் கண்ணினைத்
தந்திட இயலுமோ?

ஆசைக் கனவுகள்
தவழ்ந்திடும் நிலையினை

அவனுக் களித்திட
ஆகுமோ உம்மால்?

காலமெலாம் நீர்இழைத்த
கேடதனைத் துடைத்து

நீதிவழங்கிட இயலுமோ
உம்மால்?

மேலோரே! கோலோரே!
கூறும் விடைதான்.

எதிர்காலம் எங்கிலைக்கு
இவனைக் கொண்டுசெலும்?

உலகை நோக்கி
ஊழிபோல் பெரும்புரட்சி

வெடித்திடும் புதுநாளில்
இடியென இவன் எழுப்பும்

வினாதனக்கு
ஏதுபதிலிறுப்பீர்? எங்ஙனம்?
எங்ஙனம்?

இந்த உருவினை
இவனுக்களித்திட்ட

அரசும் அரசரும்
அந்நாள்தன்னில்

எங்கிலை பெறுதல் இயல்பு
எனக்கூறீர்!

பேசாது கொடுமையினைப்
பலகாலும் விட்டுவைத்த
பெம்மான்முன்னே

இப்பேசாப் பயங்கரம்
பேசிடும்!

விடை அளிக்க
அறியீர், ஐயே!

ஏழையர்க்குக் கொடுமை இழைத்திடுவோரின் இதயத்தில் ஈட்டி பாய்ச்சிடுவதுபோன்ற இக்கவிதை, புரட்சிமிகு எண்ணம் பூத்திடவைத்தது. இங்கே இன்புற்று இருக்கின்றோம் என்று எண்ணற்க, பேரிடி ஒன்று உம் தலைமீது விழப்போகிறது; பேசாத உருவங்கள் பேசப்போகின்றன; இதுவரை கேட்காத கேள்விகளைக் கேட்கப்போகின்றன; என்ன பதில் அளிப்பீர்! பரம

இங்கே ஆண்கள் அங்கே பெண்கள்

ஆஸ்திரேலியாவின் மூலையிலுள்ள ஒரு காட்டுப் பிரதேசத்தில் வாழும் ஆதி மனிதர்களிடம் விநோதமான பழக்கம் உண்டாம்.

அங்கு பெண்கள்தான் ஆண்களை விரட்டிச் சென்று காதலிப்பார்களாம்.

பெண்கள் தங்களைப் பலாத்காரம் செய்துவிடுவார்களோ என்று அஞ்சி ஆண்கள் மறைந்துகொள்வார்களாம். அங்கு ஒரு பெண் பல கணவர்களைத் தேடலாம். ஓர் ஆண் தன் மனைவியைத் தவிர மற்ற பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாதாம்!

னுடைய கோபத்தினின்றும் எங்ஙனம் தப்புவீர்! என்றெல்லாம் கேட்டிடும் முறையிலே அமைந்த இக்கவிதை செல்வவானுக்குக் கடவுளின் துணை இல்லை என்பதுமட்டுமல்ல, கடவுளின் சீற்றம் இவனைத் தாக்கத்தான்போகிறது என்ற எண்ணத்தை ஏறுநடைபோடச்செய்து, எழுச்சியைக் கிளறிவிட்டு, புரட்சிக்கான பக்குவத்தைச் சமைத்தளித்தது.

அவன் அருளால் பெற்றேன் பெருஞ்செல்வம் என்று பேசிய காலம் மாய்ந்தது; அவன் காத்துக்கொண்டிருக்கிறான், கடுமையான தண்டனை தர என்ற எச்சரிக்கையைக் கேட்டுத் திகில்கொள்ளும் காலம் பிறந்தது.

செல்வவான் தனது நிலைமைக்குக் கடவுளைத் துணைகொண்டான் முன்பு!

ஏழையர், தமக்கு இறுதியில் நீதி வழங்கக் கடவுள் துணையைப் பெறப்போகிறோம் என்று எக்காளமிடலாயினர் பிறகு.

முதலாளிகளுக்குக் கடவுள் பாதுகாப்பாளராக இருந்தது மறைந்திடவும் ஏழைகளை வாழ்ந்திடச் செய்திடும் சமதர்மத்துக்காகச் சர்வேஸ்வரன் தனது சக்தியைத் துணையாக்கப்போகிறான் என்ற புதுப்பாடல் பிறந்தது.

என்னதான் நடைபெறுகிறது? போய்ப் பார்த்துவிட்டுத்தான் வருவோமே!—என்று ஆண்டவனுக்குத் தோன்றி இங்கு வந்தாரானால், என்ன எண்ணுவார்? என்ன கூறுவார்? என்பதுபற்றித் தமது சிந்தனையைச் செலுத்திக் கவிதை இயற்றினார் ஜேம்ஸ்ரசல் லோவெல் எனும் அமெரிக்கக் கவிஞர். நீக்ரோக்களின் விடுதலையில் நிரம்ப ஆர்வம் கொண்டவர். இவருடைய ஒவ்வொரு கவிதையும் ஒரு படைக்குச் சமம் என்று பாராட்டினர். அவர், ஏசுநாதரைப் பேசவைத்திடுகிறார் தமது கவிதையொன்றில்.

சென்று நான் காண்பேன்
மாந்தரை, உடன்பிறப்பாளரை

என்னிடம் அவர்கொளும்
நம்பிக்கை எவ்விதம் உளதென

கண்டிடச் செல்வேன்
என்றுரைத்தார் ஏசு.

பிறவிப் பெருங்கடல்
புகுந்தாரில்லை
வந்தனன்! என்றே
வையகத்தோர்க்கு

அறிவித்தார் ஏசு
வந்தார் அதுபோல்.

ஆலயத்ததிபரும்
அரசாளுநரும்

ஆங்கதுகண்டு
அறைந்தனர் இதுபோல்,

"சகலமும் அருளியோன்
பிரசன்னமாகிறான்

எல்லாம் வல்லவன்
எவரிலும் பெரியோன்

எதிர்கொண்டழைப்போம்
ஏற்புடை முறையில்

ஆணிப் பொன்னாலான
அழகு விரிப்பமைத்தார் காண்!

ஈடில்லா எழில்மேவும்
மாடங்கள், கூடங்கள்

அவர் தங்கத் தந்திட்டார்,
மாமன்னர்க் களித்திடும்

வைபவம் விருந்தளித்தார்
மகிழ்வார் ஏசு என்று.

அலங்கார வளைவுகள்
ஆனந்த கீதம்

ஐயன் புகழ்பாட
இசைவாணர் கூட்டம்

ஆலயத்தில் அரண்மனையில்
நீதிமன்றந்தன்னில்

எடுப்பாக அமைத்தார்கள்
ஏசுவின் திருஉருவம்,

எனினும் எங்கெங்கு
நாதனை

அவர் அழைத்துச்
செலினும்

துக்கம் மிகக்கொண்டு
சிரம் தாழ்த்தி

நடந்தார் ஏசுபிரான்
நடுக்குற்றார் மிகவும்.

இத்தனை அமைப்புகளின்
அடித்தளத்திலிருந்து

மேரிமகனார் செவியில்
விழ்ந்ததோ விம்மல்!

ஆலயத்தில் அரண்மனையில்
நீதி மன்றந்தன்னில்

வெடிப்புகள் பலகண்டார்
சுவர்களிலே, ஏசு

அடித்தளமாய் அமைந்த
மாந்தர் பெருமூச்சு
பெரிதாக்கிடுதலையும் கண்டார்.

மாந்தரின் உடல்மீதும்
ஆத்மாவின் மீதும்

ஆலயமும் அரண்மனையும்
அமைத்திரோ, ஐயா!

செல்வரைச் சீராட்டி
ஏழையரை வாட்டும்

அநியாய அமைப்புகளும்
நிலைத்திடுமோ கூறீர்!

வெள்ளி வாயிற்படிக்குத்
தங்கக் கம்பிகளிட்டு

தந்தையின் மந்தையினைப்
போட்டடைத்தீர், நீவிர்!

மந்தையினர் சிந்திடும்
கண்ணீர்ச் சத்தம்
கேட்டுவருகின்றேன் நான்

ஆயிரத்துத் தொண்ணூறு
ஆண்டுக்குப் பிறகு!

ஆலயத்ததிபரும் அரசாளுனரும் தாமேதும் தவறு செய்திடவில்லை என்றும் நெடுங்காலமாக இருந்துவரும் ஏற்பாட்டினைத்தான் மெத்தக் கஸ்டப்பட்டுக் காப்பாற்றி வருவதாகவும் சமாதானம் கூறினர்; ஏசு அவர்பேச்சை ஏற்கவில்லை.

கூனிக் குறுகிப்போன
குடிமகன், ஓர் பாட்டாளி,
தாயற்ற தையல், கதியற்றாள்,
காமக்குழி விழ்ந்த காரிகை,
இவர்போன்றாரைக் காட்டி,
எனையேத்தும் போக்கினரே
நீர்சமைத்த இவ் உருவந்
தனைக் காணீர் எள்ளுருகிச்
சொன்னார்.

இந்தக் கேவலங்களை ஒரு பொருட்டாக எண்ணி இங்குக் கொண்டுவந்து காட்டுகிறாரே ஏசு என்று பதறிப்போயினராம் ஆலயத்ததிபர்கள்.

பாவம் படருமெனப்
பதைத்தவரும்
பட்டுடையைத்
தொட்டிழுத்துக்கொண்டார்
திட்டாகாவண்ணம்

என்று கூறிச் சாடுகிறார் கவிஞர்.

உலகிலே செல்வவான்கள் உருவாக்கி வைத்துள்ள நிலையை ஆண்டவன் சகித்துக்கொள்ள மாட்டான் என்று கூறுவதன்மூலம் இந்நிலை தேவசம்மதம் பெற்றது என்று கருதிக்கொண்டுவந்த மூடமதியைச் சுக்கல்நூறாக்கிவிடுகிறார் கவிஞர்.

"மாவ் மாவ்"

கிரெம்ளின் நகரில் எலிகள் பெருத்துவிட்டடதே, காரணம் என்ன என்று வெளிநாட்டுத் தூதுவர் கேட்டார்.

இங்கிருந்த பூனைகள் அனைத்தையும் கொன்றுவிட்டோம்; அதனால்தான் என்றார் ஒரு ரஷ்யர்.

பூனையை ஏன் கொன்றீர்கள் என்றார் வெளிநாட்டுத் தூதுவர்.

பூனைகள் 'மாவ் மாவ்' என்று சத்தம் போட்டு மாசே துங்கை நினைவுபடுத்தினதால்தான் என்றார் அந்த ரஷ்யர்.

விழிப்புற்ற ஏழை கிளம்பிவிடுகிறான் கொடுமையாளரின் கொட்டமழித்து, அனைவருக்கும் முழு வாழ்வு, புதுவாழ்வு சமைத்தளிக்கும் நோக்குடனே. அந்தச் சமயம், சர்வேஸ்வரனிடம் செல்வவான்கள் முறையிட்டுக்கொண்டால் அவர் என்னசொல்லுவார் என்பதுபற்றி, பெண்பாற்புலவர் மார்கரெட் விடிமீர் என்பவர் ஒருகவிதையில் விளக்கிக் காட்டியுள்ளார்.

காலமெலாம் அடங்கிக் கிடந்த ஏழைகள், கட்டுகளை உடைத்துக் கொண்டு எழுந்துவிட்டனர்; செல்வவான்களால் அந்தக் கோப வெள்ளத்தைத் தடுத்திட முடியவில்லை. ஆண்டவனை நோக்கி முறையிடுகிறார்கள் அழிவிலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி:

கீழேபோட்டு எமைக்
கூழாக்குவரே

குருடாக்குவரே எமது
கண்களை;

சிக்கிடின் அவர் கரம்,
காலின் கீழே

துவைத்துப் போடுவர்
எம்மை எல்லாம்,

மேட்டுக் குடியினர்
மேனியழகினர்

காத்துவந்திடும்
கனவான் தமையும்

நாட்டிலிருந்து
நசுக்கி ஒழிப்பரே!

வெறிகொண்டலைகிறார்
விழியிலாராய்!

பாய்ந்திடும் இடமெலாம்
பாழ்வெளியாகுமே

ஆட்சிக் கயிறதும்
அவர்கரம் சிக்கிடின்

உடைத்தெறிவரே
உயர்நிலை யாவையும்

அதனை அறிவர்!
இதனை அறிவரா?

பகீரதன் என்பான் ஆகாயக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படும் கற்பனைக் கதையைத் தமிழகத்துப் பாமரர்களும் அறிவர். ஆனால் சோழவேந்தன் திருமாவளவன் பன்னீராயிரம் சிங்களவர்களைக் கூலிகளாகக் கொண்டுவந்து காவிரிக்குக் கரை கட்டிய உண்மைச் செய்தியைப் பாமரரேயன்றி பண்டிதர்கள் பலரும் அறியமாட்டார்கள்.

இவ்விதமாகப் பீதிகொண்டு, குழம்பிப்போய், ஆண்டவனிடம் முறையிட்டுக்கொள்கிறார்கள் செல்வவான்கள்; இவ்வளவு காலமாகத் தம்மை இன்ப வாழ்வு வாழ்ந்திட வைத்த இறைவன், அந்த வாழ்வினை அழித்திட ஏழையர் கிளம்புவதை ஒப்பமாட்டார், காத்திட முன் வருவார் என்ற நம்பிக்கையுடன். ஆனால் ஆண்டவன் என்ன செய்தார் என்கிறார் கவிஞர்?

எனக்கென்ன அதனால்
எனக்கேட்டார்

இறைவன் ஆங்கே!

திடுக்கிட்டுப் போயிருப்பர் செல்வர்கள்.

எனக்கென்ன அதனால்? என்று இறைவன் கேட்டதன் பொருள் என்ன?

கொதித்தெழுந்து புரட்சி செய்திடும் ஏழையர், என்னை அல்ல அழிக்க வருவது, கொடுமை செய்திட்ட உம்மை! எனக்கு ஒரு தீங்கும் செய்திட அவர்கள் எண்ணுகிறார்கள் இல்லை; தீங்கு பல செய்த உம்மைத் தீர்த்துக்கட்ட வருகிறார்கள். அதனால் எனக்கோ, எனது நிலைமைக்கோ இம்மி அளவும் பாதகம் விளையப்போவதில்லை என்பதாகும்.

செல்வம் சேர்த்துச் சொகுசுடன் வாழ்ந்திடுவோர்மட்டுமா கடவுளை வழிபடுபவர்; பெறத்தக்கவற்றைப் பெறாதுபோயினும் பெம்மானைத் தொழுதிடுகின்றனர் ஏழையர். எனவே ஏழையரின் புரட்சி கடவுளுக்கு எதிராக அல்ல; கயவர்களுக்குஎதிராக என்ற கருத்தினைத் தரும்நோக்கம் கவிஞருக்கு. செல்வவான்களின் ஆதிக்கத்தைஎதிர்த்து போரிட்டால், கடவுள் கோபம் கொள்வார் என்றெண்ணிக் கிலி கொள்ளாதீர்கள்; செல்வவான்களே முறையிட்டால்கூடக் கடவுள், "எனக்கென்ன அதனால்?" என்றுதான் கூறிவிடுவார்; எனவே பயமற்று அக்ரமத்தை ஒழித்திடக் கிளம்புக என்று ஏழையரைக் கவிஞர் அழைததிருக்கிறார். எனக்கென்ன? என்று கேட்டுவிட்டுக் கடவுள் மேற்கொண்டு தமது கருத்தினை விளககாதிருந்தாரோ? கவிஞர் பேசச் செய்திருககிறார் கடவுளை.

நீர் அளித்த பாடந்தான்
அவர் நெஞ்சந்தனில் உளது

கெடுமதி பெற்றதவர்
உம்மிடம் இருந்தன்றோ!

இவையெலாம் உமது
படைப்புகள் அலவோ!

ஒளியும் எழிலும்
அருளினேன் முன்னம்
சகதியில் தள்ளினீர்
இவர்தமை நீவீர்;

வாளுடன் வில்லம்பு
வலிவளிக்கப் போதும்

என்றிருந்து வந்தீர்!
வந்தது இது!!

விதைத்ததை நீர்
அறுத்தெடுத்துச் செல்வீர்!

என்று கூறிவிட்டாராம் கடவுள்.

சர்வேஸ்வரனின் சம்மதம் பெற்றுச் செல்வவான்களாகியிருக்கிறோம், எனவே அந்த முறையை எதிர்ப்பது ஆகாது, தீது, கடவுளுக்கு அடுக்காது என்றெல்லாம் பேசிவந்த காலம், இத்தகைய புரட்சிக் கருத்தளித்தவர்களால் பொய்யாய், பழங் கதையாய், புகைந்தே போய்விட்டது.

சமதர்மத்தைத்தடுத்து நிறுத்திட இனி சாஸ்திரம் சம்பிரதாயம் சர்வேஸ்வரன் ஆணை என்றெல்லாம் பேசிப் பயன் இல்லை; சமதர்மம் எனும் நெறி சர்வேஸ்வரனால் ஒப்புக் கொள்ளப்படத் தக்கது என்று மார்க்கத்துறையினரேகூட இன்றுஎடுத்துரைக்கத் தயங்கமாட்டார்கள்.

சமதர்மக் கருத்து மலரவும் மணம் பரப்பிடவும் அரும்பாடுபட்ட கவிஞர்கள், அறிவாளர்கள், மேனாடுகளில், புரட்சிக் கருத்துக்களை இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே சுவையும் பயனும் மிகுந்திடு முறையில் எடுத்துக்கூறியுள்ளனர்.

சமதர்மக் கருத்தினை எவரும் மறுக்கொணாத வகையிலும் எவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையிலும் நமது நாட்களில் தமிழகத்தில் எடுத்தியம்பி வந்த பாவேந்தர் பாரதிதாசன் இன்று இல்லையே என்ற ஏக்கம் சமதர்ம நோக்குடையார்க்கெல்லாம் இருந்தே தீரும்.

அம்பாள் கடாட்சம்



[வித்து: ஓ. என்ரியின் சிறு கதை]

இடம்:- ஒரு பெரிய வீட்டு முன்புறக் கூடம்.

இருப்போர்:- வக்கீல் கணபதி சுப்ரமணியம். குமாஸ்தா கோபால்.

நிலைமை:- சட்ட புத்தகங்கள் அடுக்கிவைக்கப் பட்டுள்ள பீரோக்கள் போடப்பட்டுள் ளன. பல நாற்காலிகள், இரண்டு பென்ச்சுகள் உள்ளன.

மெத்தை போட்ட சுழல் நாற்காலி மீது, வக்கீல் கணபதி சுப்ரமணியம் உட் கார்ந்துகொண்டு ஏதோ ஒரு புத்த கத்தை உன்னிப்பாகப் படித்துக்கொண் டிருக்கிருர்.

எதிரே உள்ள மேஜைமீது, புத்தகங்களும் காகிதக் கட்டுகளும், சிறிய கடிகாரமும் இருக்கின்றன.

கூடத்தின் அமைப்பு உட்புறம் போக ஒரு வழியும், இருபுறங்களிலும் மூன்று அறைகளுக்குச் செல்லும் வழிகளும் கொண்டதாக இருக்கிறது.

வக்கீல் கணபதி சுப்ரமணியம் ஐம்பது வய தானவர். செல்வம் உள்ளவர் என் பதைக் காட்டும் முக பளபளப்பும், அதைவிட அதிக பளபளப்புள்ள வைரக் கடுககனும், மோதிரங்களும் உள்ளன.

குமாஸ்தா கோபால், பீரோக்களில் உள்ள சட்ட புததகங்கள் சிலவற்றை எடுத்து, புரட்டிப்பார்ப்பதும், மறுபடியும் வைப் பதும், வேறு ஒரு புத்தகததை எடுத்துப் பார்ப்பதுமாக இருககிருன்.

இதைக் கவனித்தபடி இருக்கும் வக்கீல், கனைத்துக்கொண்டே பேச ஆரமபிக் கிருர்.

கணபதி:- என்னத்தைடா, அவ்வளவு நேரமாத் தேடித் தொலைக்கறே.....என்னமோ புல்பென்ச்சு கேசுக் குப் பாயினட் தேடறமாதிரியா, ஒவ்வொரு சட்ட புத்தகத்தையும், புரடடிக்கொண்டே இருக்கறியே.

கோபால்:- புல்பென்ச்சு கேசுக்கு பாயிண்ட் தேடனு மானு, கொடுத்து வைததிருக்கணுமே......இந்த இடத்திலே,......

கணபதி:-வரவர உனக்கு வாய்த்துடுக்கு அதிகமாகுது சொந்தக்காரனுக இருக்கறதாலே, பல்லைக் கடித் துக்கொண்டு இருக்கறேன், தெரியுதா. இந்த இடத்திலே.........என்று இழுக்கறியே, கேலியா. என்னடா அர்த்தம் அதுக்கு? புல்பென்ச்சு கேஸ், இந்த வக்கீலுக்கு வருமான்னு கேலி, அவ்வளவு திமிர்......

கோபால்:- ராமா! ராமா! நான் பேசி முடிக்கறதுக் குள்ளே, வீணை கற்பனை செய்துகொண்டு, எரிச்சல் காட்டறது தர்மமா, நியாயமா......இந்த இடத்திலே புல்பென்ச்சு கேசு வருமா என்று கேலியா பேசினேன்......இதே இடத்திலே வேலை பார்த்துக்கொண்டு இதே இடததைக் கேலி பேச, நான் என்ன முட்டாளா? நான் சொல்ல வந்தது, இந்த இடத்திலே, அதாவது இந்தப் புத்தகங் களிலே எதிலேயோ ஒன்றிலே, கவனப்பிசகா, கும்பாபிஷேக நோடிஸ் ஒன்றை வைததுவிட்டேன் அதைத் தேடிண்டிருக்கேன்......

கணவன்:- கும்பாபிஷேக நோடிசா......ஏன், போக ணுமா......

கோபால்:- ராமா! ராமா! எனக்குஏது அந்தப்பாக்கிய மெல்லாம். அன்னதானப்பட்டி அனுமார் கோயில் கும்பாபிஷேகத்துக்குன்னு சொல்லி, ஆறு ஆயிரம் வசூலித்த அயோததியாதாஸ், பேர்லே, பணம் வசூலித்துக் கொடுத்த பத்ராசலம், ஏன் இனனும் கும்பாபிஷேகம் நடத்தவல்லை என்று, நோடீஸ் கொடுத்தாரே, அந்த நோட்டீஸ் நீர் சொல்லித்தான் நான் எழுதினேன் அந்த நோடிஸ். அதைத்தான் தேடிக்கொண்டிருக்கறேன்.

கணபதி:- அடடே! அதுவா......நான் மறந்தே போயிட் டேன்......தேடு! தேடு!

கோபால்:- உங்களுக்குத்தான் இந்தமாதிரி கேசு களிடம் அன்போ, அக்கறையோ கிடையாதே. ஊரே பேசிக்கொள்ளுது....வக்கீல் கணபதி சுப்ர மணியத்துக்குப் புருஷன-பெண்ஜாதி தகராறு சம் பந்தமான கேஸ் என்ரு, சர்க்கரைப் பொங்கல் போல என்று.

கணபதி:-ஆமா......என்ன தப்பு? ஏண்டா! முட்டாளே! உலகததிலே, எது எதுவோ மாறலாம்-மாறிவிடும்

-ராஜா, மகாராஜா, இப்ப இல்லே! ஜெமீன், மிட்டா இப்ப இல்லே, கொடுக்கல் வாங்கல், முன்னே போல இல்லே, ஆனு, உலகம் ஆரம்பித்த நாள்லே இருந்து, அது அழிகிறவரைக்கும், நிரந்தரமா இருக்கப்போகிற விஷயம், புருஷன்-பெண்ஜாதி சம்பந்தப்பட்ட விஷயம். இந்த ஒரு விஷயம், தேசம், மதம், ஜாதி, குலம், ஏழை பணக்காரன், என்ற எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல், எல்லா இடத்திலேயும் இருக்கற விஷயம்......

கோபால்:- மோகனும்பாள் ஜீவனும்ச வழக்கிலே இதைப்பத்தி, அரைமணி நேரம் பேசினதை, நான்தானே உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தவன்.....ஜட்ஜு கூடத் தூங்கிவிட்டார்னு பேசிக்கொண்டா, கோர்ட்டிலே......

கணபதி:-மறுபடியும் கேலியா? என் ஆர்குமென்ட்டை ஜட்ஜு அலட்சியம் செய்தார்னு குத்திக் காட்டற பேச்சுதானே இது......

கோபால்:- அய்யய்யோ! என்னது இன்றைக்கு, எதுக்கு எடுத்தாலும், உமக்குக் கோபம் கோபமா உண்டாகுது......உம்மோட பேச்சு சுவாரஸ்யத்தைக் கேட்டு, ஜட்ஜு மெய்மறந்து போனுர்னு புகழ்ச்சிக்காகச் சொன்னேன்......

[உட்புறக் கதவைத் திறந்துகொண்டு, வக்கீலின் மனைவி வருகிருர்கள், காப்பிக் கோப்பையுடன், வக்கீல் உடை மாற்றிக் கொள்கிருர்.]

மனைவி:- காப்பிகூட சாப்பிடாமே என்ன வேலையோ! வக்கீல்களெல்லாம் கோர்ட்டிலே இருக்கா, நீர் இன்னமும் சட்டம்படிச்சிண்டு இருக்கீர் வீட்டிலே...

கணபதி:- (காப்பியைச் சாப்பிட்டபடி) நல்லா காப்பி போடவும் தெரிந்துவிட்டா, இதுக்குமேல அல்லவா பேசுவே. அடிஅசடு! மத்த வக்கீல் கோர்ட்டிலே போய் சம்பாதிக்கிறதைப் போல நாலு மடங்கு பணம், நான் இங்கே இருந்தபடியே சம்பாதிக்கறவன்—தெரியுதா! தெரியல்லேன்னு உன்காதிலே இருக்கற வைரத்தோடு இருக்கே அதைக்கேட்டுத் தெரிந்துக்கோ...

மனைவி:- ஆமாமாம்... என்ன கேசு வர்ரது உம்மிடம். ஜீவனும்சம், விவாகவிடுதலே, மூக்கைக் கடிச்சான் காதைக் கடிச்சான் என்ற இப்படிப்பட்ட கேசுகள்...

கோபால்:- அம்மா! அப்படிப்பட்ட கேசுகளே நம்ம ஐயா, ரொம்பச் சாமர்த்தியமா நடத்தருருன்னு, ஊரேகொண்டாடுது...

கணவன்:- அவளுக்கு என்னடா தெரியும், மடையா! அவ அப்பா, என்னவேலை பார்த்தார், தெரியுமா... ஆமவடை ஆராவமுதுன்னுபேர், பிரமாதம். பெரிய ஓட்டல்—நடத்தினுர்...

மனைவி:- அது ஒண்ணும் கேவலமில்லேன்னேன் —தப்பும் இல்லே... எங்க அப்பா ஒண்ணும், பனை ஓலைக்கட்டை தூக்கிக்கிட்டு, ராகுதோஷம், சனி கிரகம், அஷ்டமத்திலேசனி, ஒன்பதாம் இடத்திலே குருன்னு ஓயாமே புளுகு பேசிண்டு, அதுக்கு ஜோசியம்னு வேறுபேர் சொல்லிண்டு ஊரை ஏமாத்தலேன்னேன்...

கோபால்:- போங்கம்மா! ஒரேஅடியாக் கேலிசெய்றீங்க. ஐயோவோட அப்பா, அரித்துவாரத்திலே நடந்த அகில இந்திய ஜோதிட மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவராமே...

மனைவி:- என்ன தெரியறது அதிலே இருந்து-பைத்யக்காரா, எல்லா இடத்திலேயும் இருக்கரு என்பது தான்.

கோபால்:- பொருத்தம் பார்த்துச் சொல்றதிலே, ஐயாவோட அப்பா, ரொம்பக் கெட்டிக்காரராமே...

மனைவி:-நீதான் மெச்சிக்கொள்ளணும். பொருத்தம் பார்ப்பதிலே புலியாமா, இவர், அப்பா...

கணபதி:- பொருத்தம் பார்க்கத் தெரியாதடி அவருக்கு. ஒப்புக்கொள்றேன். பொருத்தம் பார்க்கத் தெரிந்திருந்தா, உன்னைக் கொண்டுவந்திருப்பாரா,



எனக்கு மனைவியா...ஒரு பொருத்தம் சரியா இருக்கா... உம்! பெயர்லேயே இல்லையே பொருத்தம். எனக்குப் பெயர், கணபதி சுப்பிரமணியம்...உன் பெயர்? பார்வதி! எங்கேடி இருக்கு பொருத்தம்?...

பார்வதி:- போதும் விளையாட்டு விடுங்க...ஆமா, நானும் நாலு நாளா கேட்கறனே, அசைந்து கொடுத்தாத்தான் என்னவாம். கூடம் முழுவதும், ஆபீசா இருக்குது. இந்தமூன்று அறைகளும் எதுக்கு. அதிலே ஒரு அறையைக் காலி செய்து கொடுக்கப்படாதா, கோபு மூக்காலே அழறானே, தனக்கு வேணும்னு...

கணபதி:- முடியாது! முடியாது! முடியாது! மூணு அறையும் வேணும், ஆபீசுக்கு. நான் என்ன முட்டாளா? தேவையில்லாமலா 3 அறையும் ஆபீசா உபயோகப்படுத்தறேன்...

பார்வதி:- என்ன தேவையோ... என்ன ஆபீசோ...

கணவன்:- உன்னுடைய மரமண்டைக்கும் புரியற மாதிரியாச் சொல்றேன், கேள்...

[கோபால் வெளியே போகிறான்]

இங்கே பலதினுசான கட்சிக்காரன் வருவானேல்லோ, ஒருவனிடம் முக்கியமான விஷயம் பேசிக்கொண்டு இருக்கறபோது இன்னொருவன் வந்துடுவான், இவனோட பேசறது அவனுக்குத் தெரியலாமோ, கூடாது. உடனே வந்தவனை, ஐயா! அதோ அந்த அறையிலே போய் உட்காருங்கன்னு சொல்லணும்.

பார்வதி:- ஏன்? அவனும் கூடத்திலே இருந்தா என்ன?

கணபதி:- (சலித்துக்கொண்டு) கொஞ்சம் புத்தி வேணும்டி அதைத் தெரிந்துகொள்ள. நான் உனக்கு, துணிமணி, நகைநட்டு, தோட்டம் வீடு இதெல்லாம், வாங்கித்தரலாம் — முடியும் — புத்தியை நான் எந்தக் கடையிலே இருந்து வாங்கிக்கொண்டுவந்து உனக்குத் தரமுடியும...

பார்வதி:- (கோபமாக) போதும், உம்மோட கேலியும் கிண்டலும். எனக்கு உள்ள புத்தி எனக்குப் போதும், நான் ஒண்ணும் புத்தியை வியாபாரம் செய்யற தொழிலிலே இல்லே.

கணபதி:- கோபம் வேண்டாம்டி, பொறுமையா, சொல்றதைக் கேளு. எல்லாரும் ஒரே இடத்திலே இருந்தா என்னன்னு கேட்கறியே, கேட்கலாமா? கொடுத்த கடனை, சீக்கிரமாத் திருப்பிப்பெற வழி என்னன்னு கேட்க வந்திருப்பான் ஒருவன். நான் அவனுக்கு, அதற்கு என்னவழின்னு சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கற நேரமாப்பார்த்து, வாங்கின கடனைத் திருப்பித் தராமலிருக்க என்ன வழின்னு கேட்க இன்னொருவன் வர்றான்னு வைத்துக்கொள்ளு, அவனையும், வைத்துக் கொண்டு, பேசமுடியுமா...

பார்வதி:- அந்த இழவெல்லாம் எனக்குப் புரியாது. மூணு அறையும் உமக்கே வேணும். சரி, கட்டிண்டு ஆட்சிநடத்தும். நான் கடைத்தெரு போயிட்டுவர்றேன்.

[பார்வதி வெளியே போகிறாள். வக்கீல் மறுபடியும் கோட்டு போட்டுக் கொள்கிறார்.

ஒரு விநாடிக்கெல்லாம் ஆடம்பரமான உடையுடன் ஒருவர் வருகிறார்.

கைத்தடியை, மேஜைமீது வைத்தபடி, ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்காருகிறார்.

வக்கீல் வந்தவரை முறைத்துப் பார்க்கிறார்.

வந்தவரோ, அதை ஒரு துளியும் சட்டை செய்யாமல், கால்மேல் கால்போட்டு உட்கார்ந்துகொண்டு, பேசத்தொடங்குகிறார்]

வந்தவர்:- வக்கீல் கணபதிசுப்ரமணியம் என்பது நீர் தானய்யா...

கணபதி:- (வந்தவரின் குரலின் கடுமை கண்டு) கேள்வியா! குற்றச்சாட்டா! என்ன இது...

வந்தவர்:- சந்தேகமே இல்லே, வக்கீலேதான். விவாக விடுதலே வழக்கிலே நிபுணராமே, வாஸ்தவமா?

கணபதி:- விவாக விடுதலே வழக்குகளும் நடத்துவது உண்டு...

வந்தவர்:- கெட்டிக்காரராமே, கேள்விப்பட்டேன்...

கணபதி:- வழக்கு விபரம் கூறும், ஐயா,

வந்தவர்:- எப்படி எடுத்த எடுப்பிலேயே வழக்கு விவரம் கூறமுடியும்? வழக்கை நடத்தக்கூடியவர் தானு என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டாமா? சரி. இப்படி ஒருநிலேமை ஏற்பட்டால் என்னசெய்வது என்பதற்கு ஒரு யோசனே சொல்லும். அதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும் உம்மாலே வழக்கை வெற்றிகரமாக நடத்தமுடியுமா, முடியாதா என்பதை...

கணபதி:- (கோபத்தை அடக்கிக்கொண்டு) என்ன இது! பரீட்சை நடத்துகிறீரா... உம்!

வந்தவர்:- இந்தக் கண்டிப்பான குரல் சாட்சிகளேக் குறுக்கு விசாரணே செய்யும்போது தேவை — கட்சிக்காரரிடம் பேசும்போது அல்ல. சரி. விஷயத்தைக் கேளும். ஒரு புருஷன் — மனேவி. கலியாணம் ஆகி வருஷம் பத்து ஆகிறது. இப்போது குடும்பத்திலே ஒரு கொந்தளிப்பு.

கணபதி:- புருஷன் — மனேவிக்கு தகராறு — சண்டை — சச்சரவு...

வந்தவர்:- ஆமாம்! அவளுக்கு அவனேடு வாழ்க்கை நடத்தமுடியவில்லே.

கணபதி:- காரணம் என்ன சொல்லுகிருளோ?

வந்தவர்:- அந்தப் பெண் சொல்வானேன்! நானே சொல்கிறேன். அவள் அழகி. கணவனுக்கு அவள் அழகை ரசிக்கத் தெரியவில்லே; நேரமில்லே; விருப்பம் வரவில்லே. அவள், தன் அழகை அதிகப்படுத்த, அலங்காரங்கள் செய்துகொள்வதிலும், ஓய்வாக, ஒயிலாகஇருப்பதிலும் காலங்கழிக்கிருள். கணவனே, வீடு தங்கக்கூட நேரமின்றி, சதா அலேகிருன், திரிகிருன், பணம் தேடுகிருன், குவிக்கிருன், அதே வேலேயிலே மூழ்கிக்கிடக்கிருன். அவள், நல்ல அறிவாளி; கணவன், அறுபது ரூபா சம்பளம் கொடுத்தால், அறிவாளிகள் டஜன் கணக்கிலே வேலேசெய்ய வருவார்கள் என்ற எண்ணம் கொண்டவன். அவள் சதா படித்துக் கொண்டிருப்பாள் — கவிதைகள், காவியங்கள், கதைகள். கணவனுக்கு, கையேடு, பேரேடு, குறிப்பேடு, இவைதான், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி...

கணபதி:- புரிகிறது, புரிகிறது. கணவனுடைய சுபாவம் மனேவியின் சுபாவத்துக்கு நேர்மாருனது.

வந்தவர்:- ஆமாம், வாழ்க்கையிலே சுவை இல்லே என்பவள் அவள். அவன் எல்லாச் சுவையும், செக்குப் புத்தகத்திலே அடக்கம் என்ற கருத்துக் கொண்டவன். இப்படிப்பட்ட குடும்பத்தில், வேறு ஒருவன் வந்து நுழைகிருன்......

கணபதி:- சொந்தக்காரனே ?

வந்தவர்:- சொந்தக்காரனுக இருந்தால், நுழைகிருன் என்று சொல்லுவேனு? யாரோ ஒருவன். கமிஷன் ஏஜண்டு. வியாபார வேலேயாக வந்தவன். வியாபாரத்திலே, அவன் நாட்டம் கொள்ளவில்லே. அவனுக்கு, அழகை ரசிக்கத் தெரியும்; அலங்

காரத்தைப் பாராட்டத் தெரியும், மகிழ்ச்சி பெறத் தெரியும், தரவும் தெரியும் ...... அவன் இவளை வசீகரிக்கிறான். அவள் சொக்கிப் போகிறாள். அவனோடு காதல் வாழ்க்கை நடத்தத் துடிக்கிறாள். அவன் நம்மாலே குடும்பத்துக்குக் கேவலம் வரக் கூடாது என்ற நல்ல எண்ணத்தாலே, அந்த ஊரைவிட்டே ஓடி விடுகிறான்....

கணபதி:- விவகாரம் முடிந்து விட்டதே...

வந்தவர்:- விவகாரமே இப்போது தானய்யா ஆரம்பமாகிறது. அவன் ஓடி விட்டதும் இவளும் ஓடி விட்டாள், அவனைத் தேடிக்கொண்டு.

கணபதி:- ஓஹோ! அப்படியா விஷயம். சரி! சரி!

வந்தவர்:- அவள் மணமானவள். ஓடிவிட்டாள்! கணவன் இருக்கிறான் கல்லுப்பிள்ளையார் போல. அவளோ, காதலனைத் தேடிக்கொண்டு ஓடி விட்டாள். காதலனைத் திருமணம் செய்து கொண்டு, இன்பமாக வாழ எண்ணுகிறாள்.

கணபதி:- அதனாலே......

வந்தவர்:- விவாக விடுதலை கிடைத்து விட்டால், அவளுக்குப் புதுவாழ்வு, இன்பவாழ்வு கிடைக்கும்.

கணபதி:- கிடைக்கும்......

வந்தவர்:- விவாக விடுதலைக்கு ஏற்பாடு செய்ய முடியுமா......?

கணபதி:- பொருந்தாத் திருமணம்— சுபாவம் ஒட்டிவரவில்லை—வாழ்க்கையிலே நிம்மதி இல்லை— பொருத்தம் இல்லை—இந்தக்காரணங்களைக் காட்டி, விவாக விடுதலைக்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் விவாக விடுதலை கிடைத்ததும், அவளை அந்தக் காதலன், கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பானா?

வந்தவர்:- நிச்சயமாக.

கணபதி:- நல்லவனா?

வந்தவர்:- காதலன் ஐயா அவன்! நல்லவன் என்று அவள் நம்பாவிட்டால், காதலித்து இருப்பாளா?

கணபதி:- அவளை வைத்துக் காப்பாற்றக்கூடிய வசதி உள்ளவனா?

வந்தவர்:- காதலர்களாக குடிசையில் வாழ்வது, காதலற்று மாளிகையிலே வாழ்வதைக் காட்டிலும் மேலானது இன்பமானது......

கணபதி:- உமக்கு, அந்தக் காதலனை நன்றாகத் தெரியுமா?

வந்தவர்:- அந்தக் காதலன், நானேதான் ஐயா! என் பெயர் கமிஷன் ஏஜண்ட் கந்தப்பன். அவள் பெயர் அம்பாள்; லோகாம்பாள் என்பது முழுப் பெயர். அவள் கணவன் பெயர், சூரி...சூரியப் பிரகாசம் என்பது முழுப் பெயர்.

கணபதி:- கெட்டிக்காரராய்யாநீர். நீர்தானா, காதலன்! பலே! பலே! என்னையே இந்தப்பாடு படுத்தி விட்டீரே, அந்தப் பெண்ணை மயக்கி விட்டதிலே என்ன ஆச்சரியம் இருக்க முடியும்......

வந்தவர்:- மயக்கி விட்டேன் என்று கோர்ட்டிலே சொல்லித் தொலைக்காதீர், ஐயா! கேஸ் கெட்டு விடும்......

கணபதி:- சொல்லுவேனா அப்படி. குடும்ப வாழ்க்கையில் பொருத்தம் இல்லை......

வந்தவர்:- அவளுக்கு ஏற்றவன் அல்ல, அந்தக் கணவன்......சூரி......அந்த வாதத்தைத்தான், அடித்துப்பேச வேண்டும்......

[ஆபீஸ் பையன் உள்ளே வருகிறான்]

பையன்:- சார்! ஒரு அம்மா உங்களைப் பார்க்க......

கணபதி:- (பரபரப்பு அடைந்து) சரி. மிஸ்டர். கந்தப்பன் ஜெமீன்தாரணியாகத்தான் இருக்கும். ஒரு உயில் விவகாரம். ஐந்தே நிமிடத்தில் முடித்துவிட்டு பிறகு மறுபடியும் நாம் பேசுவோம். அதுவரையில் அதோ அந்த அறையில் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.

[ஒரு அறைக்குள் போகச் சொல்லி கதவை மூடித்தாளிட்டுக் கொண்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து, பையனை அனுப்புகிறார், அழைத்துக் கொண்டு வரச் சொல்லி ஜாடைகாட்டி.

உள்ளே அழகான ஆனால் அலுப்புமேலிட்ட நிலையில் ஒரு மாது வருகிறாள். அலங்காரம் அதிகம் இல்லை.

எதிரே இருக்கும் நாற்காலியைக் காட்டுகிறார் வக்கீல்; புன்சிரிப்புடன்; அவள் உட்காருகிறாள்.]

அவள்:- வக்கீல், தாங்கள் தானே?

கணபதி:- நானே தான்......

அவள்:- குடும்பத்திலே ஏற்படும் கொந்தளிப்புகளைப் போக்கி, சாந்தியும் சந்தோஷமும் ஏற்படுத்தும் சத்காரியத்திலே ஈடுபட்டுள்ள உத்தமர் என்று ஊரே தங்களைப் புகழ்கிறது. தோன்றிற் புகழொடு தோன்றுக! என்றார் வள்ளுவர். வள்ளுவருடைய குறளைப்பற்றி என்ன எண்ணுகிறீர்?

கணபதி:- அம்மா, இது ஒரு வக்கீல் வீடு......தமிழ் வகுப்பு அறை அல்ல......நான் வழக்குகளைக் கவனிப்பவன், வள்ளுவர் வாக்குகளை அல்ல.

அவள்:- சேற்றிலே செந்தாமரை இருந்தால், அதை என்ன செய்யவேண்டும்?

கணபதி:- செந்தாமரையைச் சேற்றிலே இருந்து எடுத்து......

அவள்:- செந்தாமரையின் அழகை உணரக்கூடியவருக்கு அளித்துவிடவேண்டும், அல்லவா?

கணபதி:- ஆமாம்......ஆனால் செந்தாமரைக்கு யார் சொந்தக்காரரோ, அவருடைய உரிமையையும் கவனித்தாக வேண்டும்......

அவள்:- சேற்றிலே செந்தாமரை இருப்பதாலே, சேறு, எனக்குத்தான் செந்தாமரை சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறது. நான்தான் அந்தச் செந்தாமரை-என் கணவராக உள்ளவர், சேறு. ஆமாம்! எப்போதும் பணம், பணம், பணம், இதே பஜனை, ஆமாம்' பணத்தைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்? பணம், பாசமா? பயமா? பாபமா?

கணபதி:- அம்மா! இதுபற்றி எல்லாம் ஓய்வாகப் பேச எனக்கு நேரம் இல்லை......

அவள்:- என் கணவரும் இதேதான் சொல்லுகிருர். நீலக் கலர் சேலே கட்டிக்கொண்டால், நான் அழ காக இருக்கிறேனு, பச்சை கலர் அழகாக இருக் கிறதா என்று அவரைக் கேட்கவேண்டும் என்று நான் துடித்தபடி இருப்பேன். கண்ணுடி எதிரே நின்று பார்த்துக் கொள்வேன். அவர் வந்ததும் ஓடோடிப்போய், அவர் எதிரே நின்று, புன்னகை காட்டி அன்புடன் கேட்பேன், இந்தச் சேலே அழ காக இருக்கிறதா என்று. இதா எனக்குவேலே. இதற்கா எனக்கு நேரம் இருக்கிறது! என்று சொல்லி எரிந்து விழுவார். பெண்களுடைய மனம் அனிச்ச மலருக்குச் சமம் என்று புலவர்கள் கூறுகிருர்கள். கம்பனேயும் காளிதாசனேயும் படித்தவர்கள் அறிவார்கள், பெண்ணின் பெருமையை. கம்பனுடைய சீதைக்கும் காளிதாசனுடைய சகுந்தலேக்கும் என்ன வித்தியாசம், தெரியுமல்லவா தங்களுககு......

கணபதி:- அம்மா! என்னுடைய பொறுமையை ரொம்பவும் சோதிக்கிறீர்கள். வந்தவிஷயத்தைச் சொல்லுங்கள்,

அவள்:- காவிய ரசனே உமக்கும் இல்லே. சீதையைப்பற்றிச் சொல்லுவதற்கு முன்பு கம்பர் நாட்டு வர்ணனே, நகர் வர்ணனே, சோலேவர்ணனே, சாலே வர்ணனே, வீதி வர்ணனே, மாளிகை வர்ணனே இவைகளே எல்லாம் அழகாகச் சொல்லுகிருர்.

கணபதி:- அவருக்கு முடிந்ததம்மா. அவருக்கு ஓய்வு இருந்தது, அவருக்கு அந்த வேலேதான் இருந்தது நான் வக்கீலம்மா, வக்கீல். காவியம் எழுதுபவன் அல்ல; இந்த நோட்டீஸ் கண்ட பத்து நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தாவிட்டால் சொத்து ஜப்திசெய்யப்படும்—இது நான் எழுதும் கவிதை. என்னிடம் கம்பன்]காளிதாசன் பற்றிப் பேசி என்ன பயன்?

அவள்:- அதேபோலத்தான் அவரும்; என்னேத் தன் மனேவி என்று கூறிக்கொள்கிருரே அவர்...உல கம் போகிற போக்கு, உள்ளத்திலே தோன்றும் எழுச்சி, இயற்கையின் அழகு, எதைப்பற்றியும் கவலேப்படமாட்டார். அந்தத் தோட்டத்தை எப்போது வாங்கலாம், இந்த வீட்டை எப்போது விற்கலாம், அந்தக் கடையை எப்போது திறக்கலாம் இந்தக் கடையை எப்போது மூடலாம்...என்ற இதுமாதிரி விஷயம்தான் அவருககுக் கற்கண்டு, பாகுதேன், பால், பழரசம். தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்ருகக்கூட்டி, சர்க்கரையும் கற்கண்டின் தூளும் பெய்து...வள்ளலார் பாடியது...சுவை எப்படி...?

கணபதி:- முக்கனியும் கற்கண்டும் சுவையாகத்தான் இருக்கும்...விஷயத்துக்கு வாருங்கள்...

அவள்:- அதிக இனிப்பு சாப்பிட்டால், டையாபிடிஸ் வருமாமே, உண்மையாகவா?

கணபதி:- டாக்டர்கள் அப்படித்தான் சொல்கிருர்கள்.

அவள்:- மனதுக்கு ஒரு துளிகூட மகிழ்ச்சி இல்லாமல், குமுறிக் குமுறிக் கிடந்தால், டி. பி. வருமாமே...

கணபதி:- ஆமாமம்மா, ஆமாம்! கோபம் அதிகமானல், பிளட்பிரஷர் வரும்; இப்போது, நான் அந்த நிலேக்குத்தான் துரத்தப்படுகிறேன்......

அவள்:- என்னேத் துரத்தியேவிட்டார், என் கணவர்!



கணபதி:- அப்பா! முதல் வரி! ரொம்ப நன்றியம்மா, ரொம்ப நன்றி. உன்னே உன் கணவர் வீட்டை விட்டுத் துரத்திவிட்டாரா......

அவள்:- போ! இந்த வீட்டைவிட்டு! என்று அவர் கூற வில்லே, ஆனல் அவருடைய பார்வை அதைத் தான் சொல்லிற்று. உனக்கும் எனக்கும் ஒத்து வராது என்று அவருடைய உதடுசொல்லவில்லே, ஆனல் அவருடைய உருட்டல் மிரட்டல், உறுமல் இருமல், இதைத்தான் சொல்லிற்று. அவராக வாய்திறந்து என்னே வீட்டைவிட்டுப் போகச் சொல்லவில்லே. நானுகத்தான் ஓடிவந்து விட்டேன்......

கணபதி:- இது, எதிர்பாராததிருப்பம். காவிய நடையை நீக்கிவிட்டு; சட்ட நடையின்படி பரிசீலித்தால், நடந்திருப்பது இது—நீங்கள் உங்களுடைய கணவரை விட்டுவிட்டு ஓடிவந்துவிட்டீர்கள்...

அவள்:- மலரைத்தேடி தென்றல் செல்வதுபோல, தென்றலைத்தேடி மங்கை செல்வதுபோல, மங்கையைத்தேடி மணாளன் செல்வதுபோல,

கணபதி:- நீங்களும் வேறு ஒருவரைத்தேடி...

அவள்:- என் மனதுக்கு உகந்தவர்—காதலர். அவரோடு வாழ்க்கை நடத்தினால்தான், என் ஆவியே நிலைக்கும். அதுவே நான் தேடும் இன்பம். காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என்று புலவர் சொன்னார்......

கணபதி:- புலவர்கள், எவ்வளவோ பெரிய விஷயங்களை சுருக்கமாக, இரண்டு இரண்டு வரிகளிலே சொன்னார்களம்மா-குறள், குறள் என்று சொல்லுகிறார்களே தவிற, ஒவ்வொரு பதத்தையும் ஒரு பாரதமாக்கிப் பேசுகிறீர். உம்! வழக்கு இது. குடும்ப வாழ்க்கை ஒத்துவரவில்லை. விவாக விடுதலை வேண்டும்...

அவள்:- சுவை இல்லாத முறையில் சொல்லுகிறீர், சரி. விவாக விடுதலை வேண்டும்...

கணபதி:- விவாக விடுதலை கிடைத்தால், காதலனைத் திருமணம் செய்துகொண்டு, புது வாழ்க்கை நடத்தமுடியும்...

அவள்:- புது வாழ்க்கையா, வாழ்க்கையே, அப்போது தான் ஆரம்பமாகும்......

கணபதி:- அந்தக் காதலர், தன் சம்மதத்தைச்சொல்லி விட்டாரா? திருமணம் செய்துகொள்வதுபற்றிப் பேசினீர்களா?

அவள்:- கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில......

கணபதி:- நீங்களும் இப்படி நீட்டி முழக்கிப் பேசிக் கொண்டே போனால், ஒரு பயனும இல்லை. உங்களுக்கு வேண்டியது விவாக விடுதலை. பெயர்?

அவள்:- அம்பாள்.

கணபதி:- (திடுக்கிடுகிறார். மறைத்துக்கொள்கிறார்) அம்பாள்! சரி, அவர் பெயர்?

அவள்:- எந்த அவர்?

கணபதி:- ஓஹோ! உங்களுக்கு இரண்டு 'அவர்' இருக்கிறார்கள் அல்லவா? ஒவ்வொன்றாகச் சொல்லலாம். முதலில், புருஷன் பெயர்...

அவள்:- அவர் பெயரா? சூரி. சூரியப்பிரகாசம்...

கணபதி:- அந்த இன்னொரு அவர் இருக்கிறாரே, உமது காதலர், அவர் பெயர்?

அவள்:- கந்தப்பன்.

கணபதி:- உம்மாலே இனிமேல் சூரியோடு வாழ்க்கை நடதத முடியாது.

அவள்:- ஆமாம்! விவாக விடுதலை பெற்றுத்தரவேண்டும். என் காதல் மாளிகையில் விளக்கேற்றிவைக்கவேண்டும்......

[ஆபீஸ் பையன் வருகிறான்]

பையன்:- ஒரு ஐயா உங்களை அவசரமாகப் பார்க்கணுமாம்......

கணபதி:- மிட்டாதாரராக இருக்கும். ஐந்து நிமிஷத்தில், அவரை அனுப்பிவிட்டு, உங்கள் விஷயத்தைப் பார்க்கிறேன்...அதுவரையில் இதோ இந்த அறையில் உட்கார்ந்துகொண்டிருங்கள்.

[வக்கீல் அந்த மாதை, வேறு ஒரு அறைக்குள் அனுப்பிவிட்டு, கதவை மூடிக்கொண்டு வந்து உட்காருகிறார்.

அடக்கமானவர் போன்ற தோற்றமுள்ள ஒருவர் வருகிறார்—வணக்கம் கூறுகிறார் உட்காருகிறார்.]

கணபதி:- என்னைப் பார்க்க...

வந்தவர்:- உங்களைத்தான் மலைபோல நம்பி வந்திருக்கிறேன். வாழ்க்கைப் படகு, புயலால் மோதப்பட்டு, சுக்குநூறாவதைத் தடுக்க, ஒரு வழிகாட்ட வேண்டும் ஐயா! குடும்பம் என்பது பெரிய பொறுப்பு. குடும்பம் என்று இருந்தால், எத்தனையோ கோபதாபம், சண்டை சச்சரவு ஏற்படும் ....

கணபதி:- சகஜந்தானே இது. முற்றுந்துறந்த முனிபுங்கவர்களே, கோபதாபத்தாலே, சண்டைபோட்டுக் கொண்டார்களாமே...சச்சரவு நம்முடைய குடும்பங்களில் ஏற்படுவதிலே, ஆச்சரியப்பட என்ன இருக்கிறது......

வந்தவர்:- வக்கீலய்யா! இதுவெறும் வார்த்தை அல்ல, உபதேசம். உயர்வான தத்துவம். குடும்பம் உடையக்கூடாது — உடையவிடுவது கேவலம், பாபம், சமூககேடு.

கணபதி:- பொதுத் தத்துவம் பேச இனிமையாக இருக்கும், நேரம் இருக்காது, என்போன்றவர்களுக்கு ....

வந்தவர்:- பொதுவான உண்மை தாங்கள் சொல்வது. ஆனால், நான் வந்திருக்கும் விஷயம், உங்களு



டைய பொது உபதேசத் திறமையாலேதான் வெற்றி பெறவேண்டும்......

கணபதி:- கோர்ட்டிலே வாதாடவேண்டிய வழக்கு அல்லவா?

வந்தவர்:- கோர்ட்டிலே வாதாடினால், எவ்வளவு பணம் தரப்படுமோ அந்தப் பணத்தைத் தருகிறேன்—கோர்ட்டுக்குப் போகாமல், புத்திமதி சொல்லி, நல்ல உபதேசம் செய்து, குடும்பம் உடையக் கூடாது என்பதை எடுத்துச்சொல்லி, கணவனிடம் கோபம்கொண்டு, விவாக விடுதலை வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, வீட்டை விட்டு வந்துவிட்ட ஒரு வனிதாமணியை, திருத்தி, அவளுடைய கணவனுடனேயே, எப்போதும் போல, கௌரவமாகக் குடும்பம் நடத்தி வரும்படிச் செய்யவேண்டும்.

கணபதி:- எனக்கும், கோர்ட்டுக்குப் போவதைக்காட்டிலும், ஒருவருக்கொருவர் கலந்து பேசி, சமரசம் ஏற்படுத்தி வைப்பதிலேதான் திருப்தி, மகிழ்ச்சி, வெற்றி......இனி விவரம் சொல்லுங்கள்.

வந்தவர்:- அம்பாள் என்று ஒருபெண்-நல்லவள்...... தப்பு நடவடிக்கை எதுவும் கிடையாது...நிறையப் படிப்பாள்......படித்ததிலே உள்ள உண்மைகளை அப்படியே உணரும் சக்தி குறைவு.....அதனாலே மனதிலே குழப்பமான எண்ணங்கள். அம்பாளின் புருஷன் மீதுதான், தவறு முழுவதும். அந்தப் பெண்ணுடைய இளமைக்கு ஏற்றபடி, இனிமையாகப் பேசி மகிழச்சி தருவதில்லை. சதா பணம், பணம், பணம்! என்று தேடி அலைகிறான். பெயர் சூரி. அந்தப் பெண்ணுடைய மனம் வெகு பாடு படத்தான் செய்யும் அந்தச் சமயத்திலே, அங்கு வந்த கமிஷன் ஏஜண்டு கந்தப்பனிடம், மயக்கம் இவளுக்கு. அவன் பாவம், மூணு குழந்தைக்குத் தகப்பன்-தாரம் இழந்தவன். கமிஷன் ஏஜண்டு என்பதால், எல்லோரிடமும் நயமாக, சுவையாகப் பேசுவான். தொழில் பழக்கம். இந்தப் பெண் அவனைத் தேடிக்கொண்டு, வீட்டைவிட்டு ஓடி வந்துவிட்டாள். குடும்பத்துக்கு அவமானம் ஏற்படும் என்று சொன்னால், நான் விவாக விடுதலை செய்துகொள்ளப் போகிறேன் என்று பிடிவாதம் பேசுகிறாள். கணவனோ, கலங்குகிறான், கதறுகிறான், ஊர்ப்பழிக்கு அஞ்சி நடுநடுங்குகிறான். இனி அம்பாளுடைய விருப்பம்போல நடந்து கொள்வேன் — ஒருவிதமான மனக்குறையும் வராதபடி பார்த்துக்கொள்வேன் ஒரு வார்த்தை கூடக் கடிந்து பேசமாட்டேன். ஊர்கள் சுற்றிப் பார்க்கலாம், உல்லாசமாக உலவலாம், நாட்டியக் கச்சேரி பார்க்கலாம், நாகரிக வாழ்க்கை வாழலாம், என்று, சத்தியம் செய்கிறான். திருந்திவிட்டான். அம்பாளுடன், குடும்ப வாழ்க்கை நடத்துவதிலேதான் பெருமை, இனிமை இருக்கமுடியும் என்று உணர்ந்துவிட்டான். இலட்சஇலட்சமாகப் பணத்தைத் தேடுவதைவிட, மனைவியின் புன்னகையைப் பெறுவதிலேதான், உண்மையான, நிலையான, நிரந்தரமான சுவை இருக்கமுடியும் என்பதை உணர்ந்துவிட்டான். வக்கீலய்யா! வீணான விசாரப்பட்டு, வேறு வழியிலே செல்லக் கிளம்பிவிட்ட, அம்பாளிடம், இதனை இன்னும் விளவாக, விளக்கமாக, உருக்கமாக எடுத்துச்சொல்லி, விவாக விடுதலை வேண்டாம் என்று அவளே கூறும்படிச் செய்து, அந்தக் குடும்பத்தை, ஒன்றாக ஆக்கிவைக்க வேண்டும். புண்ணிய காரியம். உங்களுடைய சாமர்த்தியம்பற்றி ஊரேபேசுகிறது. இந்த உதவிக்காக, ஓராயிரம் ரூபாய் தரவும் நான் சம்மதிக்கிறேன். எப்படியாவது புருஷன்-மனைவியைச் சமாதானப்படுத்திவைக்கவேண்டும்.

கணபதி:- உத்தமமான எண்ணம். ஓராயிரம் தருகிறீர்?

வந்தவர்:- ஆமாம்.........ஒரு குடும்பம் உடைபட்டுப் போகாதிருக்க, ஒரு ஆயிரம் என்ன, ஒன்பது ஆயிரம்கூடத் தரலாம். ஊரிலே இன்று உள்ள மதிப்பு, மரியாதை, கடைவீதியிலே இப்போது உள்ள கௌரவம், அந்தஸ்த்து எல்லாம், மண்ணாகிப் போய்விடுமே, மனைவி விவாகவிடுதலை செய்துகொண்டாள் என்றால்...

கணபதி:- அதை உணருகிறானா அந்தக் கணவன்?

வந்தவர்:- உணர்ந்துதான், உம்மிடம் வந்திருக்கிறேன். நான்தானய்யா, அந்தக் கணவன். சூரியப் பிரகாசம் என்கிற சூரி. அம்பாளுடன் காலமெல்லாம் குடும்பம் நடத்தவேண்டும் என்ற ஒரே ஆசையால், தாக்கப்பட்டு உம்முடைய தயவை நாடிவந்திருக்கிறேன்.

கணபதி:- அம்பாளிடம் பேசி விவாக விடுதலை யோசனையைக் கைவிட்டுவிடும்படிச் செய்யவேண்டும்...

வந்தவர்:- ஆமாம்... ஆயிரம் ரூபாய்...

கணபதி:- சரி! ஒரு ஐந்துநிமிடம், அதோ அந்த அறையிலேபோய் ஓய்வு எடுத்துக்கொள்ளும், ஒரு முக்கியமான ஆலோசனை செய்துவிட்டு பிறகு அழைக்கிறேன்.

[சூரியை அழைத்துக்கொண்டு போய் வேறோர் அறையில் இருக்கச்சொல்லி விட்டு, கதவை மூடிக்கொண்டு வருகிறார். ஒருவிநாடி உட்கார்ந்து யோசிக்கிறார்.

மாறிமாறி, மூன்றுஅறைகளையும் பார்க்கிறார். கந்தப்பன இருந்த அறைக் கதவைத் திறந்து வெளியே அழைத்து வந்து] உட்காரச் சொல்லிவிட்டுப் பேசுகிறார்.,

கணபதி:- மிஸ்டர் கந்தப்பன்! அம்பாள் விவாக விடுதலை செய்துகொள்ளவேண்டும — அப்போதுதான், அவளை நீர் திருமணம் செய்துகொண்டு நிம்மதியாக வாழமுடியும். விவாக விடுதலை வாங்கித் தருகிறேன். இரண்டாயிரம் ரூபாய் தரவேண்டும். சம்மதமா?

கந்தப்பன்:- இரண்டு ஆயிரமா!

கணபதி:- என்னய்யா, வாயைப் பிளக்கிறீர், விவாக விடுதலை என்றால சாமானயமா?

கந்தப்பன்:- நானூறு ஐநூறுக்குமேல் செலவிட முடியாதே......

கணபதி:- உம்மிடம் 400 வாங்கிக்சொண்டு, ஒரு குடும்பததைக் கெடுக்கச் சொல்கிறீரா? உமக்கென்னய்யா! நீரோ கமிஷன் ஏஜண்ட். கொள்ளை கொள்ளையாக, இரண்டு இடத்திலும் பணம் தட்டுவீர். 2-ஆயிரம் முடியுமா, முடியாதா? அம்பாள் நல்ல அழகுதானே! இளமைதானே! அவள்மீது

உமக்கு அடக்கமுடியாத காதல்தானே! காத்லியை அடைய இரண்டாயிரம் ரூபா செலவு செய்வதா பிரமாதம், சீக்கிரம் சொல்லிவிடும். இரண்டாயிரம்—விவாகவிடுதலை......

கந்தப்பன்:- முடியவே முடியாது. நான் ஐநூறு ரூபா செலவிலேயே வேறே வக்கீல் பார்த்துக்கொள்கிறேன்.

கணபதி:- இவ்வளவுதானு, உமக்கு உள்ள காதலின் இலட்சணம். இரண்டாயிரம் ரூபாகூட பொருந்தா அந்தக் காதல்!

கந்தப்பன்:- காதலிப்பது அம்பாளை! அதற்கு இரண்டாயிரம் பணம் உமக்கா? அவளே கேட்டதில்லை... சரி, வேறு இடம் பார்க்கிறேன்.

(கந்தப்பன் போகப் புறப்படுகிருர். வக்கீல் தடுத்து நிறுத்தி மறுபடியும் அவரை அதே அறையில் கொண்டுபோய் விட்டு விட்டு, கதவைச் சாத்திக்கொள்கிருர். சூரி இருக்கும் அறைக்கதவைத்திறந்து, அவரை அழைத்துவந்து, உட்காரச் சொல்லிப் பேசுகிருர்.)

கணபதி:- விவாக விடுதலை என்பது ஒரு குடும்பத்துக்குக் கேவலம், சந்தேகமில்லை. கூடி வாழ்ந்தால் கோடி இலாபம் என்பது பெரியவர்கள் பேச்சு. உம்முடைய விருப்பப்படி, என்னுடைய முழுச் சாமர்த்தியததையும் காட்டி, அம்பாளைப் பழைய படி உம்மோடு, குடும்பம் நடத்தச்சொல்லுகிறேன். இரண்டு ஆயிரம் தர வேண்டும்......

அவர்:- ஆயிரம் கொடுக்கிறேன். புண்ய காரியம்......

கணபதி:- உமக்கென்னய்யா! பெரிய வியாபாரி! பணம், பணம, பணம என்று தேடுவதே என் வேலை என்று நீரே சொல்லி இருக்கிறீர். ஒரு குடும்பம், கலையாமல் இருக்க 2 ஆயிர ரூபாய செலவிடக்கூடாதா? உமக்கு அந்தத் தொகை ஒரு பிரமாதமா! அம்பாள் இல்லாமல் வாழ்க்கையே நடத்த முடியாது என்று மனம் உருகிப் பேசுகிறீர், 2 ஆயிரம் என்ருல், மயக்க மடிததுக் கீழே விழுகிறீரே......

அவர்:- என்னிடம் அவ்வளவு பணம் இல்லை; இப்போது.

(பையிலிருந்து நோட்டுக்கட்டுகளை எடுத்து மேஜை மீது வைத்து)

இப்போது, இதோ ஆயிரம்; அம்பாள் வீடு வந்த பிறகு, குடும்பத்திலே குதூகலம ஏற்பட்ட பிறகு, எப்படியும் மற்ற ஒரு ஆயிரத்தையும கொடுதது விடுகிறேன்......

கணபதி:- (மகிழ்ச்சியுடன்) நானே வந்து வாங்கிக் கொள்கிறேன். பயம் வேண்டாம். ஜெயம் நிச்சயம். புத்திமதியைச் சொல்ல வேண்டிய முறைப்படி சொன்னால், கேட்கக்கூடிய பெண் தான் அம்பாள். அதிலும் இப்போது நீர் இருக்கும் உருக்கமான நிலையை நேரிலேயே பார்த்தால், அந்தப் பெண்ணின் மனம் பாகாக உருகிப் போகும்.

[நோட்டுக் கட்டுகளை மேஜை அறைக்குள் தள்ளியபடி]

நீரே, பார்க்கத்தானே போகிறீர், என் சாமார்த்தியத்தை. அம்பாளிடம் நான் பேசும்போது, என் பேச்சு மட்டுமல்ல, உமது பார்வை, பெருமூச்சு, கண்கசிவு எல்லாம், வேலை செய்து வெற்றிதேடிக் கொடுக்கும் அம்பாள் இங்கேதான் இருக்கிருள்...அதோ அந்த அறையில்......

வந்தவர்:- (பதறி) என்ன! என்ன! அம்பாள் இந்த அறையிலா? என்னய்யா ஆபத்துஇது. சனியன் இங்கேயே வந்துவிட்டதா. தொலைந்தது பீடை என்று எண்ணிக்கொண்டேன்... இங்கேயா......

(அறைக்கதவு திறக்கப்படவே அம்பாள் வந்து நிற்கிருள், தலைகுனிந்தபடி)

(வந்தவர், வெளியே ஓட முயலுகிருர். வக்கீல் தடுத்து நிறுத்தி, கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய், அம்பாள் எதிரில் நிறுத்தி)

கணபதி:- பாரம்மா! அம்பாள்! யார் பார்த்தாயா...?

அம்பாள்:- (மிக்க மகிழ்ச்சியுடன்) மிக்க நன்றி ஐயா! என் காதல் கைகூட உதவிசெய்த உம்மை நான் என் கண்கண்ட தெய்வமாகப் போற்றுகிறேன்...

கணபதி:- கணவனே கண்கண்ட தெய்வம்!

அம்பாள்:- மனம்போல மாங்கல்யம்.

(வந்தவர் வக்கீலிடமிருந்து ஓட முயல்கிருர்)

கணபதி:- என்னய்யா வெட்கம். இவ்வளவு நேரம், உருகினீர் — அம்பாள் இல்லாமல் நான் வாழ முடியாது. அவள்போட்ட கோட்டைத் தாண்டவே மாட்டேன். எப்படியாவது எங்களை ஒன்றுசேர்த்து வைக்கவேண்டும் என்றெல்லாம்...

அம்பாள்:- கேட்கக் கேட்க பிரம்மானந்தமாக இருக்கிறது. இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே என்ற பாரதி பாடலின் முழுப்பொருள் இப்போது தான் எனக்குத் தெரிகிறது.

கணபதி:- அம்பா! சும்மா அல்ல! ஆயிரம் ரூபாய் கொடுத்தார், சூரி...

அம்பாள்: (திடுக்கிட்டு) சூரியா... என் கணவரா...

கணபதி:- ஆமாம், கேட்டுப்பாரேன்! சொல்லுமய்யா, சூரியப்பிரகாசம், சொல்லுமே, இதிலென்ன வெட்கம்...

அம்பாள்:- யார், சூரியப்பிரகாசம்?

கணபதி:- ஏன், நிற்கிருரே, தெரியவில்லையா, சாட்சாத் சூரியப்பிரகாசம் — உன் கணவர்...

அம்பாள்:- (மேலும் திடுக்கிட்டு) என்னய்யா, சொல்கிறீர். இவரையா என் கணவர், சூரி, என்கிறீர். இவர் கந்தப்பன் — என் காதலர்...

கணபதி:- (திடுக்கிட்டு) என்ன அம்பா! மனப்பிராந்தியா உனக்கு? நான்தான் சூரியப்பிரகாசம் — என்

மனைவி அம்பா விவாக விடுதலை செய்துகொள்ள முயலுகிறாள். எப்படியாவது புத்திமதி சொல்லி, பழையபடி கணவனுடன் வாழச் செய்யவேண்டும் என்றுசொல்லி, ஆயிரம் ரூபாய் கொடுத்து...

அம்பாள்:- விவாக விடுதலை கூடாது என்பதற்கா, இவர் பணம்கொடுத்தார். என் கணவர் சூரியோடு நான் சமரசமாகி குடும்பம் நடத்தவா சொன்னார்! என் கணவர் சூரி நான்தான் என்று உம்மிடம் பேசி, ஏமாற்றினார். ஐயா! இது அநியாயம்! இது அடுக்காது! இவர் என் காதலர்... இல்லை! இல்லை! இவர் கமிஷன் ஏஜண்ட் கந்தப்பன்......என் கணவர் அல்ல, சூரி அல்ல...

கணபதி:- எனக்குத் தலை சுற்றுகிறதம்மா. கமிஷன் ஏஜண்ட் கந்தப்பன் இவர் என்று சொல்லுகிறாய். அப்படியானால்,

[மற்றோர் அறைக்கதவைத் திறந்து உள்ளே இருந்தவரை இழுத்துக் கொண்டுவந்து காட்டி]

இது யார்?

(இருவருமே திடுக்கிட்டுப் போகிறார்கள்.)

கணபதி: (கோபமாக) நான்தான், கமிஷன் ஏஜண்ட் கந்தப்பன், அம்பாளின் காதலன், சூரி அம்பாளுக்கு ஏற்ற கணவன் அல்ல எப்படியாவது அம்பாளுக்கு விவாக விடுதலை வாங்கிக்கொடும், நானூறு ரூபாய் கொடுக்கிறேன் என்று என்னிடம், பேரம் பேசிய இவர், யார்?

அம்பாள்:- அவர்தான், சூரி—என் கணவர்.

கணபதி:- (மேஜையைப் பிடித்துக்கொண்டு) மயக்கமே வருகிறது. உன் கணவன் காதலனாக நடிக்கிறான். காதலன், கணவனாக நடிக்கிறான். கணவன், விவாக விடுதலை வாங்க வேலைசெய்கிறான். காதலனோ, கணவனையும் மனைவியையும் ஒன்று சேர்த்து வைக்கச் சொல்கிறான்.......ஏ! பெண்ணே! புத்தி கெட்ட பெண்ணே! புரிகிறதா, உன் நிலைமை. தொட்டுத் தாலி கட்டியவன், நீ தொலைந்தால் போதும், என்று எண்ணுகிறான். தொட்டுக்கொண்டு வந்தவனோ, விட்டுவிட்டு ஓடிவிடப் பார்க்கிறான். இருவருமே உன்னை விரும்பவில்லை. தெரிகிறதா, புரிகிறதா? எதை எதையோ படித்தேன் என்கிறாய்—இது புரிகிறதா...புரிகிறதா...

[அம்பாள் மயக்கமாகிக் கீழே விழுகிறாள் வக்கீல், அலறுகிறார்.

பார்வதி, ஒரு பெரியவருடன் உள்ளே வருகிறாள்]

பார்வதி:- உம்மைத் தேடிக்கொண்டு வந்திருக்கார்; யார் இந்தப் பொண்ணு? என்ன உடம்புக்கு? இவா யாரு?

[வந்த் பெரியவர் பதறி ஓடி அம்பாளை எடுத்து முகத்தைத் துடைத்து விசிறியபடி]

பெரியவர்:- என் குழந்தைம்மா... என்னமோ போறாத வேளை, கொஞ்சம் புத்தி மாறாட்டமாயிட்டுது இரண்டுநாளா... டாக்டரிடம் காட்டணும்னு சொன்னேன்... அது வக்கீல் வீட்டிலே வேலை இருக்குதுன்னு ஓடியாந்துது...... இவர்தான் என் என் மருமகப்பிள்ளை.

[மயக்கம் தெளிந்து அம்பாள் எழுந்திருக்கிறாள்]

கணபதி:- போய்யா நல்ல டாக்டரிடம் காட்டு.

அம்பாள்:- தெளிந்துவிட்டது வக்கீல் சார், மயக்கம், குழப்பம் எல்லாம் தெளிந்து விட்டது......

[பெரியவரும் அம்பாளும் வெளியே செல்கிறார்கள். சூரியும் கந்தப்பனும் தயக்கத்துடன் செல்கிறார்கள்.]

பார்:- ஒரே தர்பாரா இருக்கே, இங்கே. ஏன் அந்தப் பெண்ணு இங்கே வந்தா? போக வேண்டிய இடம் டாக்டர் வீடு......வந்த இடமோ வக்கீல் வீடு...... உமக்கு இதுபோல அக்கப்போர் கேசுதானே வர்ரது......

இடம்:- தனி அறை.
இருப்போர்:- வக்கீல், மனைவி.

கணபதி:-(பார்வதிகன்னத்தில் செல்லமாகத் தட்டியபடி நோட்டுக் கட்டுகளை எடுத்து போட்டபடி) அக்கப்போர் கேசாடி இது! அசடு! அசடு! இந்த அக்கப்போர் கேசுக்கு ஐயாவுக்கு, பீஸ், எவ்வளவு தெரியுமோ...ஆயிரம்....ஆமா...... ஆயிர ரூபா......

பார்வதி:-உமக்கு அதிர்ஷ்டம்! ஆயிரமா... சரி, சரி, அதோடு, என்னிடமுள்ள இரண்டு நூறையும்போட்டு வைர திருகுபில்லை வாங்கி வைச்சிண்டு, அடுத்த வெள்ளிக்கிழமை, அம்பாளுக்கு அர்ச்சனைசெய்துவிட்டு வர்ரேன், நல்ல கேசா, பெரிய கேசா, என் புருஷனுக்கு வரவேணும்; அம்பாளோட கடாட்சம் வேணும்னு. கொடும் அந்த ஆயிரத்தை......

[நோட்டுக் கட்டுகளை எடுத்து, கண்களில் ஒத்திக்கொள்கிருள்.]

சித்தர் நவலோக கல்பம்

[REGD]

இது ஆஸ்துமா, ஆனைக்கால், வெண்குஷ்டம், குழிப்புண், ரணம்பெருத்த சரீரம் சிறுக்க மற்றும் பல வியாதிகளையும் தீர்க்க உதவுகிறது இந்த சித்தர் நவலோக கல்பம்.

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது. நாங்கள் சித்த சாஸ்திரப்படி பஸ்பம் செந்தூரம் சுண்ணம் மெழுகு கட்டுவகை எண்ணை, தைலம், லேகியம், சூரணம் முதலியன தயாரிக்கிறோம். ஆகவே தாங்கள் ஒருமுறை எங்கள் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யுங்கள்.

கிளை வைத்தியசாலை:-G. S. T. ரோடு 39-வது மைல் பாலாற்றங்கரை, மாமண்டூர் வடபாதி, செங்கற்பட்டு ஜில்லா.

மேற்கண்ட கிளை வைத்தியசாலையில்:
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளிலும்
சென்னையில்: ஞாயிறு, செவ்வாய்,வியாழக்கிழமைகளிலும்
நாமே வியாதியஸ்தர்களை கவனிக்கிறோம்.

சித்த வைத்தியர்
சாது வீ. நாராயணசாமி பிள்ளை

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

[REGD.]

5, ஜெனரல் சாமிநாய்க்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

போன் நெ. 84786

நெஞ்சுக்குள் நெஞ்சான அஞ்சுகம்!

உன் அத்தானின் அருவிநிகர் அன்பு உரித்தாகுக! எங்கோ இருந்து இதை எழுதுகிறேன் நான். கடலும் மலையும் நம் உடலைப் பிரித்திருக்கலாம். காலமும் கடமையும் வேலொத்த உன் விழிகளை என்னிடமிருந்து கொஞ்ச நாட்கள்தானே பிரித்துவைக்கமுடியும்?

உயிரே! ஓடோடி வருகிறேன். உலகத்தில் எந்தக் காதலரும் எட்டிப் பிடிக்காத இன்பச் சிகரத்தின் முகட்டிலேறி உலாவருவோம்.

அஞ்சுகம்! அருகில் நீ இல்லையென்று யார் கூறமுடியும்? எடுத்துப் படிக்கும் நூலின் ஒவ்வொரு எழுத்திலும் நீதானே எழில் குலுங்க நடைபோடுகிறாய்! இதயமென்ற தடாகத்திலே நீந்தி வரும் அன்னமாக நீதானே இருக்கிறாய்!

பாரிஸ்டர் படிப்புக்காக நான் விமானமேறுகிறேன் என்று கூறியபோது நிலவு காணாத அல்லியைப்போல உன் முகம் கூம்பிவிட்டதை நான் நித்தம் நித்தம் நினைத்துப் பார்க்கிறேன்.

"அத்தான்! காலைபுலர்ந்தால் கதிரவன் வருவான். கன்னஞ்சிவந்த தாமரை வாய்விட்டுச் சிரிப்பாள்; ஆனால் நீங்கள் வரும்வரை எனக்கு இந்த உலகம் இருட்குகையாகவே இருக்கும். அறிவியல் அடிப்படையில் பேசுகிறேன், அத்தான்! நீங்கள் சிகாகோ பல்கலைக் கழகத்திற்குப் போகிறீர்கள். கோளத்தின் ஒரு பக்கத்தில் உள்ள அமெரிக்காவில் கதிரவன் காய்கின்ற நேரத்தில் மறுபக்கத்தில் உள்ள ஆசிய நாடுகள் இருட்டாகத்தானே உள்ளன. நீங்கள்தான் என் வாழ்வின் கதிரவன். நீங்கள் மறுகோளத்தில் இருக்கும் வரை என் நெஞ்ச இருள் அகலுமா? ஆகவே சட்ட மேதையாக விரைந்து திரும்பி வாருங்கள்" என்று நீ பேசிய பேச்சின் நுணுக்கத்தை எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்.

அஞ்சுகம்! உன் அத்தான் ஊர் புகழும் பாரிஸ்டராகத் திரும்பி வரப்போகிறான். தேர்வெல்லாம் மிக நன்றாக எழுதியிருக்கிறேன். முடிவு தெரிந்ததும், பட்டமளிப்பு விழாவையும் முடித்துக் கொண்டு பறந்தோடிவருவேன்.

என் பால் நிலவே! மகிழ்ச்சி வானத்தில் இன்பச் சிட்டுகளாக என்றென்றும் துள்ளி வருவோம். நான் சென்ற திங்கள் லாஸ் ஏன்ஜல்ஸ் பகுதிக்குப்போயிருந்தேன். இயற்கையழகிலே செயற்கையழகையும் கூட்டி எழில் நகரமாக உருவாக்கியிருக்கிறார்கள். வையகத்திலே உள்ள வாழ்வின்பங்களையெல்லாம் சுவைத்துவிட வேண்டுமென்று விரும்புகின்ற அமெரிக்கரின் களியாட்ட நிகழ்ச்சிகளை நண்பர்களுடன் சென்று பார்த்தேன்.

ஊஞ்சல் மனம்

வேழ வேந்தன்

ஆனால் அஞ்சுகம்! சேலத்து மாங்கனிக்கு இருக்கும் தீஞ்சுவை பனிப் பகுதியிலே பழுக்கும் பன்னீர்க் கனிக்கு இருக்க முடியுமா? மென்மையும் நாணமும் கனிவும் கற்பும் நிறைந்த கன்னல் தமிழ் மங்கையுடன் நடத்தும் பொன்னான இல்லற வாழ்க்கைக்கு எது ஈடாகும் என்ற நினைப்புதான் எனக்கு ஏற்பட்டது! நயாகரா நீர்வீழ்ச்சி மிகப் பெரும் தோற்றத்தையும் ஓசையையும் நல்கலாம். ஆனால் குற்றால அருவியிலே குளிப்பதுபோன்ற பூரிப்பை அங்கே பெற முடியுமா?

அஞ்சுகம்! உன் அண்ணன் கண்ணப்பன் தலைசிறந்த மருத்துவ மேதையாக உருவாகி வருகிறான். இரண்டாண்டுகளுக்குமுன் நான் கொஞ்சம் உடல்நலமற்று இருந்தபோது, அவன்தானே மற்ற மருத்துவ மேதைகளுடனிருந்து என்னைக் கவனித்துக்கொண்டான்.

தங்கைமகன் டாக்டராகவும் தன் மகன் பாரிஸ்டராகவும் தரணி போற்றும் முறையில் அமெரிக்காவிலிருந்து திரும்பிவரவேண்டுமென்று கனவு கண்டாரல்லவா என் தந்தை! அது நினைவாகப்போகிறது, அஞ்சுகம்! விரைவில் இருவரும் வந்து சேருவோம். வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் வண்ணமயிலே! மழைமேகம் கொண்டுவரும் பருவக்காற்று அடிக்கத் தொடங்கிவிட்டது. வேறென்ன கூறப்போகிறேன்? மற்றவை பின்னர்.

உன் விழியனைய அத்தான்,
அழகப்பன்.

நெட்டுருவாகும்வரை அத்தானின் மடலைப் படித்து முடித்த நான் நெஞ்சோடு நெஞ்சாக அதை அணைத்துக்கொண்டேன்.

அல்லாவுதீன் கதையில் வரும் மாயக்கம்பளம் வேண்டாம்; விஞ்ஞானிகள் கூறும் ஒரு பறக்கும் தட்டாவது எதிரே வந்து நிற்கக் கூடாதா? நான் சிகாகோவுக்குப் பறந்துவிடமாட்டேனா?

என்றுமில்லாத மகிழ்வால் என் உள்ளம் துள்ளிற்று. அந்த மடலோடு வந்த என் அண்ணன் எழுதிய கடிதத்தைப் பிரிப்பதற்கே நான் மறந்துவிட்டேன். உறைமேலிருந்த அத்தானின் கையெழுத்து என்னைக் காந்தமாக ஈர்த்துவிட்டது. அண்ணன் என்ன உபதேசம் எழுதியிருக்கிறார் என்ற எண்ணத்தோடு கடிதத்தைப் பிரித்தேன்.

பாசத்துக்குரிய தங்கை அஞ்சுகத்திற்கு,

என் தூய அன்பு உரித்தாகுக. உன்னையும் மாமா வேலப்பரையும் பிரிந்துவந்து ஆண்டுகள் சில நடந்துவிட்டன. உயரிய இலட்சியத்திற்காக உற்றாரையும் உறவினரையும் பிரிந்து வந்திருக்கிறோம் என்ற ஒப்பற்ற சக்திதான் என்னையும் அழகப்பனையும் இங்கே நிலைக்க வைத்திருக்கின்றது.

அப்பப்பா! நம் மாமா நம்மீது காட்டும் பேரன்பை எந்தச் சொற்களால் போற்ற முடியும்? தாயையும் தந்தையையும் இளமையிலேயே இழந்த நம்மை அவர்தானே சென்னைக் கழைத்துப்போய் ஆளாக்கிவிட்டார். பெற்ற மகனுடன் தங்கை பெற்ற மைந்தனை என்னையும் அமெரிக்கக் கண்டத்திற்கு அனுப்பிப் படிக்கவைக்க வேண்டும் என்று முன்வந்த அவருடைய பண்புள்ளத்தை நான் நினைத்து நினைத்து மகிழ்வதுண்டு. அதுவும் நாகரிகத்தின் உச்சிக்கே சென்றுவிட்டதாகக் கூறும் அமெரிக்கரின் வாழ்க்கை முறைகளைக் கவனிக்கிறேன். பெற்ற பிள்ளைகளைத் தங்கிப் படிக்கும் விடுதிகளில் சேர்த்துவிட்டு, பலர் தம் போக்கில் தொழில் நடத்தி வருவதும், பிறகு வயதுவந்த அப்பிள்ளைகள் தனி வாழ்க்கை அமைத்துக்கொள்வதும் இங்கே உள்ள காட்சிகளாக உள்ளன. ஆனால் முட்டையிலிருந்து குஞ்சு வருவதற்குள், தாய்ப் பறவைகள் இறந்து விட்டதால், கூட்டிலிருந்து நம்மைக் கொண்டு சென்று, சிறகு முளைத்துப் பறக்கும்வரை, பாதுகாத்தது மட்டுமல்ல, பறந்து செல்லும் அழகைக் கண்டு மகிழவேண்டுமென்று எண்ணும் நம் மாமாவின் நல்லுள்ளத்தை நினைந்து உருகாமல் இருக்க முடியுமா?

ஆனால்......?

அன்புக்குரிய அஞ்சுகம்! உனக்கு அந்த எண்ணம் இருக்குமோ, இருக்காதோ, ஆனால் நம் மாமாவுக்கு அந்த ஆசை உள்ளத்திலே இருப்பதாக எனக்கு ஓரிரு முறை பட்டது. ஆம் அஞ்சுகம்! மகளைப்போல் குழந்தையிலே இருந்து வளர்த்த உன்னை, மாமா மருமகளாக்கிக் கொள்ளவும் விரும்புவதாகத் தெரிகிறது. நீ அவருக்கு மகளாக இருக்கவேண்டுமே தவிர, வேறு எதற்கும் நான் ஒப்பமாட்டேன்! உலகமறியாத உனக்கு வேறு ஒன்றும் இப்போது நான் கூறத் தயாராக இல்லை. உன் நெஞ்சின் ஏதேனும் ஒரு பகுதியில் அழகப்பன் இருந்தால் அந்த உருவை முழுக்க முழுக்க அழித்துவிடு. மாளிகைச் சுவரின்மேல் அழகுக்கு வைத்த செடி, சுவருக்குள் வேரோடி, அதையே பிளக்க முனைந்தால் வீட்டுக்காரன் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? இவ்வளவுதான் நான் இப்போது கூறமுடியும். மற்றவை பின்னர்.

உன் அன்புள்ள அண்ணன்
கண்ணப்பன்.

மிதக்கும் மாதாகோயில்!

உலகிலேயே வெளிநாட்டுக் கப்பல்கள் அதிகம் வந்துபோகும் ஹாம்பர்க் துறைமுகத்தில் திடீரென மாதா கோயில்களில் எழும்பும் ஆலயமணி ஓசை கேட்கிறது. துறைமுகத்திற்கு வரும் புதியவர் மணி ஓசை எங்கிருந்து வருகிறது என்று புரியாமல் சுற்றும் முற்றும் பார்க்கிறார்கள். துறைமுகத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களும், அதிகாரிகளும், துறைமுகத்தில் தங்கி இருக்கும் வெளிநாட்டுக் கப்பல்களில் அலுவலர்களும் பிரயாணிகளும் ஒரு கப்பலை நோக்கி விரைந்து செல்கிறார்கள். சிறிது நேரத்தில் அக்கப்பல் நிரம்பி வழிகிறது. பயபக்தியுடன் மண்டியிட்டுத் தலைகவிழ்ந்து கூடியிருக்கும் கூட்டத்தினரிடையே பாதிரியார் ஒருவர் பைபிள் ஓதுகிறார். சிறிது நேரத்தில் வழிபாடு முடிகிறது. அனைவரும் கலைந்து அவரவர் கப்பல்களுக்குச் செல்கின்றனர்.

இந்த மிதக்கும் மாதாகோயில் 1952-ஆம் ஆண்டு முதல் இத்துறைமுகத்தில் இயங்கி வருகிறது. டீகன் டோல்ப் ஜீயரிங் என்ற பாதிரியார் இந்தக்கப்பல்கோயிலை நிர்வகித்துவருகிறார். இக்கப்பலின் எடை 600 டன்.

இக்கப்பல் மாதா கோயில் வழிபாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்கிறார்கள் எந்த நாட்டினருக்கும் இங்கு வரத் தடை ஏதும் கிடையாது. மேற்கு ஜெர்மனி நதிப் போக்குவரத்து வழிகளில் செல்லும் கிழக்கு ஜெர்மனியர்கள்கூட இக்கப்பலுக்கு வந்து வழிபாடு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மற்றும் ஏராளமான டச்சுக்காரர்களும், செக் நாட்டினரும் பெல்ஜியம் தேசத்தவர்களும் இக்கோயிலுக்கு அடிக்கடி குடும்பத்துடன் வருகிறார்கள்.

ஊஞ்சலாட வேண்டுமென்று எட்டிப்பிடித்த கொடியே பாம்பாக இருக்குமானுல், எப்படித் துடிப்பேனே அப்படித் துடித்தேன் நான். ஆயிரமாயிரம் குளவிகள் இதயத்தை மொய்த்துக்கொண்டு கொட்டுவதுபோல இருந்தது எனக்கு!

என்ன செய்வேன்? எப்படித் தாங்குவேன்? அன்பு வயலிலே காதற் செடியின் உறவுவேர் இவ்வளவு ஆழம்போன பிறகு, அண்ணனிடமிருந்தே ஒரு பூகம்பம் உருவாகி அதை உருத்தெரியாமல் அறுத்தெறிந்துவிடும் என்று நான் கனவிலும் எதிர்பார்த்திருக்க முடியுமா?

கதிரவன் கார்முகிலுக்கிடையே சிக்கி மறைந்திருக்கலாம்; ஆனுல் காதல் மலர் சூரியகாந்தியின் முகம் அவன் இருக்கும் திசையைத் தவிர வேறு திக்கில் திருப்புவதுண்டா? அப்படித்தானே நான் அத்தான் அழகப்பர் சென்ற திக்கையே, இலவுகாத்த கிளியைப்போல் பார்த்துக்கிடக்கிறேன்.

ஆனுல் என் கூடப்பிறந்த டாக்டர் அண்ணனே இப்படிப்பட்ட அதிர்ச்சி வைத்தியம் செய்வார் என்று நான் எதிர்பார்த்திருக்க முடியுமா?

முழு நிலவையே வானில் காணுமற் போனுல்தான் கவிஞன் சந்திர கிரகணத்தைப்பற்றி எண்ணிப் பார்ப்பான்; பழியென்ற ஒன்றையே அவருடன் இணைத்துப்பார்க்காத என் நெஞ்சமும், அழகப்பரிடம் ஏதேனும் ஒழுக்கக்கேட்டை என் அண்ணன் கண்டிருப்பாரோ என்று நினைக்கத் தொடங்கிற்று. சூழ்நிலையும் நண்பர்களும் துணைபுரிய, என் ஏழ்நிலைக் காதல் மாளிகையை இடித்துப் பாழாக்கிவிட்டாரோ என்று நடுங்கிற்று என் இதயம்! குற்ருலத்தைப்பற்றி எழுதிய அழகப்பர், ஒருவேளை, பகட்டான நயாகராவில் அடித்துச் செல்லப்பட்டாரோ என்று அஞ்சினேன். மைத்துனனுடன் சென்ற அழகப்பர் மைத்துனனுடன் மட்டுமே திரும்ப வேண்டும் என்று என் நெஞ்சுக்கே சொல்லிக்கொண்டேன். ஆணிவேரே அறுக்கப்பட்டால், கொடியின் இலையிலே குளுமையும் வளமையும் ஏது? என் முகம் வெளுத்துச் சுருங்கியது. நெஞ்சில் நடைேற, பாரம் ஏறியதே தவிர, உடலோ தக்கையாகிவிட்டது. நடைப்பிணமாகவே ஆகிவிட்டேன் நான்.

❋

மீனம்பாக்கத்தில் விமானம்வந்து இறங்கியது. அந்தச் சத்தத்தை விட என் நெஞ்சின் ஒலி வேகமாகக் கேட்டது. இறங்கிவரும் பயணிகளை என் விழிகள் கூர்ந்து கவனித்தன. என் அத்தான் என் அண்ணனுடன் மட்டுமே திரும்ப வேண்டும் என்று ஏங்கித் தவித்தேன்.

போன உயிர் திரும்பி வந்தது. புன்னகை தவழ இவரும் அண்ணனும் மட்டுமே இறங்கி வந்தார்கள். அன்னம் விழுங்கிய முத்துமாலையை மீண்டுமே அன்னமே வெளியே கொண்டுவந்து தந்தால், மகிழும் மங்கையைப்போல், நான் பூரித்துப் போனேன். நான் தவருகக் கற்பனை செய்து பயந்த சுவடுகள் ஒன்றையுமே அவரிடம் காணும்.

வீட்டுக்கு வந்ததும் இவரும் அண்ணனும் அமெரிக்க நாட்டைப் பற்றிய வரலாற்று விரிவுரையாளர்களாக மாறிவிட்டார்கள். மாணவர்கள் வேறு யாராக இருக்கமுடியும்? நானும் மாமாவும்தான்!

நாட்கள் மகிழ்ச்சியுடன் நடந்தன. அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து ஒரு வாரம்கூட ஆகியிருக்காது என் அண்ணனுக்கு இப்படி ஒரு அழைப்பு திடீர் என்று வரும் என்று நானும் எதிர்பார்க்கவே இல்லை. வடஇந்திய எல்லையில் மூண்ட சீனப்படையெடுப்பில் காயமுறும் படைவீரர்களுக்கு இரணச் சிகிச்சை செய்ய அமெரிக்காவிலிருந்து திரும்பிய என் அண்ணுதாணு அழைக்கப்பட வேண்டும்? மாமாவின் கண்கள்கூடக் கலங்கிவிட்டன. சுமைதாங்கியாக இருந்த என் சகோதரன் ஏதோ ஒரு சுமையை வாங்காமலே நெடுந்தொலைவு பயணம் போவது என் நெஞ்சைப்பிழிந்தெடுத்தது. ஆனுல் அண்ணனே கடமையாற்ற விமானத்திலே ஏறிவிட்டார்.

முள்வேலியிலே உலரப்போட்ட வேட்டியை, முள்ளை விலக்கி எடுத்து வருவதற்குள், கல்மழை பொழிந்தால் விட்டு விட்டு ஓடிவருவதில்லையா? அப்படித்தான் மிக முக்கியமான அந்த இரகசியத்தின் விளக்கத்தை நான் அண்ணனிடம் கேட்கவே முடியாமற் போய்விட்டது; அவரும் விளக்காமலே போகிருர்.

கவர்னர்

டாக்சி டிரைவராக மாறினுர்

'என் குடிப்பழக்கத்தால் நான் வீழ்ச்சியுற்றேன்' என்று முன்னுள் மேற்கு வர்ஜீனியா கவர்னராக இருந்து இப்பொழுது டாக்ஸி டிரைவராக வேலை செய்யும் 46-வயதான வில்லியம் கேஸி மார்லண்டு கூறினுர்.

'ஆனுல் கடந்த 4 ஆண்டுகளாக மதுபானம் எதையும் நான் தொடாததால் இப்பொழுது மீண்டும் மனிதனுகி வருகிறேன்' என்றும் அவர் சொன்னுர்.

1952-ம் ஆண்டில் மேற்கு வர்ஜீனியாவின் கவர்னராக மார்லண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். அது சமயம் கவர்னர்களில் அவரே மிகவும் இளைஞர். அவர் அமெரிக்க செனெட்டர் பதவிக்குப் போட்டியிட்டபோது தோல்வியுற்ருர்.

அவரை ஒரு பத்திரிகையாளர் அடையாளம் கண்டு கொண்டதும் அவருடைய மாறு வேடம் மறைந்தது.

கண்ணுடி அணிந்து டிரைவராக காட்சி தந்த அவர், தம்முடைய எஜமானரின் காரியாலத்தில் தம்முடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

1962ம் ஆண்டிலிருந்து டாக்ஸி டிரைவராக வேலை செம்யும் அவரைக் குறித்து அவருடைய எஜமானர் ஆர்தர் டிக்ஹோல்ஸ் பேசும்போது, 'மார்லண்டு மிகவும் நல்லதோர் டிரைவர் அவரை இழந்தால் நான் மிகவும் வருந்துவேன்' என்ருர்.

பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது மார்லண்டு தமது டாக்ஸி டிரைவர் உடையுடனேயே காட்சி தந்தார். அவர் கூறியது வருமாறு;-

இத்தகைய பத்திரிகை மாநாட்டில் கலந்து கொண்டு சில வருடங்களாகிவிட்டன. நான் கொஞ்ச காலம் சட்டத் தொழிலில் ஈடுபட்டேன். ஆனுல் மேற்கு வர்ஜீனியா மாகாணத்திலிருந்து வெளியேறி மேற்கு கென்டகி நிலக்கரி கம்பெனியில் வேலையேற்று சிகாகோவுக்கு வந்துவிட்டேன். இடமாறுதல் ஏற்பட்டால் நன்மை தருமென எண்ணியே அவ்விதம் செய்தேன். நன்மையே கிட்டியது.

பாச உணர்வுக்கும் காதல் உணர்வுக்கும் இடையே ஊசலாடிற்று என் உள்ளம்! அண்ணன் கடைசியாக எழுதிய கடிதத்தின் புதை பொருள் எதுவாக இருக்கலாம் என்று நட்ட நடு இரவிலேகூட விழித்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கினேன். சித்தம் கலங்கியதே தவிர, மடலின் தத்துவ விளக்கம் கிடைக்கவே இல்லை!

அத்தானோ கொத்துமலர் தாழையை மலரும்போது சூடுவதில்தான் மெத்தவும் மணமிருக்கிறது என்று எண்ணுகிறார். சற்றுப் பொறுங்கள் என்று கூறவும் எனக்கு ஏது தைரியம்?

திருமண நாள் உறுதிப்படுத்தப்பட்டது. 'என்ன பணியிருந்தாலும் உடனே விடுமுறை பெற்று வந்து சேர்' என்று அண்ணனுக்குச் செய்தி பறந்தது. நானோ வெள்ளத்திலே விழுந்த எறும்பாகத் துடித்தேன்.

மங்கல நாதசுரம் வெளியே ஒலித்தது. மாவிலையும் தோரணமும் மணவிழாக் கோலத்தை எடுத்துக் காட்டின. கொஞ்சம் பிடிவாத குணமுடைய என் மாமாவோ, எதற்காகவும் திருமண நேரத்தைத் தள்ளிவைக்க விரும்பவில்லை. ஆனால் எப்படியேனும் வந்து சேருவார் என்று எதிர்பார்த்த அண்ணன் ஏனோ வராமற் போனது எனக்குத் திகிலாகவே இருந்தது.

என் கழுத்திலே 'அவர்' மங்கல நாண் அணியும்போது யார் யாரோ மலர் தூவினார்கள். தூவவேண்டிய கைகள் தூவவில்லையே என்று ஏங்கிநின்ற நேரத்தில்தான், 'தந்தி வந்திருக்கிறது' என்றஒலி கேட்டுத் திரும்பினோம். மாமா ஆவலுடன் வாங்கிப் படித்தார். இராணுவ முகாமிலிருந்து அனுப்பப்பட்டிருந்தது அது. எதிரிகளின் தாக்குதலுக்கு அண்ணனிருந்த மருத்துவ மனைக் கூடாரமும் ஆட்பட்டதாகவும், குற்றுயிராக இருந்த அண்ணனை மீட்க முடியாமற் போனதற்கு வருந்துவதாகவும் தெரிவித்திருந்த இராணுவத் துறையினர், அண்ணன் இறுதிக் காலத்தில், 'உடனே சென்னை வீட்டில் என் பெட்டியிலிருக்கும் நாட்குறிப்புச் சுவடியை என் தங்கையைப் பார்க்கச் சொல்லுங்கள்' என்று கூறியதாகவும் குறிப்பிருந்தது.

உடனே அண்ணனின் அறைக்குப் பாய்ந்தோடினேன். பெட்டியைத் திறந்தேன், நாட்குறிப்புச் சுவடியைப் புரட்டினேன். அதிலே சிகப்புநாடா வைத்த பகுதி திறந்தது. படித்தேன். பேரிடியொன்று என் தலைக்கு நேராக விழுந்தது போல் இருந்தது எனக்கு! 'இன்றுதான் அழகப்பனின் அந்த அதிர்ச்சியூட்டும் இரணச்சிகிச்சைமுடிந்தது. இயற்கை படைத்த அவன் இதயம், மிக மிகப் பலவீனமாகிவிட்டதால், நுணுக்கமாகச் செய்த பிளாஸ்டிக் இருதயத்தைப் பதிலுக்கு இணைத்து வெற்றியுடன் முடித்தோம். இந்தச் செயற்கை இதயத்தை ஐந்தாண்டுக் கொருமுறை கவனத்துடன் மாற்றவேண்டும். இதை அவனுக்கே சொன்னாலும் அதிர்ச்சி தரலாம்; என்ற குறிப்பைக் கண்டு என் நெஞ்சமே பிளந்துவிடும் போலிருந்தது. இதற்குள் மாமாவும் மற்றவர்களும் அங்கே வந்துவிட்டார்கள். அவர்களுடன் வந்த சென்னை மருத்துவமனையின் பெரிய டாக்டர் — என் அண்ணனின் ஆசிரியர் — அந்த டைரியை என்னிடமிருந்து வாங்கிப்படித்தார். அவர் முகம் ஏனோ மலர்ந்ததே தவிர, சுருங்கவில்லை.

"இதற்கா இத்தனை ஆர்ப்பாட்டம்? இவையெல்லாம் வளரும் மருத்துவச் சாதனைகளில் மிகவும் சாதாரணம், அம்மா! டாக்டர் கண்ணப்பன் இந்த விவரத்தை யாருக்கும் தரவில்லையே என்றுதான் புழுங்கியிருக்கிறார். இந்தச் சிகிச்சையை நம் நாட்டுக்கும் கொண்டு வந்துவிட்டோம். ஐந்தாண்டுக் கொருமுறை அழகப்பனின் இதயத்தை மாற்றிவிட்டாற் போகிறது. வேறு அஞ்சுவதற்கு ஒன்றுமே இல்லை" என்றார்.

மூழ்கி எடுத்த கொற்கை முத்து, கை தவறிக் கடலிலே விழுந்தது, மீண்டும் குதித்து அதையே எடுத்துவிட்டால் எப்படி முத்துக் குளிப்பவன் மகிழ்வானோ அந்தப் பெருமகிழ்ச்சி என்னை வந்து அணைத்துக் கொண்டது.

குழந்தைபோல் பார்த்துக் கொண்டிருந்த அழகப்பனின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டேன். எல்லாமே சூனியமாகிவிட்டதுபோல் தெரிந்த எனக்கு, நாதசுரத்தின் மங்கல ஓசை இன்னும் வெளியே ஒலித்துக் கொண்டிருப்பது கேட்டது.

★

ஆகஸ்ட் 15உ வெளிவருகிறது!

கலாவல்லி

(தமிழ் மாத இதழ்)

பிரபல அறிஞர்கள், எழுத்தாளர்களால் எழுதப்படும்,

- அரசியல், ஹாஸ்யக் கட்டுரைகள்! சிந்தனையைத் தூண்டும் சிறு கதைகள்!
- பக்கத்துக்குப் பக்கம் பிரபல ஓவியக் கலைஞர்களின் கவர்ச்சிமிக்க வண்ணப் படங்கள்!
- சிறப்புடைய திரைப்பட நட்சத்திரங்களின் ஒளிவீசும் தத்ரூபமான படங்கள்!
- பெண்மணிகளுக்கென்றே பிரத்யேக கதைகள், கட்டுரைகள்!

இதுபோல் இன்னும் பல உண்டு.

விலை 50 காசுகள் ★ ஆண்டு சந்தா ரூ. 6

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை:

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:

கலாவல்லி காரியாலயம்,
7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை-1.

தழும்புகள்

அவன் ஓர் ஏழை! எண்ணற்ற ஏழைகளுக்கிடையில் அவன் ஒருவன்! ஆனால் ஏழைகளில் பலருக்கு ஏற்படாத எண்ணம் அவன் மனதிலே கொந்தளித்தபடி இருந்து வந்தது.

அவன் ஓர் ஏழை! ஆனால் அவன் மனதிலே கொந்தளித்துக்கொண்டிருந்த எண்ணம், எப்படித் தனது ஏழ்மையைப் போக்கிக்கொள்வது என்பது அல்ல; எப்படி நிம்மதியான வாழ்க்கையைப் பெறுவது என்பது அல்ல. அதைப்பற்றி எண்ணிப்பார்த்திட அவனுக்கு நேரமே இல்லை. எந்த நேரமும் அவன் மனதிலே கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ணம் அக்ரமம், அநீதி இவற்றைத் தொலைத்தாக வேண்டும் என்பதுதான்!

அவன் ஓர் ஏழை! ஆனால் நல்ல உடற்கட்டு, துணிவு; தனக்கென்று எதையும் தேடிப் பெற்றாக வேண்டும் என்ற நினைப்பற்ற நெஞ்சம்; வாழ்க்கை நடத்த எதையாவது செய்தாக வேண்டுமே என்ற எண்ணம் கூட அல்ல, வாழ்க்கையிலே ஏன் இத்தனை வஞ்சகமும் அநீதியும் நெளிகின்றன என்ற கேள்வியே அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

அவன் ஏழை! ஆனால் மற்ற ஏழைகள் மனதிலே மூண்டிடாத கேள்வி குடையும் மனத்தினன்; மற்ற ஏழைகளுக்கு இந்தக் கேள்வி தோன்றியிருந்திருக்கலாம்-பல சந்தர்ப்பங்களில். ஆனால் அவர்கள் அந்தக் கேள்விக்கான விடை கண்டிடத் தம்மால் ஆகாது என்று விட்டுவிட்டனர்; தமது வாழ்வுக்கு வழி தேடிக்கொள்ள முனைந்தனர்; மும்முரமாயினர்; பிறகு அவர்களுக்கு வேறு எண்ணம் எழவில்லை இயல்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை.

அவன் ஓர் ஏழை — மற்ற பல ஏழைகளைப்போலவே உழைத்து, உண்டு, உலவி உறங்கியும் வந்தான்-ஆனால் அதுதான் வாழ்க்கை என்று திருப்தி பெறவில்லை. அவன்-உலகிலே காணக்கிடக்கும் கேடுகளை ஒழித்தாக வேண்டுமே, என்ன வழி அதற்கு என்று எண்ணி எண்ணி மனதை எரிமலையாக்கிக் கொண்டான்.

அவன் ஓர் ஏழை—ஆனால் மற்ற ஏழைகள் சிரித்துக்கொண்டிருப்பதைக் காணும்போது சீற்றம் பீறிட்டுக்கொண்டுவந்தது-இத்தனை கொடுமைகள் இழைக்கப்படுகின்றன, ஏன் என்று கேட்கக்கூடத் திராணியற்றுக் கிடக்கிறார்களே! ஏன்? ஏன்? ஏன்? எப்படி முடிகிறது அவர்களால்? என்னால் முடியவில்லையே!-என்று கேட்டபடியிருந்தான் —ஊராரைப்பார்த்து அல்ல — தன் உள்ளத்தை.

அண்ணன் மகா முரடு! அண்ணன் காலை யாராவது மிதித்தால், அவர்கள் தலையை மிதிக்குப-அவ்வளவு ரோஷம்! எவனாக இருந்தாலும் கூழைக்கும்பிடு போடாது! எதைக்காட்டினாலும், ஆசைப்பட்டு பல்லை இளிக்காது-என்று சொல்லுகிறார்கள் மற்ற ஏழைகள்-காதிலே விழுகிறது, ஆனால் காரணம் புரியவில்லை அவர்களின் போக்குக்கு!!

முருங்கையை எளிதாக ஒடித்துவிட முடிகிறது. தேக்கு? எளிதாக முடியாதல்லவா! அதுபோலவே — தன் இயல்பும் மற்ற ஏழையர்களின் இயல்பும்-இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசமும்!! புரியவில்லை! புரியாததால், கோபம் அதிகமாக வளர்ந்தது; குறையவில்லை.

அவன் ஏழை! ஆனால் ஏழைக்கும் பெயர் உண்டே-இவன் பெயர், குப்பம் முழுவதும் கூப்பிடுவது

'அண்ணே' என்ற செல்லப் பெயர்; -பெற்றோர் இட்ட பெயர் மாகாளி!

அப்பவே தெரியும்போலிருக்கு டோய் அண்ணனுடை குணம், எப்படி இருக்கும் என்று-பெத்தவங்களுக்கு — பேர் பார்த்தயேல்லோ! வெறும் காளிகூட இல்லா, மாகாளி! என்று அந்தக் குப்பத்திலே உள்ள மற்ற ஏழைகள் பேசிக்கொள்கின்றனர்.

மாகாளி-அந்தக் குப்பத்திலே பிறந்தவனல்ல! ஏதோ ஒரு குப்பை மேடு! அது என்ன இடமா இருந்தாத்தான் என்னவாம்!! — என்று பதில் வரும், குப்பத்தார் பக்குவமாக விவரம் கேட்கும்போது.

ஊர் பெயரே கூறாதபோது, பெற்றோர் பெயரையா, மாகாளியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளமுடியும்? அப்பனா? எங்க அப்பனைத்தானே கேட்கறே! ஏன், போய் கூட்டிகிட்டு வரப்போறியா! அவன் செத்துச் சிவலோகம்போயி வேணவருஷமாகுதுன்னு சொல்லிச்சி எங்கஅம்மா அது சாகறப்ப......எனக்கு வயசு எட்டு, அப்போ......

"ஐயோபாவம்!"என்பார்கள்சிலர். உருகாதடா, உருகாதே! ஏன், இப்ப அவங்களும் இருந்து, நம்மைப் போல நாய்படாதபாடுபடவேணுமா ......போய்விட்டாங்களே அதைச் சொல்லு நிம்மதியா......

மாகாளிக்கு என்னவேலை? எந்த வேலையாவது கிடைக்கும் — உடல் உழைப்பு வேலை-பாரமூட்டை சுமப்பதோ-கட்டை வெட்டுவதோ— கிணறு தோண்டுவதோ — வண்டி ஓட்டுவதோ-ஏதாவது ஒன்று. இன்னின்னாருக்கு இன்னின்ன வேலை என்று ஒரு திட்டமா இருக்கிறது! விருப்பம் அறிந்து வேலை கொடுக்கும் இடமா இந்த உலகம்!! பசுவைக்கழுவிச் சுத்தமாகவைத்திருக்கிறார்கள்; எருமையைச் சேற்றிலே புரளவிடுகிறார்கள்; இரண்டும் பால் கொடுக்கிறது! இந்த உலகத்தில் ஏதாவது ஒரு ஒழுங்குமுறை இருக்கிறதா என்ன!! மகாளி கேட்பான் இதுபோல—ஏண்ணேன் உனக்கு ஏத்ததா ஒரு ஒழுங்கான வேலையைத் தேடிக்கொள்ளமாட்டேன்கிறே-என்று சொந்தத்துடன் கேட்பவர்களுக்கு.

அவன் ஏழை — ஆனால் ஏழைக்காக இந்த உலகம் இல்லை என்ற எண்ணம் அவனுக்கு. ஏழையை இந்த உலகம், ஏழ்மையில் இல்லாதவர்களின் முன்பு நடமாடவிட்டு வேடிக்கை காட்டுகிறது என்ற எண்ணம்!!

ஐயோபாவம்!-என்று உருக்கமாகப் பேசவேண்டுமே; ஏழை இல்லாவிட்டால் எப்படிப் பேச முடியும் அதுபோல; அதற்காகத்தான் இந்த உலகம் நம்மை வைத்துக் கொண்டிருக்கிறது; இல்லையென்றால் இவ்வளவு கொடுமை செய்யும் இந்த உலகம் ஒரே விழுங்காக நம்மை விழுங்கிவிட்டு, வேலை முடிந்துவிட்டதுஎன்று கூறிவிடாதா என்ன!!-என்று கேட்பான் மாகாளி -மற்றவர்கள், "அண்ணன் வேதாந்தம் பேசுது! ஒருசமயம் அதனுடை அப்பாரு பெரிய சாமியாரா இருப்பாரோ?" என்று பேசிக்கொள்வார்கள்.

புத்தி உனக்கு உலைக்கைக் கொழுந்துடாடோய்! சாமியாரா இருந்தா பிள்ளை எப்படிடா பெத்துக்க முடியும்? என்று கேட்பான் ஒருவன். பிள்ளை பொறந்த பிறகு சாமியாராயிட்டிருக்கக் கூடாதா என்பான் இன்னொருவன்; ஏம்பா! சாமியாரா வேஷம் போட்டுகிட்டே நம்ம சடையன் மகளோட சினேகிதம் வைத்துக்கொள்ளலியா அந்த புதூர் சாமி......அதுபோல இருக்கப்படாதோ என்பான் மற்றொருவன் — எல்லாம் மகாளி இல்லாதபோது.

மாகாளி! தன்னுடைய பிறப்பு வளர்ப்பு பற்றிய கேள்விகளுக்குத் தான் பதில் சொல்லுவதில்லை; ஆனால் அவன் உடலிலே காணப்பட்ட தழும்புகளைப்பற்றி கேட்டால் போதும், மளமளவென்று விவரம் கூறுவான். இந்தத் தழும்புகள்தாம் என் வாழ்க்கைக்கான குறிப்புகள் என்பான், சிரித்தபடி! என்ன சிரிப்பு அது! இந்த உலகத்தையே கேலி செய்யும் முறையிலே அமைந்த சிரிப்பு அது!!

"அதைக்கேள் சொல்கிறேன்" என்று ஆர்வத்துடன் ஆரம்பிப்பான். அவனுடைய வாழ்க்கையிலே நடைபெற்ற ஏதாவதொரு நிகழ்ச்சியைக் கூறுவான்—கூறும்போது, போர்க்களத்திலே ஒரு வீரன் பெற்ற 'காயம்' குறித்துப் பேசும்போது எவ்வளவு பெருமிதம்கொள்வானோ அந்தவிதமான பெருமிதம் அவனுக்கு ஏற்படும்.

"நான் எங்கே பிறந்தேன்—என் பெற்றோர்யார் அவர்களின் நிலைமை என்ன — என்ற விவரம் கேட்டுத் தெரிந்துகொள்வதாலே எள்ளத்தனை பயனும் உனக்கோ மற்றவர்களுக்கோ ஏற்படாது; இதோ இந்தத் தழும்பின் விவரம் கேட்கிறாயே, இது கேட்கவேண்டிய கேள்வி; இதுபற்றிய விவரம் உனக்குத் தெரிவது நல்லது; அதாவது நீ ஏழை என்பதை மறந்து, மனிதன், ஆகவே நீதி நியாயத்துக்காகப் பாடுபடவேண்டியவன், அக்ரமத்துக்கு அடிபணியாமலிருக்க வேண்டியவன் என்ற உணர்வு இருந்தால்" என்ற முன்னுரையுடன் மாகாளி பேச ஆரம்பிப்பான்.

மாகாளியின் உடலிலே இருந்த தழும்புகள்-முகத்திலேகூடத்தான்-அவனை அவலட்சணமாக்கிவிடவில்லை; அவனுடைய வயதுக்கு மீறிய ஒரு முதுமைக்கோலத்தை

நீதிபதியின் அழுகை!

கிரிமினல் கோர்ட்டின் நீதிபதி ஒருவர் விம்மி விம்மி அழுதுகொண்டே ஒருவருக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தார்.

டக்ளி [வயது 67] என்ற கிழவர் ஒருவர், நோயால் அவதியுற்ற தனது மனைவி தூக்க மாத்திரையை உட்கொண்டு இறக்க உதவிபுரிந்தார். ஆகையினால் அவர்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. அவ்வழக்குப்பற்றி நீதிபதி கூறியதாவது :—

'டக்ளி அவருடைய மனைவி மீது அதிக அன்புடையவர். நோயால் அவதியுற்ற தன் மனைவி, தற்கொலை செய்துகொள்வதற்கு அவர் உதவியுள்ளார். ஆனால் சட்டப்படி இது குற்றமாகும் ஆகையினால் இந்த நல்லவருக்குக் குறைந்த தண்டனையாக 3 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கிறேன்.'

இவ்வாறு கூறியபடி நீதிபதி விம்மி விம்மி அழுதார்.

மட்டுமே அந்தவடுக்கள் ஏற்படுத்தி விட்டிருந்தன.

அந்தத் தழும்புகளைத் தடவிக் கொடுத்துக்கொண்டு பேசுவதில் மாகாளிக்கு ஒரு தனி ஆர்வம்.

இது விறகுக்கட்டையாலே பலமாக அடித்ததாலே ஏற்பட்டது, இரத்தம் எப்படிக் கொட்டிற்று தெரியுமா...பனியன் முழுவதும் இரத்தக் கறை...நாலு மாதம் பிடித்தது புண் உலர......பிறகு பல மாதம் அந்த இடத்திலே ஒருவிதமான வலி மட்டும் இருக்கும், அடிக்கடி...ஒரு வருஷத்துக்குப் பிறகு வலியும் நின்றுவிட்டது, வடு மட்டும் பதிந்து விட்டது...ஏன்! ஏண்டா! அப்படிப் பார்க்கிருய்......எப்படித்தான் தாங்கிக்கொண்டானே என்ற யோசனையா...பைத்யக்காரா! அப்போது நான் போட்ட கூச்சல் இப்போது கூடக் காதிலே விழுவதுபோலிருக்கிறது...எட்டு வயது எனக்கு அப்போது..."

"அண்ணேன் எட்டு வயதிலேயா இந்தக் கொடுமை..."

"ஏன்! ஏண்டா அப்படி ஒரு கேள்வி கிளப்பரே.....எண்பது வயதான பிறகுதான் விழணும் இந்த மாதிரி அடி என்கிறயா..."

"போண்ணேன்! தழும்பைப் பார்க்கறபோதே எனக்கு வயிறு பகீல்னு இருக்குது......நீ சும்மா தமாஷ் பேசறியே..."

"டே! தழும்பைப் பார்த்தாலே நீ பதறிப்போறே....இந்த இடத்திலே இருந்து இரத்தம் குபுகுபுன்னு வந்ததைப் பார்த்தே மனசு துளிகூடப் பதறலியே என்னேட எஜமானுக்கு தெரியுமா..."

"யாரண்ணேன் இந்தக் கொடுமையைச் செய்த பாவி?"

"புண்யகோட்டீஸ்வர அய்யர்னு பேர்டா அவருக்கு, முட்டாப்பயலே! அவரைப்போயிபாவின்னு பேசறியே......பாவி என்கிற பட்டம் இருக்குதே, அது நம்மாட்டம் பஞ்சைபராரிகளுக்குன்னே தனியா ஏற்பட்டதுடா... பெரிய இடத்துப் பக்கம் கூட அது தலைகாட்டாது ...எட்டு வயது எனக்கு ......குண்டுகட்டைன்னு தான் கூப்பிடுவாங்க... கோபமா இல்லே......

செல்லமா....அப்படி இருப்பேன். புண்யகோடீஸ்வர அய்யர் ஓட்டலிலே வேலை......மேஜை துடைக்கறது, எச்சில் எடுக்கறது, பாத்திரம் துலக்கறது, இதெல்லாம்..."

"அண்ணேன்! கோபம் செய்து கொள்ளாதே......அம்மா அப்பா உன்னை எட்டு வயதுக்கேவா உழைக்க விட்டுவிட்டாங்க..."

"அம்மா இருந்தா என்னசொல்லியிருப்பாங்கன்னு தெரியாது; அப்பாதான் அம்மாவை விட்டு விட்டுப் போயிட்டாரே முன்னலேயே, சிவலோகம்......ஒரு விறகு பிளக்கற ஆளை அப்பா அப்பான்னு கூப்பிட்டுகிட்டு இருந்தேன்... என்னை வளர்த்தவரு.....அவருக்கு என்ன கூலி கிடைக்கும்? சொல்லணுமா...அதனுலே ஓட்டல் வேலைக்குப் போனேன்..."

"வேலை செய்கிறபோது எங்காவது உயரக்க ஏறிக் கீழே விழுந்துட்டயா..."

"உயரக்க ஏறி! ஆளைப்பாரு! நாம குப்பைமேட்டுக்காரரு...கோபுரமா ஏறிடுவோம்......கீழே விழுந்ததாலே ஏற்பட்டது இல்லா.....செம்மையான அடி விறகுக் கட்டையாலே..."

"ஓட்டல்காரனு அடிச்சான்..."

"அவனுக்கு அதுதான் வேலையா... ஒரு ஆளைக் கூப்பிட்டு அடிடான்னு உத்திரவு போட்டான், அவன்எடுத்தான்விறகுக்கட்டயை; கொடுத்தான் பலமா, கொட்டு கொட்டுன்னு இரத்தம்கொட்டிச்சு"

"ஏன் நீ என்ன தப்பு செய்தே......"

"பாரேன் உன்னேட புத்தியை. மாறமாட்டேன்குதே அந்தப் புத்தி. ஏழை தப்பு செய்துதான் இருப்பான், அதனுலேதான் அடி வாங்கி இருக்கிருன்னு தீர்மானமா எண்ணிக்கொள்றே......உன் பேர்லே குத்தம் இல்லேடோய்! குப்பத்திலே கிடக்கிறபோது வேறு என்ன நினைப்பு வரும்...போன ஜென்மத்திலே ஏதோ பெரிசா பாவம் செய்துவிட்டதாலேதான் இப்ப இப்படி இருக்கரோம்னு சொல்ற கூட்டந்தானே, நாம...மடப்பயலே! தப்பு செய்ததாலே இந்த அடி கொடுக்கலே...அய்யருக்குப் பிடிக்காத காரியம் செய்தேன்...அதனுலே அவருக்குக் கோபம்...ஏன் அந்தக் காரியம் அவருக்குப் பிடிக்கல்லேன்னு கேட்பே...ஏன் பிடிக்கல்லேன்னு, நான் செய்த காரியத்தாலே அய்யருக்கு நஷ்டம்...அதனுலே கோபம்...புரியலியா...இது புரியாது...அதோ மேலே ஆகாசத்திலே ஆயிரமாயிரமா தேவர்கள் இருக்கருங்கன்னு போதும், இருக்கும்னு சொல்லுவே புரிந்தவன் போல...கேள் நடந்ததை...வழக்கம் போல மேஜை துடைத்து விட்டு, பாத்திரத்தைக் கழுவ எடுத்துக்கிட்டுப் போனேன், உள்பக்கம்... சமயக்கட்டுப் பக்கம். இட்லிக்கு மாவு ஆட்டிக்கிட்டு இருந்தான், வேலைக்காரன்...எங்கேயோ பார்த்துகிட்டு இருக்கிருன்...என்ன கவலையோ அவனுக்கு...தடால்னு மேலே இருந்து ஒரு பல்லி விழுந்தது பாரேன் மாவிலே,......பார்த்ததும் பதறிப் போயிட்டேன்...அவன் அதைப் பார்க்காமலே, மாவை அரைக்கிருன்... பல்லி கூழாயிட்டிருக்கும் மாவோடு சேர்ந்துபோச்சு ...பல்லி! பல்லி! ன்னு ஒரு கூச்சல் போட்டேன்...அப்பத்தான் விஷயம் விளங்கிச்சி அவனுக்கு ....கூழாயிப்போனது போக, மிச்சம் இருந்த பல்லித்துண்டை, துழாவி எடுத்து வெளியே போடப்போனுன்...இதற்குள்ளே சமயக்கட்டு ஆளுங்க கூடிட்டாங்க... பல்லி விழுந்து செத்துத் தொலைத்திட்டுது, விஷமாச்சே...அந்த மாவை இட்லிக்கு உபயோகப் படுத்தினு, சாப்பிடறவங்க என்ன கதி ஆவாங்க...எனக்கு... அந்த எண்ணம்...பல்லி! பல்லி!ன்னு கூவிகிட்டே ஓடியாந்தான் அய்யரிடம்

அதிசயச் செய்தி!

பிரான்ஸ் நாட்டில் பெரிகோ என்ற ஊரில் ஓர் அதிசய தீ விபத்து நடந்தது. வயல் புறங்களில் உழவுக்கு நின்ற ஒரு டிராக்டரில் இருந்து தீப்பொறி பறந்து அருகே கிடந்த இலைக் குவியல்களைப் பற்றவைத்துவிட்டது. பர பரவென்று தீ பரவி மரங்களையெல்லாம் பற்றிக் கொண்டது. உடனே நகரில் புதிதாகத் தருவிக்கப் பட்டிருந்த தீயணைக்கும் மெஷின் தீப்பிடித்த இடத்துக்கு விரைந்து வந்தது. அந்த மெஷின் வந்து சேர்ந்ததுதான் தாமதம். திடீர் என்று காற்று நெருப்பை யள்ளி வீசியவாறு தீ அணைக்கும் மெஷின் பக்கம் திரும்பிவிட்டது. அதன் பெட்ரோல் டாங்கி இதனுல் தீப்பிடித்துக் கொள்ளவே அந்த தீ அணைக்கும் மெஷினே சிறிது நேரத்தில் பஸ்பமாகி விட்டதாம்!

சொல்ல...பின்னுலேயே துரத்திக் கிட்டு வந்தான் மாவு அரைக் கிறவன்...பெரிய ஆள்...கோழிக் குஞ்சைப் பருந்து தூக்கும் பாரு, அப்படித் தூக்கிக்கிட்டே போயிட்டான் என்னை, ஓட்டல் பின்புறம் ...விடு! என்னை விடு! நான் அய்யர் கிட்டே சொல்லப் போறேன்... மாவிலே பல்லி! பல்லின்னு விஷம்! இட்லி சாப்பிட்டா செத்துப்போயிடு வாங்க...அப்படி இப்படின்னு ஒரே கூச்சல்...அய்யரே வந்து விட்டார் ...நான் அவரிடம் விஷயத்தைச் சொல்றதுக்குள்ளே, மாவு அரைக் கிறவனே அவரிடம் இரகசியமாக எதையோ சொன்னுன்...அய்யர் உடனே என் பக்கம் வந்து "டேே! குண்டு கட்டை! வாயைப்பொத்திக் கிட்டு இருக்கமாட்டே......ஓட்டல் பேரையே நாசமாக்கி விடுவே போலிருக்குதே...விழுந்த பல்லியைத் தான் வெளியே எடுத்துச் போட்டாச்சே...நீ எதுக்காக வருகிறவனெல்லாம் பயம் கொள்ற மாதிரி பல்லி! பல்லின்னு கத்திக்கிட்டு இருக்கே"ன்னு கேட்டார்...பதறிப் போயிட்டேன்......பல்லி செத்துக் கூழாயிப்போட்டுது...விஷம்...நான் எல்லோருக்கும் சொல்லத்தான் போறேன்னு சொன்னேன்...அப்பத்தான் அய்யரு போட்டாரு...... போட்டாரா...வேலையாள் ஒருத்தன் அங்கே கிடந்த கட்டையாலே பல மாப்போட்டான்....குழ குழன்னு... இரத்தம்..."

"யாருமே கேட்கலியா என்ன இது? ஏன் அடிக்கறிங்கன்னு...?"

"நீ ஒரு முட்டாப்பய தானே! எண்டா அவனுக்கு அதுதானு வேலை. சாம்பார் கொஞ்சம் போடு, அய்யர் சட்னி கொண்டா, வடை சூடா கொடு...காப்பிக்குச் சக்கரை அப்படி இப்படின்னு அவனவன் நாக்கு ருசியைக் கவனிச்சிக்கிட்டு இருக்கிருன், அந்த நேரத்திலேயா எவனே எவன் அடித்தான், ஏன் அடிச்சான்னு கேட்கத் தோணும். அடேயப்பா! அப்படிக் கேட்கற சுபாவம் மட்டும் இருந்துதுன்னு உலகம் இப்படியா இருக்கும். ஒரு பயலும் ஒண்ணும் கேட்கல்லே...... இரத்தம் அதிகமாக கொட்டறதைப் பார்த்து, அய்யரேதான், வேறே ஒரு ஆளைப்பார்த்து அடுப்புக்கரித் தூளை அரைச்சித் தடவுடான்னு சொன்னுரு, இந்தச் சின்ன வயசிலே திருட்டுக்கை இருந்தா, பெரிய பயலானு வழிப்பறிக்கொள்ளையல்ல நடத்துவான்?" என்று கூறிக் கொண்டே, வியாபாரத்தைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

"அடப்பாவிப்பயலே...இப்படி ஈவு இரக்கமில்லாமலா..."

"டேய்! என்னைத்தாண்டா பல பேர், பாவிப்பயலே! உனக்கேண்டா திருட்டுப்புத்தி! ஓட்டலிலே வயிறு நிறையக் கொட்டருங்களே போதாதா; என்று கேட்டு புத்தி சொன்னுங்க..."

"அய்யர் சொன்னதையே நம்பி விட்டாங்களா...?

"நம்பாம, நான் சொன்னதையா நம்புவாங்க...நீயே, அய்யர் சொன்னதைத்தான் நம்பி இருப்பே...... கொஞ்சம் முணுமுணுத்து இருந்தா போடற இட்லியிலே கொஞ்சம் பெரிசாப் பார்த்துப் போட்டா போதுமே, பல்லை இளிச்சிகிட்டு அவர் பக்கம் சேர்ந்து விடமாட்டயா ......"

இப்படி நடந்தது பற்றிக் கூறுவான் மாகாளி. கேட்கும் குப்பத்து ஆட்கள் அய்யோ பாவம்! அய்யோ பாவம்! என்று கூறிப்பச்சாதபம் காட்டுவார்கள். அதிலே மாகாளி என்றும் திருப்தி அடைந்து விடுவதில்லை.

அக்ரமத்தைக் கண்டால் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. இது இன்று நேற்று ஏற்பட்ட சுபாவம் அல்ல. கூடவே பிறந்த சுபாவம்னு நினைக்கிறேன். நமக்கு என்ன என்று இருந்துவிட மனம் ஒப்புவதில்லை; அக்ரமத்தைக் கண்டிக்க எல்லோருக்கும் உரிமை இருக்கிறது, கடமை இருக்கிறது, என்று ஒரு அழுத்தமான நம்பிக்கை எனக்கு. கடமை என்ற எண்ணம் அந்தக் கடமையைச் செய்யும் போது எந்தத் தொல்லை வந்தாலும் தாங்கிக் கொண்டாக வேண்டும் என்ற ஒரு உறுதி. இரத்தத் தழும்புகள், அந்த உறுதியின் சின்னங்கள் என்று கூறுவான்.

மாகாளி குப்பத்துப் பாணியில் தான் பேசினுன். அவனுடன் பழகியவர்களிலே பலரும் அதே பாணியில்தான் பேசினுர்கள்.நான் அந்தப் பாணியிலேயே முழுவதும் எழுதிக் கொடுக்க எண்ணினேன். ஆசிரியர் ஒப்புக் கொள்ளவில்லை. அதனுல், சில பகுதிகளை அவர் விரும்பிய விதமாகவும் எழுதினேன். முக்கியமானதைக் கூற மறந்து விட்டேனே... நான் 'மரபு' இதழில் துணை ஆசிரியன்.

எங்கள் 'மரபு' இதழில் வியப்பளிக்கும் உண்மை நிகழ்ச்சிகள் ஒரு தனிச்சுவையுள்ள பகுதி; உங்களிடம் உண்மையை ஒப்புக் கொள்வதிலே என்ன தவறு...... பெரிய புள்ளிகள் நடக்காதவைற்றைக்கூட உண்மையில் நடந்ததாகச் சொல்லுவார்கள்......எங்களுக்கு அவர்கள் சொல்வது பொய் என்று தெரியும்......தெரிந்து......! வெளியிடுவோம், வியப்பளிக்கும் உண்மை நிகழ்ச்சி என்று. எமது 'மரபு' இதழில் இந்தப் பகுதிக்குத் தலைப்பு 'அதிசயம் ஆனுல் உண்மை!' என்பதாகும்.

வேட்டையாடுவதில் திறமைமிக்கவர் என்று பெயர்பெற்ற வெட்டியூர் மிட்டாதாரர் குட்டப்ப பூபதியாரைப் பேட்டி கண்டு 'அதிசயம் ஆனுல் உண்மை' பகுதிக்கான தகவலைப் பெற்றுவரச் சொல்லி ஆசிரியர் என்னை ஒருநாள் அனுப்பி வைத்தார். வழக்கமாகக் கிடைக்கும் தகவல்கள் கிடைத்தன! காட்டெருமை அவரைக் கீழே தள்ளி தொடையில் ஆழமாகக் குத்தி விட்டதாம் ஒரு தடவை; வடு இருந்தது; போட்டோ கூட எடுத்துக் கொண்டேன். எனக்கென்னவோ அந்தவடு, அறுவைச் சிகிச்சையின் விளைவு போலத் தெரிந்தது, மிட்டாதார் கூறுகிருரே, காட்டெருமை குத்தியதால் ஏற்பட்ட வடு என்று. காடடெருமைத் தலையைக்கூடக் காட்டினுர்; மாளிகைக்கூடத்திலே 'பாடம்' போட்டு தொங்கவிடப்பட்டிருந்தது.

வெட்டியூரார் உடம்பில் காணப்பட்ட தழும்புகளைத் குறித்த விவ

வானுயர் மரத்தில் குடியிருக்க வீடு

குடியிருக்க வீடுகள் கட்டுவதற்கு நூதனமான வடிவமைப்பு ஒன்றை மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த டோலிங்கர் என்ற கட்டிடக்கலை நிபுணர் தயாரித்திருக்கிருர். இந்த வடிவமைப்பைப் பார்ப்பதற்கு, ஒரு மரத்தில் வீடுகள் தொங்குவதைப்போல் தோற்றமளிக்கும். மரம் போன்ற நெடிதுயர்ந்த ஒரு மாபெரும் கம்பத்தை அமைத்து அதன் நான்கு புறங்களிலும் மரக் கிளைகளைப் போல் குடியிருக்கும் வீடுகளை அமைக்க வேண்டும் என்பது அவரது திட்டம். 270 அடி உயரமான இக்கம்பத்தில் 3 அறைகள் கொண்ட 25 வீடுகளைக் கட்டலாம். நகரங்களில் இடநெருக்கடியைச் சமாளிக்க இந்த முறை பயன்படும், இந்த மாதிரியின்படி விரைவில் ஒரு 'மர வீடு' கட்டப்படவிருக்கிறது.

ரத்தை எழுதிக் கொடுத்தேன்; எழுத எழுத எனக்கு ஒருவிதமான கசப்புணர்ச்சி, வெறுப் புணர்ச்சி. இவர் இந்தவடுக்களைப்பெற்றதனுல் உலகுக்கு என்ன பலன்? உலகிலே ஏதாவது ஒரு நல்ல காரியம் செய் வதிலே ஈடுபட்டு, அதிலே காயம் ஏற்பட்டு, அது 'வடு' ஆகி இருந் தால், அதுபற்றிப்பெருமைப்படலாம் உல்லாச புருஷனின் பொழுது போக்கு வேட்டையாடுவது! இதிலே ஏற்பட்ட 'வடு'பற்றிப் பெருமைப்பட என்ன இருக்கிறது என்று எண் ணிக்கொண்டேன். வெளியே சொல் லத்தான் முடியுமா.....அவருடைய தயவினுல் 'மரபு' இதழுக்கு ஆயுள் சந்தாதாரர்கள் மட்டும் அறுபது பேர் கிடைத்தார்கள்; ஒரு சந்தா ஆயிரம் ரூபாய்!!

தமிழாசிரியர்கள் பழந்தமிழ் மன்னர்கள் களத்திலே கலங்காது நின்று போராடிப்பெற்ற'விழுப்புண்' பற்றிப் பெருமிதத்துடன் பேசக் கேட்டிருக்கிறேன். புகழின்சின்னம்! வீரத்தின் முத்திரை! வெற்றிக் குறி கள்! என்றெல்லாம் பாராட்டுவர். ஓரளவுக்கு இது பெரிமைக்குரியது தான்...ஆனுல் இதிலேயும், மன்னர் களுக்குள் மூண்டுவிட்ட போர்தான் அடிப்படைக் காரணமாக அமைந் திருக்கிறது. யாரோ ஒருவருக்கு ஏற்படும் அக்ரமம் கண்டு கொதித் தெழுந்து போராடிப் பெற்ற வடு அல்லவா முழுப் பெருமிதம் தரத் தக்கது என்று எண்ணிக் கொண் டேன்.

அந்த எண்ணம் வளர வளர, சாமான்யர்கள் என்ற வரிசையிலே இருந்தபோதிலும், பிறருக்காகப் பாடுபட்டு, இன்னல் ஏற்றுக்கொண் டவர்கள் இருப்பார்களே, அவர் களைக் கண்டுபேசி, அவர்களின் வாழ்க்கையிலே நடைபெற்ற வியப் பளிக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. ஆசிரியரிடம் கூறினுல் பெற்றுக் கொள்வார் என்ற நம் பிக்கை ஏற்படவில்லை. ஆகவே இதழுக்காகத் தகவல் சேகரித்திடும் நேரம் போக, மிச்சநேரத்தை என் இதயம்விரும்பிய காரியத்துக்காகச் செலவிட்டு வந்தேன். அப்போது தான் மாகாளி எனக்குக் கிடைத் தான்.

ஒரு மருத்துவ மனையில் மாகாளி கிடத்தப்பட்டிருந்தான் உடலெங் கும் கட்டுகளுடன். ஆபத்து நீங்கி விட்டது. ஆள் பிழைத்துக் கொள் வான், குறைந்தது மூன்று மாதம் மருத்துவ மனையில் இருக்க வேண்டும்என்றுகூறினர்கள். மறந் துவிட்டேனே, நான் மருத்துவ மனை சென்றது மாகாளியைப் பார்க்க அல்ல; புதிய மோட்டாரில் ஏறும் போது கால் வழுக்கிக் கீழே விழுந் துவிட்ட அறுதை விடுதி தர்ம கர்த்தா அய்யப்பனைக் கண்டு தகவல் சேகரிக்கச் சென்றிருந் தேன்.

நாளிதழ்கள் அய்யப்பன் மோடா ரில் ஏறப்போகும்போது, கால் வழுக்கி விட்டது, காரணம் அவர் போட்டுக்கொண்டிருந்த செருப்பின் அடிப்பாகம் ரப்பராலானது, வழ வழப்பானது என்றுஎழுதிஇருந்தன.

வழவழப்பான ரப்பர் அடிப்பாகம் கொண்ட புதுவித செருப்புத் தயா ரித்து விற்பனை செய்யும் 'கம்பெனி' யாருக்குக் கடுங்கோபம். அவர்கள் உடனே 'மரபு' ஆசிரியரைக்கண்டு அய்யப்பன் வழுக்கி விழுவதற்கான உண்மைக் காரணத்தைக் கண் டறியும்படி கூறி இருந்தனர். நான் மருத்துவமனை செல்ல நேரிட்டது இந்தக் காரணத்தால்.

அய்யப்பன், பலமாக மறுத்தார்- கால் வழுக்கிக் கீழே விழவில்லை! கண் இருண்டது, மயக்கம் ஏற்பட் டது; திடீல் மயக்கம்; காரணம் என்ன தெரியுமா என்று கேட்டு உருக்கமான 'சேதி' கூறினர். அவர் மோடாரில் ஏறப்போகும் போது, ஒரு சிறுவனைக் கண்டாராம், பாதையின் மற்ருேர் பக்கத்தில்; அவன் கண்களிலே தெரிந்த துய ரத்தைக் கண்டதும், ஆண்டவனே! இப்படிப்பட்ட அறுதைகளை ரட்சிக் கும் தொண்டினைப் பரிபூரணமாக என்னுல் செய்ய முடியவில்லையே! போதுமான பணம் இல்லையே! முன் னூறு குழந்தைகளை மட்டுந்தானே ரட்சிக்க முடிகிறது. இதோ ஒரு மொட்டு, கருகிக்கொண்டிருக் கிறதே!! என்று எண்ணினராம். உடனே ஒரு மயக்கம், கண் இருண் டது கீழே சாய்ந்தார். அய்யப்பன் சொன்னது இது; அதிசயம் ஆனுல் உண்மை!! தொழில் முடிந்ததும் நான் மருத்துவ மனையில் கிடந்த மற்றவர்களைப் பார்த்தபடி நடந் தேன். மாகாளி உடலெங்கும் கட்டு களுடன் கிடத்தப்பட்டிருந்தான். அவனருகே நின்று கொண்டு, பரிவுடன் பழம் சாப்பிடச் சொல்லி நின்றுகொண்டிருந்த இளமங்கை கையைக்கண்டதும் எனக்கு வியப் பாகிவிட்டது; பெண் பெரிய இடத் தில் வாழ்க்கைப்பட்டு, ஏதோ சச்ச ரவுகாரணமாகக் கணவனைப்பிரிந்து தனியாகிப் பள்ளிக்கூடத்தில் ஆசி ரியை வேலை பார்த்து வருபவள்; மாஜி பெரிய இடம்! பெயர் வள்ளி! திருமணத்தின்போது, வள்ளியாச் சியார் என்பது பெயர்.

வள்ளியிடம் நான் பேசியதுகூட படுத்துக்கிடப்பவனைபற்றிய 'சேதி' தெரிந்து கொள்ள அல்ல. பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட்ட வள்ளி ஏன் கணவனை விட்டுப்பிரிய நேரிட்டது என்பது பற்றிய தகவல் பெறத்தான். வழக்கம்போல வள்ளி அந்த தகவல்தர மறுத்துவிட்டாள்; மாகாளி பற்றிய தகவலைக் கூற லானுள். மெள்ள மெள்ளத்தான் எனக்கு மாகாளி பற்றிய தகவலில் சுவை ஏற்பட்டது. வள்ளி தந்த தகவலைத் தொடர்ந்து, மாகாளி யிடமும், அவன் இருந்து வந்த குப்பத்து ஆட்களிடமும், தொடர் புள்ள வேறு பலரிடமும் கேட்டுப் பல தகவல்களைத்தெரிந்துகொண்டு 'தழும்புகள்' என்ற தலைப்பிட்டு 'மரபு' இதழுக்குஅளித்தேன். அவர் என்னையும் வருத்தப்படவிடக்கூ டாது, 'மரபு' மேற்கொண்டுள்ள மரபும் பாழ்படக்கூடாது என்று, 'தழும்புகள்' தனி ஏடாக வெளிவர ஏற்பாடு செய்தார். அதன் துவக்கப் பகுதியைத்தான் இதுவரை நீங்கள் பார்த்தீர்கள். இனி மாகாளிபற்றி நான் தெரிந்து கொண்ட தகவல் களில் சிலவற்றைத் தருகிறேன். நிகழ்ச்சி நடைபெறுவது போன்ற வடிவத்தில்.

[ஒரு சிற்றூரின் சாலை வழியில் ஒரு இரட்டை மாட்டு

மாற்றத்தின் மகிழ்ச்சி

காகிதங்கள், பைல்கள், மை இவற்ருல் தோன்றும் உயிரற்ற சூழ்நிலையிருந்து தப்புவதற்கு விரும்புகிறேன். எத்தனையோ கணக்குகளையும் எண்களையும் கணிக்கிருேம். ஆனுல் அவை மனி தர்களல்ல. மனிதர்களைக்குறித்தே கணக்கும் எண்களும் நிற்கின்றன. நான் வெளியில் வந்து நம் மக்க ளின் முகங்களைப் பார்க்கும் பொழுது புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அடைகிறேன் -- ஓர் ஆற்றலையும் உணர்ச்சியையும் பெறுகிறேன். அவர்கள்எண்ணங்க ளோடு இயைந்து என் எண்ணங் களும் வளர்கின்றன. மக்களின் மனப்பாங்கையும் போக்கையும் கண்டு நானும் சிறிது மாறுகி றேன்.

-- நேரு வரலாறு

வண்டி செல்கிறது. சலங்கை மணி பூட்டப்பட்ட பெரிய காளைகள் வண்டியில் பூட்டப்பட்டு உள்ளன.

உடற்கட்டும், அழகான தோற்றமும் உள்ள வாலிபன், வண்டியை ஓட்டிச் செல்கிறான். வண்டிக்குள் திண்டு போட்டுச் சாய்ந்து கொண்டிருக்கிறார், நாற்பத்தைந்து வயதான ஒரு மிராசுதாரர். சில்க் சட்டையும் வேட்டியும் போட்டுக் கொண்டிருக்கிறார். காதிலும் கைவிரல்களிலும் வைரம் மின்னுகிறது. நெற்றியில் சந்தனப் பொட்டு இருக்கிறது.

வெள்ளிப்பூண் போட்ட அலங்காரத்தடி அவருக்குப் பக்கத்திலே இருக்கிறது.

வெள்ளி வெற்றிலைப் பெட்டியும் வெட்டிவேர் விசிறியும் வண்டியில் இருக்கின்றன. வழியில் வருவோர் போவோர் அவரைக் கண்டதும் மரியாதை செய்கிறார்கள்.]

மிராசுதார்:- டே! மாகாளி! தட்டி ஓட்டேண்டா மாட்டை...தடவிக் கொடுக்கறியே......ஓட்டு, ஓட்டு சுருக்கா...

மாகாளி:- வாயில்லா ஜீவனுச்சிங்களே...வேகமாத்தான் போகுது ...தா! தா!

[மெதுவாகத்தட்டுகிறான். வேகமாக வண்டி செல்கிறது.

வயல் காட்சிகளைப் பார்த்து மாகாளி ரசித்துக் கொண்டிருக்கிறான்.

மிராசுதாரர் எதையோ எண்ணி, மகிழ்ந்துகொண்டிருக்கிறார்.

ஒரு ரயில்வே கேட் தெரிகிறது.

ரயில், தொலைவில் வருகிறது.

கேட், மூடிவிடுகிறார்கள். வண்டி நிற்கிறது.

ரயில் செல்கிறது.

கேட் திறக்கப்பட்டு வண்டிசெல்கிறது.]

மா:- (ஆவலாக) ஏங்க... ரயிலை யாருங்க, முதமுதல் கண்டுபிடிச்சது...

மிராசு:- (கோபமாக) ஆ... உங்க பாட்டன்......ஓட்டேண்டா, வண்டியை, பெரிய விசாரணை நடத்தறான்...

மா:- (சலித்துக்கொண்டு) தெரியல்லேன்னு தெரியாதுன்னு சொல்லிட்டுப்போங்களேன், அதுக்கு ஏங்க இப்படி எரிஞ்சிவிழறிங்க. நீங்களெல்லாம் படிச்சவங்களாச்சே, தெரிஞ்சிருக்கும்னு கேட்டேன்...

மிராசு:- வரவர, உனக்கு வாய்த்துடுக்கு அதிகமாயிட்டுது; கிண்டல்பேச்சு, விதண்டாவாதம் வளருது...அண்ணைக்கி ஒருநாள் நீ, என்னகேட்டே, எமனுக்கு எருமைக்கடா வாகனம்; எப்படிப் பொருந்தும்னு கேட்கல்லே, நீ... இரு, இரு, உன்னை...

மா:- (சிரித்தபடி) நீங்க ஏங்க, அதுக்காக இவ்வளவு கோபப்படறிங்க...பூலோகம் வந்து, பாசக்கயறுவீசி, உயிர்களைப் பிடித்துக் கொண்டுபோகிறவன்தான், எமன்; அவனுக்கு ஒரு வாகனம், எருமைக்கடான்னு சொல்லவே, அவசரமான வேலையாச்சே, ஒரு குதிரையாவது வாகனமா இருக்கப்படாதா, எருமைதானா இருக்கணும், அது அசைஞ்சு அசைஞ்சு அல்லவா நடக்கும்னு கேட்டேன்...

மிராசு:- ஏன் கேட்கமாட்டே...நம்ம வீட்டுச்சோறு அப்படிப்பட்டது...

மா:- நீங்க தின்ன மிச்சம்தானுங்களே, நமக்கு...

மிராசு:- சரி, சரி, ஓட்டு.

[கிராமம் வந்து சேருகிறது, வண்டி. ஒரு பெரிய ஆலமரத்தடியைக்காட்டி]

மிராசு:- வண்டி இங்கேயே இருக்கட்டும்...நான் ஊருக்குள்ளே போயி காரியத்தைப் பார்த்துவிட்டு வர்ரேன்.........டேய்! மாட்டைப் பார்த்துக்கோ.........ஜமக்காளம் இருக்கு, திண்டு கிடக்கு, நீபாட்டுக்கு, எங்காவது சுத்தக் கிளம்பிடாதே...

[வெள்ளி வெற்றிலைப் பெட்டியையும், தடியையும் எடுத்துக் கொண்டு மிராசுதாரன் கிராமத்துக்குள்ளே செல்கிறான்.

வண்டியை அவிழ்த்து விட்டுவிட்டு, மாடுகளுக்கு வைக்கோல் போட்டுவிட்டு, மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு, ஆட்டுக் குட்டிகள் துள்ளிவிளையாடுவதை வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கிறான் மாகாளி.

மாலை நேரம் வருகிறது; பறவைகள் கூட்டம் கூட்டமாகக் கூடுகளை நோக்கிப் பறந்துசெல்கின்றன.

ஆடுகளைமடக்கி சிறுவன் ஊருக்குள்ளே ஓட்டிக் கொண்டுபோகிறான்.



வாத்துகளை, வயலில் மேயவிடுகிருன் ஒருவன்.

இருள் மெள்ள மெள்ள வருகிறது.]

டேய்! மாகாளி! மாகாளி!...... டேய்!...என்று பதறிக் கூவியபடி மிராசுதார் ஓடிவருகிருர், அலங் கோலமாக.

அருகே வந்துகொண்டே கட்டுடா, வண்டியைப் பூட்டுடா! சீக்கிரம் என்று மேல்மூச்சு வாங் கும் நிலையில் கூறிக்கொண்டே, மிரள மிரள, ஊர்ப்பக்கம் பார்க் கிருர். வண்டியைப் பூட்டித் திருப்பி நிறுத்துகிருன் மாகாளி.

விடாதே! விடாதே! பிடி! டேய்! நில்லு! என்று கூவிக்கொண்டே தடிகளுடன் நாலைந்துபேர், மிராசு தாரனை நோக்கி ஓடிவருகிருர்கள், தாக்க.

மிராசு:- (நடுநடுங்கி) மாகாளி!...... கொலேகாரப் பசங்களைப் பாருடா

[என்று கதறுகிருர்.

முதலில் தடியை ஓங்கி ஞன் ஒருவன். மாகாளி, தடியைப் பிடித்து இழுக்க அவன் கீழே விழுந்துவிட் டான், தடி மாகாளியிடம் சிக்கிக்கொண்டது.

மற்றவர்களைத் தடியால் தாக்க ஆரம்பித்தான் மாகாளி. மிராசுதார் வண்டி யின்மறைவில் நின்றுகொள் கிருர். சுழன்று சுழன்று தாக்குகிருன், மாகாளி. :தடி கள் முறிந்து போகின்றன. கீழே விழுகின்றன. தாக்க வந்தவர்கள் விரண்டோடு கிருர்கள். மாகாளி, மிராசு தாரரை வண்டியில் ஏறச் சொல்லி ஜாடை காட்டி விட்டு, வண்டியை ஓட்டு கிருன்:]

மிராசு--வேகமாக ஓட்டுடா மாகாளி! விஷக்கடி வேளைடா......ஊருக்கு இருட்டறதுக்குள்ளே போயிட லாம்...

மா:- பொழுது இன்னும் சரியாச் சாயக்கூட இல்லே, அதுக் குள்ளே வழி மடக்கி அடிக்க வந் தானுங்களே...

மிராசு:- வழி மடக்கி அடிக்கிற வனுங்க இல்லேடா, அவனுங்க. கொலேகாரப்பசங்க......என்னைத் தீர்த்துக் கட்டிவிட வந்தானுங்க, தடியும் தாம்பும் தூக்கிகிட்டு...

மா:- எதனலே விரோதமுங்க...... ஏதாவது நிலத்தகராறு...

மிராசு:-வண்டியை ஓட்டுடாவேகமா விவரம் கேட்டுகிட்டு இருக்க இதுவா நேரம்...

மா:- பயப்படாதிங்க...நான் இருக் கறேன்.........என்னை அடிச்சிப் போட்டுட்டுதானே, உங்ககிட்ட வரவேணும்....பயப்படாதிங்க....

மிராசு:- படுபாவிப்பசங்க, இந்த மாதிரி திட்டம் போடுவானுங் கன்னு தெரிஞ்சிருந்தா, நான் அந்தச் சனியனுக்கு ஆசைப் பட்டே இருக்கமாட்டேன். மாகாளி, உன் மனசோட போட்டுவை. அந்தக் கிராமத் திலே நமக்கு வேண்டியவ ஒருத்தி இருக்கரு...

[மாகாளியின் முகம் இலே சாக மாறுகிறது.]

எப்படியோ, கர்மம் அந்தச் சிநேகம் ஏற்பட்டுப்போச்சி...

[மாகாளி கோபம் கொள் கிருன்.]

மிராசு:- மூணு முடிச்சுப் போடுங்க மூணு முடிச்சுப் போடுங்கன்னு சொல்லிகிட்டே இருப்பா அவ என்னதைக்கண்டா. ஊருக்கு அவமானம் குலத்துக்கு அவ மானம்னு யாரோ கலகம் செய்து விட்டாங்க......ஆகட்டும் பார்க்க லாம், ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்லிகிட்டே இருந்தேன்.

மாகாளி:- அடுக்குமா இந்த அக்ரமம் நம்பினவளை மோசம்செய்யலாமா ...அவ கதி என்ன ஆகும்.

மிராசு.- அதாண்டா மாகாளி, அப்படி எல்லாம்தான் கூவி, கொக்கரிச்சி, கோயிலுக்கு வா, சாமி எதிரே அவளுக்குத் தாலி கட்டு என்று சொலலி, இழுத்துக் கிட்டுப் போனுனுங்க...

மா:- நீங்க அவங்களை ஏமாத்தி விட்டு, தப்பித்துக் கொண்டுவந்து விட்டிங்க...

மிராசு:- அது தெரிஞ்சுதான், தடி தூக்கிகிட்டு ஓடிவந்தாங்க என் னைக்கொன்று போட.

[வண்டியின்வேகம் குறை கிறது.

மாட்டுக்கயிற்றை இழுத்து பிடிக்கிருன் மாகாளி.]

மா:- நான் இருந்தேன், மடயன், அவங்களைத் துரத்திவிட்டு,தர்மப் பிரபுவைக் காப்பாத்த......

[வண்டியை எதிர்ப்பக்கம் திருப்புகிருன்.]

மிராசு:- டே! டே! என்னடா இது என்னடா இது......

மா:- இதுவா,......வண்டி கிராமத் துக்குப் போகுது.......அநியாயக் காரப் பாவி! ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டு, தப்பித்துக் கொள்ளவா பார்க்கறே...

[மிராசுதாரன் வண்டியை விட்டுக் கீழேகுதிக்க முயலு கிருன். ஒரு கரத்தால், அவனை இழுத்துப் பிடித்துக் கொண்டு]

மா:- அவங்களை ஏமாத்தினதுபோல என்கிட்டே செய்தே, எலும்புக்கு

ஒரு அடின்னு எண்ணி எண்ணி கொடுப்பேன்......நான் ஒரு மடப் பய! என்னவிஷயம், ஏன் துரத்தி கிட்டு வர்ராங்கன்னு கேட்டனு... பாவம் அவனுங்களை, தாக்கி னேன் பலமா...

இராசு: மாகாளி! மாகாளி! உன்னைக் கைஎடுத்துக் கும்பிடுகிறேண்டா ...காலிலேகூட விழறேண்டாப்பா ...வண்டியை நிறுத்து...கிராமம் போகாதே வெட்டிப்போட்டு விடுவாங்கடா...

மா:- நீ, செய்திருக்கிற காரியத் துக்கு வெட்டிப்போடாமே, விருந்து வைத்து அனுப்புவாங் களா...

மிராசு:- ஆயிரம், ஐநூறு வேணு மானுகூட கொடுத்துடறேண்டா, மாகாளி,

மா:- யாருக்கு, எனக்குத்தானே!

மிராசு:- அவளுக்கும் வேணுமானு தர்ரேண்டா...ப்பா.

மா.- எதை? பணத்தைத்தானே... பணம் தவிர வேறே என்ன இருக்கு உன்னிடம், கொடுக்க... பணம் இருக்குது, என்ன பாவம் வேணுமானு செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்கிற நெஞ் சமுத்தம். நல்லவேளை, வழியிலே யாவது நான், என்ன விஷயம்னு கேட்டனே.....இல்லையானு உன் னுடைய அக்ரமத்துக்கு நானும் தானே உடந்தையாகி இருப் பேன்...

மிராசு:- மாகாளி!...என்னை என்ன தான் செய்யப்போறே...அந்தப் பயல்களிடம் விட்டு கொலை செய்யச் சொல்லப்போறயா...

மா:- செய்வனு அப்படி. அப்புறம், அந்தப் பொம்பளையோட கதி என்ன ஆகறது? கூட்டிகிட்டு வாங்கய்யா கோயிலுக்கு என் பேன். பெரியவங்களைப்பெத்தவங் களைக் கூப்பிடுன்னுவேன், உம்! ஆகட்டும்னு சொல்லுவேன், மறு பேச்சுப் பேசாமே, அந்தப் பொம்பளைகழுத்திலே தாலியைக் கட்டணும், நான்தான் தோழி மாப்பிள்ளை... நடந்தா அந்தக் கலியாணம்நடக்கணும் இல்லை... நிச்சயமா, கொலை நடக்கும்...

[கிராமத்திற்குள் வண்டி வருகிறது கிராமத்து ஆட் கள்]

டேய்! வந்துட்டான் டா ஊருக்குள்யே என்று கூவி, கும்பலாகச் சேரு கிருர்கள். தொலைவிலிருந்து சிலர் கற்களை வீசுகிருர்கள், மாகாளி யைக் குறி வைத்து.

மாடுகள் மிரளுகின்றன. மாகாளி, ஏர்க்காலில் நின்று கொண்டு, மாடுகள் மிரண்டு ஓடாதபடி கயிற்றையும் இழுத்துப்பிடித்துக் கொண்டு கிராமத்து மக்கள் போடும் கூச்சலை அடக்கும் அள வுக்குக் குரலை உயர்த்தி...

மாகாளி:- பெரியோர்களே! தாய்மார்களே! அமைதி! அமைதி! நான் சொல்வதைக் கேளுங்கள்.

[போடா, டேய்! என்ற கூச்சல் கிளம்புகிறது. கற்கள் மாகாளி மீது விழுகின்றன. இரத்தம் கசிறது]

ஆத்திரம் வேண்டாம், இதோ மிராசுதாரனை அழைத்து வந்திருக்கிறேன்...கலியாணம் செய்து கொள்ள வந்திருக்கிருர்...

[பலர் கைதட்டுகிருர்கள். சிலர்,மற்றவர்களைக்கூச்சல் போடாதீர்கள் என்றுஅடக்குகிருர்கள் சத்தம் அடங்குகிறது]

மா:- முதலிலே எனக்கு உண்மை தெரியாததால், கிராமத்து மக்களை அடித்து விட்டேன். மன்னிக்க வேண்டும் என்னை. இப்போது, நான் உங்கள் பக்கம்... கிராமத்தார் பக்கம்...

(கை தட்டுகிருர்கள்)

நீதியின் பக்கம் நிற்கிறேன் அக்ரமத்துக்குத் துணை போக மாட்டேன். மிராசுதாரன் வந்திருக்கிருன்.கோயிலுக்குப் போகலாம்...பெண்ணைக் கூப்பிடுங்கள்...

அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு, மாகாளியிடம் வருகிருர்கள். மிராசுதாரன் வண்டியிலிருந்து கீழே இறக்கப்படுகிருன்.

தலைவிரி கோலமாக இருக்கும் பெண் இழுத்து வரப்படுகிருள் மாகாளியின் காலைத் தொட்டுக் கும்பிடுகிருள்.

[ஒருஆள் ஓடிவந்து] கோயிற் கதவைப் பூட்டிக்கொண்டு ஐயர் எங்கோ போய்விட்டார், என்று கூறுகிருன்.

மா:- பரவாயில்லை! மேலே நிலவும் நட்சத்திரங்களும்! சுற்றிலும் உற்ருர் உறவினர், ஊர்ப் பெரியவர்கள்; கோயிலாவதுமனிதன் கட்டியது, இந்த இடம் —நாம் நிறகும இடம் — கடவுளே படைத்தது. கோயிலைவிடச் சிறந்தது. கொணடு வாருங்கள் தாலிக்கயிறு. உட்காருங்கள் அனைவரும்...

[தாலியை ஒருவர் கொண்டுவருகிருர்.

மாகாளி, மிராசுதாரன் கையில் கொடுக்கிருன்.

மிராசுதாரன் தயக்கமடைகிருன். மாகாளி, அவன் காலை அழுத்தி மிதிக்கிருன், யாருக்கும் தெரியாமல்.

மிராசுதாரன் தாலி கட்டுகிருன். அவள் அவன் காலைத் தொட்டுக் கும்பிடுகிருள்.

மாடோட்டும் வாலிபன், குழலில் இசை எழுப்புகிருன்.

காற்று பலமாக அடிக்கிறது. மலர்கள் காற்ருல் வந்து விழுகின்றன.

மாகாளி மகிழ்ச்சி அடைகிருன்.]

நிலவு ஒரு மேகத்திலிருந்து மற்ருேர் மேகத்துக்கு ஊர்ந்து செல்வதுபோல் தெரிகிறது.

மாகாளி சாவடித் திண்ணையில் உட்காருகிருன். எதிரே சிலர் உட்காருகிருர்கள்.

பால்வேணுமா?

பழம்வேணுமா!

என்று கேட்கிருர்கள்.

மா:- நமக்குக் கட்டிவருமா பாலும், பழமும்?...சோறும் ஊறுகாயும். இல்லையாஞ கூழும் வெங்காயமும்.

[இரண்டு மூன்றுபேர் ஓடுகிருர்கள்.

ஒருமாது சோறும் ஊறுகாயும் கொண்டுவருகிருர்கள் தண்ணீர் ஊற்றி உப்பு போடுகிருள் மாது. மாகாளி அதைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிருன்.]

ஒருவர்:- ஏண்டாப்பா! எப்படி உனக்கு, இப்படிப்பட்ட தைரியம் வந்தது...

மா:- இது என்ன பெரியவரே, அதிசயம்... கோழிக்குஞ்சை அடிச்சிகிட்டுப் போக பருந்து வருதே, அப்ப கோழி போடுதே சண்டை, வீராவேசமா...

[சிறுவர் சிலர் கைதட்டுகிருர்கள்.]

ஒருவர்:- தம்பிக்கு எந்தஊரு...

மா:- கருவூரு...

ஒருவர்:- எந்தப் பக்கம்...

இன்னெருவர்:- திருச்சினுப்பள்ளிப் பக்கம்னு சொல்வாங்க...'

மா:- நான் அந்தக் கரூரைச் சொல்லலே.........கரூர்னு நான் சொன்னது, கரு...கரு......தாயுடைய கருதானே, நம்ப ஊரு, அதைச் சொன்னேன்...

பெரி:- நிஜமான பேச்சு...

மா:- எல்லா ஊரும் எனக்குச் சொந்தமான ஊர்தான்...

பெரி;- அப்பா, அம்மா?

மாகாளி:- (சோக மடைந்து) யாரும் இல்லை...(தலை அசைத்துக் கொண்டு கூறுகிருன்)

[மேற்கொண்டு சாப்பிட முடியவில்லை மாகாளியால் பேச்சும் ஓடவில்லை. படுத்துக்கொள்கிருன். சிலர், அங்கேயே படுத்துக் கொள்கிருர்கள்.]

[நகரில் மிராசுதாரன் வீடு. கோயில் ஐயர் ஓடி வருகிருர். மிராசுதாரன் மகனிடம் குசுகுசுவெனப் பேசுகிருர். அவன் வேலையாட்களைக் கூப்பிடுகிருன், அவர்கள் பலபக்கம் ஓடுகிருர்கள்.]



வேறிடத்தில்......

[மணமானவள் பாத்திரததில் பாலும், தட்டில் சோறும்வைத்துக்கொணடு மிராசு தாரனிடம் வந்து நிற்கிருள்,

மிராசுதாரன் திகிலும், சோகமும் கொண்ட நிலை யிலே இருக்கிருன்.]

மிராசு:- என் உயிரை வாங்காதே. என் மனம் சாந்தியாக இல்லை. பசி இல்லை,,,...தொல்லை செய் யாதே......

[அவள் பாயும் தலையணை யும் மிராசுதாரனுக்குப் போட்டுவிட்டு தரையில் ஒரு ஓரமாகக் கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு படுத் துக்கொள்கிருள்.

சாவடியில் படுத்துக் கொண்டிருக்கும் மாகாளி, தூக்கம்வராமல் புரண்டு கொண்டிருக்கிருன்.

மோடார் சத்தம் காதில் விழுகிறது.

ஒருவர் விழித்துக் கொண்டு, தம்பி! தூக்கம் வரலியா...கொசுக்கடியா... என்று கேட்கிருர்.

மாகாளி பதில் கூருமல் உற்றுக் கேட்டவண்ணம், 'உஸ்!' என்று சத்தம் செய் யாதிருக்கும்படி ஜாடை காட்டுகிருன்.

சத்தம் வரவர, பலமா கிறது. மாகாளி எழுந்து உட்காருகிருன். கூட இருந் தவர்களும் உற்றுக் கேட் கிருர்கள், அச்சத்துடன்.

மோட்டார் வெளிச்சம் தொலைவில் தெரிகிறது. பல விளக்குகள் தெரிகின்றன.

ஒரு பெரியவர் மெதுவாக "தம்பி! போலீசா!'' என்று கேட்கிருர். பலத்த சத்தத் துடன் ஒரு ஜீப்பும், நாலு லாரிகளும் வருகின்றன.

ஊருக்குள் நுழையும் போதே, காட்டுக் கூச்சல் போடுகிருர்கள், லாரியில் வந்தவர்கள்.

மிராசுதாரன், வெளியே வருகிருன்.

ஜீப்பைப் பார்த்ததும் துள்ளிக் குதித்து,

"சபாஷ்டா–சபாஷ்! என்று கூறிக்கொண்டே ஜீப்பை நோக்கி செல்கிருன்.

அப்பா! என்று அழைக் கிருன் ஜீப்பில் வந்த வாலி பன்.]

பயல்களை விடாதீர்கள்! வெட்டிப் போடுங்கள்: வந்தது வரட்டும்...... காளியை முதலிலே ஒழித்துக் கட்டுங்கள்......

[என்று மிராசுதாரன் கொக்கரிக்கிருன்.

பெருங்கூச்சலுடன் அடி தடி நடக்கிறது. மாகாளி, எங்கும் சுற்றிச் சுழன்று சண்டைபோடுகிருன். லாரி மீது ஏறிக்கொண்டு சண்டை போடுகிருன். லாரியை ஓட்டுகிருன் டிரை வர் வேண்டுமென்றே.

பக்கத்து லாரியில் தாவிக் குதித்துவிடுகிருன் மாகாளி.

கிராமத்து மக்கள் சுருண்டு சுருண்டு விழுகி ருர்கள்.

தாய்மார்கள் மிரண்டு ஓடுகிருர்கள்.

அப்பா! நாம போகலாம். ஊரைக் கொளுத்திவிட்டுத்தான், நம்ம ஆட்கள் திரும்புவார்கள்— எல்லா ஏற்பாட்டுடனும் வந்து இருக்கிருர்கள்......நாம இருக்க வேண்டாம். (என்று கூறுகிருன்.)

[ஜீப் புறப்படுகிறது.

மாகாளி பலமாகத் தாக் கப்படுகிருன்.

கிராமத்தார் பலருக்குப் படுகாயம்.

மூர்ச்சையாகிக் கீழே விழுந்த மாகாளியை லாரி யில் தூக்கிப் போட்டுக் கொண்டு செல்கிருர்கள். வழியில் ஒரு ஆற்றிலே போட்டுவிட்டுப் போய்விடு கிருர்கள்.

மாகாளி கண் விழித்துப் பார்க்கிருன்.

ஒரு எருமையின் முதுகில் சாய்ந்து கொண்டிருப்பதை யும், எருமை, அதிக ஆழ மில்லாத ஆற்றில், நடந்து செல்வதையும் அறிகிருன்.

கீழே இறங்கி, எருமை யைப் பார்த்து,]

என் உயிரைக் காப்பாத்தினயே, உன்னைப் போயி, எமனுக்கு வாக னம்னு சொல்லிவைச்சிருக்காங் களே......

[தள்ளாடி நடக்கிருன்.

ஒரு மூட்டை வண்டியில் செல்கிருன்.

பல ஊர்களில் நடக் கிருன்.

கடுங்கோபம் கொண்ட நிலை பெறுகிருன்.

மோடாரைப் பார்த்தால் கோபம்.

செல்வவான்களைப் பார்த் தால் கோபம்.]

ஒரு ஆள்:- யாரப்பா, நீ, ஊருக்குப் புதுசு...

மா:- (கோபமாக) நான் யாராக இருந்தா உனக்கென்னய்யா...

அவ:- அட, இதுக்கு ஏன் இவ்வளவு கோபம்...

மா:- கோபித்துக்கொண்டா என்ன செய்துடுவே...

அவ:- சுத்த வம்புக்காரனு இருக்க றியே...முரட்டுப் பய,...

மா:- தெரியுதேல்லோ பார்த்ததும், ஒதுங்கிக்கோ என் பேச்சுக்கு வராதே.

[வேகமாக நடக்கிருன்.

லாரிகளில் மூட்டைகளைத் தூக்கிப் போடுகிருன்.

லாரிக்காரர்:- என்ன தரணும் கூலி ......

மா:- பெரிய பிரபு இவரு...கொடுக் கரதைக் கொடய்யா...

[ஒரு சிறிய ஓட்டலில்]

மா:- நாலு இட்லி...

ஓட்டல்காரன்:- நெய் போடட்டுமா?

மா:- வெண்ணெபோடு,வெண்ணெ ...ஆளைப் பார்த்து வியாபாரம் செய்யேன்யா, நெய் கேட்குதா நெய்...இட்லி போதும்...மிளகா சட்னி போடு.

[அதிகமான பாரமுள்ள வண்டியை இழுக்க முடியா மல் கஷ்டப்படுபவனைப் பார்த்துவிட்டு வண்டியை முட்டித் தள்ளிவிட்டு.]

மா:- ஏன்யா, இப்படி உன் சக் திக்கு மீறின வேலை செய்து, சாகறே...

வண்:- என்னப்பா......வயிறு ஒண்ணு இருக்கிதே!

மா:- உனக்கு இருக்குது ஒட்டிப் போயி

[கடையில் உட்கார்ந் திருக்கும் ஆளைக் காட்டி]

அவனைப்பாரு.........வயிறுன்னு அது வயிறு...

[வண்டிக்காரன் சிரிக் கிருன்.]

[ஒரு குளத்தங்கரையில் நிற்கிருன்.

ஒரு புரோகிதர் பார்த்து விட்டு...]

பு:- புண்ய தீர்த்தம்டா...தர்ப்பணம் பண்ணனுமா...

மா:- என்ன பணம்...

பு:- இஷ்டப்பட்டதைக்கொடு...

மா:- அட, நான் அதைச்சொல்ல வில்லை......தர்ப்பணம்னு சொன் னயே...

பு:- அதுவா...உங்க குடும்பத்திலே யாராவது காலமாயிட்டிருப்பாங்க ளேல்லோ, அவாளுக்காகத் தர்ப் பணம் செய்தா, மோட்சத்திலே அவாளுக்கு, சௌக்கியம் கிடைக்கும்...

மா:- அவாளுக்கு! அங்கே! இங்கே நான் சாகறேன் அதுக்கு ஒரு வழியைக் காணோம்...

பு:- அதுக்கு வேண்டியது பணம்...

மா:- (சிரித்தபடி) கெட்டிக்கார ஆசாமிதான் நீ...அங்கே இருக் கிறவங்களுக்குத் தர்ப்பணம்...... இங்கே இருக்கிறவங்களுக்கு பணம்!...

பு:- ஆமாம்...

மா:- எனக்கு இப்ப எந்தப் பணமும் வேண்டாம்...குணம் கெட்டவங் களை எல்லாம் கொன்று குவிச் சாப் போதும்...

பு:- சட்டம் இடம்கொடுக்குமோ...

○

சட்டம் இடங்கொடுக்கத்தான் இல்லை, அக்ரமக்காரனைத் தண்டிக்க விடாமல் பணமூட்டை பாதுகாப்பு தரும்போது, மாகாளி மீண்டும் அந் தச் சிற்றூர் சென்று மிராசுதாரன், கிராமத்துப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டதுபற்றியும், கிரா மத்தாரைத் தாக்கிக் கிராமத்தைக் கொளுத்தி நாசம்செய்ததுபற்றியும் ஊராரிடம் சொல்லி நியாயம் பெற நினைத்தான், கிராமத்துக்குச்சென்ற போது, பெண் தற்கொலைசெய்து கொண்டசேதியும், மிராசுதாரனுக்கு எதிராகச் சாட்சிசொல்லக் கிராமத் தார் அச்சப்பட்டுக்கொண்டிருப் பதையும் அறிந்து பதறினுன். கிரா மத்து மக்கள் அவனிடம் பரிவுகாட் டினர், ஆனல் துணிவு பெற மறுத்துவிட்டனர். மாகாளி கோபித் துக்கொண்டான், கிராமத்து மக் களோ, அந்த மிராசுதாரனுடைய பகையைத் தாங்கிக்கொள்ளும் சக்தி எங்களுக்குக் கிடையாதப்பா, எங்களை மன்னித்துவிடு. ஆனல் இங்கே நீ இருப்பதுகூட ஆபத்து. மிராசுதாரன் மோப்பம் பிடித்தபடி இருக்கிருன்; போலீசில் சிக்க வைத்துவிடுவான், வீணுகத் தொல் லையைத்தேடிக்கொள்ளாதே என்று கூறினர்.

இப்படிப் பயந்து பயந்து செத் துப் பிழைப்பதைக்காட்டிலும் ஒரே அடியாக அக்ரமத்தை எதிர்த்து நின்று கொல்லப்பட்டுச் செத்துத் தொலைக்கலாமே! நீங்கள் இப்படிக் கோழைகளாக இருப்பதால்தான், அக்ரமக்காரர்கள் கொட்டம் அடிக் கிருர்கள்; கொடுமை கொடிகட்டிப் பறக்கிறது! தூ! தூ! என்று கூறி விட்டு அந்தக் கிராமத்தைவிட்டு வேறு இடம் சென்றுவிட்டான்.

அக்ரமத்தைத் தடுத்திட முடிய வில்லை, ஆனல் எதிர்த்து நின்றேன், என் கடமையைச் செய்தேன், அந்த மிராசுதாரன் இனி இவ்வித மான அக்கிரமம் செய்ய எண்ணும் போதெல்லாம் என் நினைவு அல் லவா வரும்! நான் தெரிவேனல்லவா அவன் மனக்கண்முன்பு! — அவ்வ ளவுதான் என்னல் சாதிக்க முடிந் தது. அந்தப் பெண் தற்கொலை செய்துகொள்ளாது இருந்திருப்பா ளானல், கிராமத்தார் ஒத்துழைக்கா விட்டால்கூட, நான் மிராசுதார னுடைய மாளிகையில் அவள் குடி

ஏறுவதற்கான காரியத்திலே ஈடு பட்டு, அதிலேயே மாண்டுபோக நேரிட்டாலும் மகிழ்ச்சியோடு மரணத்தைத் தழுவிக்கொண்டிருப்பேன், இப்போது எனக்கு இருக்கும் திருப்தி, நாம் நமதுகடமையைச் செய்தோம் என்பதுதான். அதனை எனக்கு அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருப்பவை இந்தத் தழும்புகள். பலமானதாக்குதல்! பல மாதங்கள் எனக்கு வலி இருந்தது. என்னென்னமோ பச்சிலைகள், மெழுகுகள், தைலங்கள் புண்ணைக் குணப்படுத்த. மேலேதானே புண் ஆறுகிறது. நெஞ்சிலே ஏற்பட்ட புண்? அது எங்கே ஆறப்போகிறது! மற்ற எவ்வளவோபேர் நமக்கென்ன என்று இருந்துவிட்டாலும், நாம் நமது கடமையைச் செய்தோம் என்ற மகிழ்ச்சி எனக்கு இந்தத் தழும்புகளைப் பார்த்துக் கொள்ளும்போது என்று மாகாளி கூறிஞன்.



மற்றும் சிறுசிறு நிகழ்ச்சிகள் பலப்பல கூறிஞன். ஒரு நிகழ்ச்சி, என் உள்ளத்தில் ஆழமான இடம் பெற்றது. அதனையும் நிகழ்ச்சி நடைபெறுவது போன்ற' வடிவத்திலேயே தருகிறேன்.

O

[ஒரு ஊருக்குச் சற்றே வெளிப் பகுதியில் உள்ள ஒரு கலஞன கட்டடம். மாகாளி ஒருபுறம் சுருண்டு படுத்துக்கொண்டிருக்கிருன்.

இரு வாலிபர்கள், சிகரட் பிடித்தபடி வருகிருர்கள்.

அங்கு ஒரு பக்கமாக உட்காருகிருர்கள். மாகாளி படுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்காமலேயே...]

தாமு:- சோமு.........நீ அதிர்ஷ்டக் காரண்டா...எதுவாக இருந்தாலும் உன் வலையிலே விழுந்து விடுகிறது.

சோமு:- போடா, பூல்!......அதெல்லாம், நம்ம Face Cut personality......தரித்திரப் பயலே, அது தனி Art-தனிக்கலை....

தாமு:- நான் நம்பவே இல்லை...... நளினா உன் வலையில் விழுவாளென்று...

சோமு:- சும்மா சொல்லக்கூடாது, தாமு, நளினா, நெருப்பு, நெருப்பு போலத்தான் இருந்தாள் ஆனால் ......

தாமு:- எப்படிடா...சொல்வேன்... நல்ல இடத்துப் பெண்...

சோமு:- படித்துக்கூடத்தான் இருக்கிறாள்....பல்லைக் காட்டியதும் பரவசமாகிவிடக்கூடிய ஏமாளி அல்ல...கண்டிப்பான சுபாவம்...

தாமு:- அதுதானே, எனக்கும் ஆச்சரியம் எப்படி...?

சோமு:- (கேலியாக) எப்படி......! சொல்லி வருமா அந்த வித்தை! என் பேச்சு, பார்வை, அப்படி! பாகாக உருகினாளே, நான் கண் கலங்கியபோது...

தாமு:- கண் கலங்கினாயா...?

சோமு:- ஆமாம்! அப்படி ஒரு போஸ்! நளினா! என்னால் நீ இன்றி நான் உயிர் வாழ முடியாது...... என்னால் வேதனையை இனியும் தாங்கிக் கொள்ள முடியாது... நாளைக் காலையில், கோயில் திருக்குளத்திலே என் பிணம் மிதக்கும் ....என்று டைலாக்.....அதற்குத் தகுந்த ஆக்ட்...போஸ்...நளினா என்ன, சிலைகூடச் சம்மதம்! சம்மதம்....! என்று கூறுமடா, கூறும்... மண்டு! உனக்கெங்கே தெரியப்போகிறது அந்தவித்தை ...ஒரு புன்னகை தவழ்ந்தது.... கண்களிலே ஒரு மகிழ்ச்சி...... உடனே...

தாமு:- உடனே...?

சோமு:- சத்தியம் செய்தேன்...... "தாயின்மேல் ஆணை...தந்தை மேல் ஆணை....தூயகாதல்மேல் ஆணை "உன்னைத்தவிர வேறோர் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. நீயே என் உயிர்-என் இன்பம்"...என்றேன்...

தாமு!- சொன்னதும்...?

சோமு:- (கேலியாக) சொன்னதும் ...போடா, போ! நடக்க வேண்டியதெல்லாம் நடந்தது.....நடந்து கொண்டே இருக்கிறது...

தாமு:- (தழதழத்த குரலில்) நல்ல அழகு...

சோமு:- (கேலியாக) ஏண்டா உருகறே...ஏய்...!தந்தத்தால் செய்த பதுமையடா அவள்......அடா அடா! சிரிக்கும்போது அவள் கன்னத்திலே ஒரு குழி விழும் ஆஹா ஹா ஹா......அற்புதமா இருக்கும் பார்க்க......விழுங்க விழுங்க...இது என்ன கன்னமா, பச்சரிசி மாங்காயா, என்று கொஞ்சுவாள், கன்னத்தைக் கிள்ளும்போது......அடா அடா அடா! இத்தோடு இருபத்தி இரண்டு, போதும். என்பாள்...

தாமு:- இருபத்தி இரண்டா......... என்னது...

சோமு:- முத்தம்டா, முத்தம்...பரிபூரணமாக நம்புகிறாள் என்னை... திருமணத்துக்கு நாள் பார்த்தாகிவிட்டதா, கண்ணா என்பாள்...ஓ ...என்பேன்...எப்போது "என்று ஆவலாகக் கேட்பாள்... அதோ அந்தச் சந்திரன் மேகத்திற்குள் மறைந்ததும்.....இப்போதே...... இங்கேயேஎன்பேன்...போங்கள் எப்போதும் விளையாட்டுதானா, என்பாள்...

தாமு:- நீ...?

சோமு:- (கேலியாக)...நீ? உடனே, நாள் நட்சத்திரம் பார்த்துச் சொன்னேன் என்று எதிர்ப்பார்க்கிறாயா......பைத்யக்காரா அப்படியே என் மார் மீது சாய்த்துக் கொண்டேன்......அன்பே...... ! என்றாள் இன்பமே என்றேன்... என்னைக் கைவிட மாட்டீர்களே? என்றாள் ...நானா! என்னையாகேட்கிறாய் அந்தக் கேள்வி என்றேன் ...கேட்டபடி, அவள் முகத்தை என் கரங்களில் தாங்கிக் கொண்டு......என் முகத்தருகே கொண்டு சென்றேன்.....பார்! என் முகத்தைப்பார்! இந்தக் கண்களைப்பார்! உன்னைக் கைவிடும், கயவனுடைய முகமா இது என்றேன்...

தாமு:- அவள்...?

சோமு:- அவளா! அதற்குமேல் முடியுமா அந்த பேதைப் பெண்ணால், ஆனந்தத்தை அணை போட்டுத் தடுக்க...நான் நம்புகிறேன் முக்காலும் நம்புகிறேன் என்றாள்.... இதழ்...என்னிடம்.... இன்ப இரவு......இணையில்லா ஆனந்தம்...

தாமு:-(பெரு மூச்சுடன்) கொடுத்து வைத்தவனடா, நீ...அது சரி... நளினாவைத் திருமணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கே வந்து விட்டாயா...

சோமு:- முட்டாள் வருவான் அந்த முடிவுக்கு....நானா!....நளினா ஒரு 'ஒன்வீக்'....ஒரு வார விருந்து.... பிறகு...

[மாகாளியின் பலமானபிடி சோமுவின் கழுத்தில் விழுகிறது. பதறுகிறான்.]

[உடனிருந்தவன் ஓடிவிடுகிறான். கழுத்தைப்

சட்டம் ஒரு கழுதையேதான்!

பிரிட்டனில் சிறைகளை உடைத்துக் கம்பி நீட்டுவதில் மன்னனான ஆல்பிரட் ஹிண்ட்ஸ், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகச் சொற்போர் ஒன்றில் 'சட்டம் ஒரு கழுதை' என்ற தலைப்பில் பேசி வெற்றி பெற்றார்.

ஆல்பிரட் ஹிண்ட்ஸ் சுமார் மூன்று லட்சத்து பதினெட்டு ஆயிரம் வெள்ளி கொள்ளையடித்ததற்காக பன்னிரெண்டு ஆண்டுச் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த போது மூன்று முறை தப்பி ஓடியிருக்கிறார். ஆனால் இறுதியில் தன் மீதிலான தண்டனைகெதிராக வழக்காடி வெற்றி பெற்றார். அவர் குற்றவாளியல்ல என்று கூறி தண்டனை தள்ளுபடி செய்யப்பட்டது.

பிறகு அவர் தன்னைக் கைது செய்த போலீஸ்காரருக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடுத்து வெற்றிபெற்றார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடந்த சொற்போரில்அவர்சட்டம் ஒரு கழுதைதான் என்பதை ஒட்டிப் பேசி 143க்கு 116 என்ற வாக்கு விகிதத்தில் வெற்றிபெற்றார். அப்பொழுது பல்கலைக் கழக மாணவர்களிடம் அவர் கூறியதாவது.

"சட்டம் ஒரு கழுதைதான் என்று உங்கள் சொந்த அனுபவத்தில் நீங்கள் கண்டால் எடுத்துச் சொல்லி அதை மாற்ற முயலுங்கள்."

"வக்கீல்களிடம் போய் பிரயோஜனமில்லை. சட்டத்தை எந்த வக்கீலும் மாற்றமாட்டார். சாதாரண மனிதர்கள் அதைச் செய்ய முடியும்."

"இந்தத் தலைப்புக்கு ஆதரவாக வாக்கெடுப்பு இருந்தால் அது நீதிபதிகள் எல்லாம் வல்ல கடவுள்களல்ல என்பதை அவர்களுக்கு காட்டக்கூடும்."

[பிடித்துத் தூக்கி சோமுவை நிறுத்தியபடி மாகாளி கடுங் கோபத்துடன்]

மா:- பெண்ணைக்கெடுத்த பேயனே! ....ஒன் வீக்.........ஒரு வார விருந்தா அவள் உனக்கு...... (தாக்குகிறன்) மயக்க மொழி பேசி, அவளை நம்பவைத்தாய்! பரிபூரணமாக நம்புகிருள்! நீ, அவளைக் கெடுத்துவிட்டு அதை ஒரு கலை என்று இங்கு பேசிக் கொட்ட மடிக்கிருய்....பைத்யக் காரப் பெண்ணே! பசப்பு வார்த் தையைக் கேட்டுப் பாழாகிப் போனயே அம்மா'...(மீண்டும் தாக்கி) அடப்பாதகா! உன்னை நம்பிய அந்தப் பெண், உன்னை உத்தமனென்று எண்ணிக் கொண்டு,என்னென்ன ஆசைக் கனவுகள், இன்ப எண்ணங்கள், கொண்டு இருக்கிருளோ....... உள்ளத்தில் இடம் அளித்தோம் இனி இதை ஊரறிய உலகறிய கூறி மகிழ வேண்டும்......மாலை சூட்டுவான், மக்கள் வாழ்த்து வார்கள், மணாளனுடனே மதிப் புடன் வாழ்வோம் என்றெல்லாம் எண்ணி,...அவள், மனதிலே மகிழ்ச்சி பொங்கும்...இங்கு நீ... ஒரு வாரம்...என்று, துளிகூட, பழிபாவத்துக்கு அஞ்சாமல்...... யார் இருக்கிருர்கள் நம்மைக் கேட்க......என்ற தைரியத்தில், உன் வீரப்பிரதாபங்களைப் பேசிக் கொண்டிருக்கிருய்...

[தாக்குகிருன் அவன் அடி தாளமாட்டாமல்]

சோமு:- ஐயோ.........ஐயையோ! என்னைக் கொல்லாதே நான் தாங்க மாட்டேன்; சத்யமா இனி அப்படிப்பட்ட தப்பு தண்டாவுக் குப்போக மாட்டேன்.

மா:- இனி தப்பு தண்டாவுக்குப் போகமாட்டாயா.....அயோக்யப் பயலே!.........இப்ப நடந்ததற்கு என்ன சொல்கிறே......நடந்தது நடந்ததுதானு.......யார் அந்தப் பெண்? எங்கே இருக்கிருள்...?

சோ:- பெரிய இடத்துப் பெண் ணய்யா.........விஷயம் தெரியக் கூடாது...இனி அவ்விதம் நான் நடந்தா, கேள்..........கொன்று போடு...

மா:- அடப்பாதகா! ஒருபெண்ணைக் கெடுத்துவிட்டு.......அவள் கதி என்னவென்று கூருமல்.....உன் னிடம் என்னபேச்சு (இழுத்தபடி) நட! அந்தப் பெண்ணைக்காட்டு... அவள் காலில் விழுந்து கதறு... நான்மட்டும் இங்கே இல்லாதிருந் தால், அந்தப் பெண்ணின் கதி என்ன ஆகியிருக்கும் புறப்படு... இப்போதே திருமணமாகவேண் டும்...அவள் வாழவேண்டும்...

சோ:- ஆகட்டும்......என்னை விட்டு விடு......நான் அவளேயே கலியா ணம் செய்துகொள்கிறேன்...

மா:- (கேலியாக) அப்படிங்களா... அப்போ, போயிட்டு வாங்க...... கலியாணத்தன்று, நான் வருகி றேன்......(கோபமாக) ஏண்டா! உன் பேச்சை நம்பச்சொல் கிறயா......... நீதான், 'போஸ்' கொடுப்பயே, 'போஸ்'; கேட்டுக் கொண்டுதான் இருந்தேன், உன் பேச்சை...நான்என்ன ஏமாளிப் பெண்ணு! உன் பசப்பிலே மயங்க.........(தாக்கியபடி) நம்ம 'பாஷை' புரியுதா! புரியு தேல்லோ...

[சோமு திணறுகிருன்]

மா:- அதனுலே, என்னுேடு பேசி, தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணுதே....புறப்படு...அந்தப் பெண் வீட்டுக்கு...

[இழுத்துச் செல்கிருன்]

சோ:- (மெல்லிய குரலில்) நாலுபேர் பார்த்தா கேவலமாப் பேசு வாங்க, என் கையை விடுங்க... நான் ஓடிவிடமாட்டேன்......... சத்யமா...

மா:- ஓஹோ! துரைக்கு இது கேவலமாத் தெரியுதா, நாலுபேர் பார்த்தா கேலியாப் பேசுவாங்க ளேன்னு, சுருக்குன்னு தைக்குது .....ஏண்டாப்பா, Face Cut...... இதற்கே உனக்கு இப்படித் தோணுதே, அந்தப் பெண்ணைக் கெடுத்துக் கைவிட்டுவிட்டா, அவளுக்கு எவ்வளவு கேவலம்... இழிவு... உம்!...நீ ஏன் அதைப் பத்தி எண்ணி இருக்கப்போறே ......நீதான் 'ஒன்வீக்'—போதும் என்பவனுச்சே...

[தலையைக் கவிழ்த்துக் கொள்கிருன் சோமு.

இருவரும் நடக்கிருர்கள். எதிரே, சில பெண்கள் வரு கிருர்கள்.

இவளா? அவளா? என்று கேட்பதுபோல காளி ஜாடை செய்கிருன்.

இல்லை இல்லை என்பதை சோமு ஜாடையால் தெரி விக்கிருன்.

எதிர்ப்புரமிருந்து வள்ளி சைகலில் வருகிருள்.

சோமுவின் கண்களிலே திருட்டுத்தனம் தெரிகிறது]

மா:- வருஷம் பத்து ஆனுலும் விட மாட்டேன்...தெரியுதா...இப்படிப் பட்ட ஆசாமியைக் கண்டா, நமக்கு விருந்து...புரியுதா...

[சோமு வள்ளியைப் பார்க்கக்கண்டு]

மா:- அதோ வருதே, ஒருபெண்ணு சைகலில்...?

சோ:- (மெல்லிய குரலில்) அந்தப் பெண்ணுதான்...

[சைகல் அருகே வரு கிறது. தன்னை யாரோ இரு வர் தடுத்து நிறுத்துவதாக எண்ணிக்கொண்டு வள்ளி திகிலடைகிருள்.]

மா:- சைகில் சவாரியா......பட்டத் தரசனை நானே கூட்டிகிட்டு வந் திருக்கிறேன்...இறங்கு கீழே ...

[திகைக்கிருள்[

மா:- இறங்கு...ஏமாளிப்பெண்ணே! வா, இப்படி...ஏன் இப்படி விழிக் கறே...

வ:- (திணறி) யாரு......என்ன...... என்னய்யா இது...என்னை ஏன் மிரட்டறே...யாரு நீங்க...

மா:- (சோமுவைப் பிடித்திழுத்து வள்ளி எதிரே நிறுத்தி) புரியுதா, ஏன் உன்னைக் கூப்பிட்டேன் என்கிறது.........வந்திருக்காரே உன்னை வாழவைக்கும் மணுளர் ...வாம்மா, வா!...என்னு, நம்ம காதலரை, யாரோ ஒரு முரட்டுப் பய இழுத்துக்கொண்டு வருகிரு

னேன்னு திகைக்கறியா...வேறே வழியில்லை...அதனாலே இப்படி...

வ:- என்ன செல்றீங்க...ஒண்ணும் புரியலையே...

மா:- (கோபமாக) இரகசியம் தெரிந்துவிட்டதே என்று திகைப்பா? இப்படி மூடிமூடி மறைத்துத்தானே, நாசமாகப் போறிங்க...இப்படிப்பட்ட பயல்களும், உங்களை, நம்பவைத்து நாசமாக்க, முடிகிறது...

வ:- (சோமுவையும் மாகாளியையும் மாறிமாறிப் பார்த்தபடி) ஒன்றும் விளங்கவில்லையே...... என்னய்யா இது...

மா:- இப்போதும், இவனுக்கு எங்கே மனக்குறை வந்துவிடுகிறதோ, என்றுதானே பார்க்கிறாய்? புத்திகெட்ட பெண்ணே! இவன் உன்னை எமாற்றிவிடப் பார்த்தான்...... காதலித்தானே, அதே காதகன்! கண்ணே! என்றானே, மணியே என்றானே, அதே கயவன்! உன்னைத் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை...ஒருவாரம் போதுமாம்... என் காதால் கேட்டேன் இவன் பேசியதை நல்ல வேளையாகக் கேட்டேன்....கேட்டதால், கெட இருந்த உன் வாழ்வு, அழிய இருந்த உன்கற்பு, போகஇருந்த உன்மானம், மீண்டும் கிடைக்க வழி ஏற்பட்டது. வா! உன் வீட்டுக்கு! உன் அப்பா, யார்...? பார்த்துப் பேசவேண்டும்......... இவனும் வருவான்......திருமண நாள் குறிப்போம்.....நாளென்ன நாள்! நல்லது நடக்கும் நாளெல்லாம் நல்ல நாள்தான்...புறப்படு, புறப்படு...

வ:- (சிறிது புன்னகையுடன்) திருமணம்...எனக்கா...

மா:- ஆமாம், ஆமாம்......ஒத்துக் கொண்டான்...

வ:- (சிரிப்புடன்) யார்? இவரா?

மா:- (வெறுப்புடன்) ஆமாம்.....பரிபூரணமாகத்தான் நம்பினாயே இவ...ரை...

வ:- (மேலும்சிரித்தபடி) பைத்யமே! பைத்யமே! அவர் யாரோ? நான் யாரோ? ஐயா! உம்மிடம் நல்லதுக்குப் போராடும் வீரம் இருக்கிறது......ஆனால், சுலபத்திலே ஏமாந்துவிட்டீர்.........எனக்கும் இவருக்கும், முன்பின் பழக்கமே கிடையாது...

மா:- ஏய்...!...என்னது இது...... என்றுகூறி சோமுவைத் தாக்க, (வள்ளி குறுக்கிட்டு)

வ:- முரட்டுத் தனத்தாலே என்ன காரியத்தைச் சாதிக்கமுடியும்... இப்போதுதான் எனக்குக் கொஞ்சம் விஷயம் விளங்குகிறது...... காதலித்தவளைக் கைவிட இருந்தார் இந்த ஆசாமி.........கண்டு பிடித்துவிட்டீர்...அந்தப் பெண்ணுக்காக, அவள் வாழ்வுக்காக, மானத்துக்காகப் போராடுகிறீர். ...

மா:- ஆமாம்...

வ:- ஆனால் அந்தப் பெண், நான் அல்ல...

மா:- இவன் காட்டினானே. உன்னை ......

வ:- அடி தாங்கமாட்டாமல். யாரையாவது காட்டித் தப்பித்துக் கொள்ளலாம் என்று, சுலபத்திலே, ஏமாற்றமுடியும் உம்மை என்ற எண்ணத்தால்...

மா:- (கோபத்துடன்) அட பழிக்கஞ்சாதபாதகா! (தாக்கி) இப்படியுமா ஒரு சுபாவம்!......நான் ஒரு முட்டாள்......உன்னை நம்பிவிட்டேன்.

வ:- பார்த்தீர்களா! நீங்களே இவன் பேச்சை நம்பிவிட்டீர்களே...... ஒருபெண் ஏமாந்ததிலே என்ன ஆச்சரியம்.... அடிக்காதீர்கள்... பக்குவமாகப் பேசி...

மா:- (கேலியாக) வாடா, என்ராஜா! என்று கெஞ்சி, புண்யவானே, அந்தப்பெண்ணை ஏற்றுக்கொள் என்று சொல்லிக் காலிலே விழவேண்டுமா...

வ:- ஒரு பெண்ணுடைய வாழ்வுக்காக இவ்வளவு பரிந்து பேசும், உங்கள் குணம் தங்கம்...தங்கமய்யா தங்கம்...ஆனால், முறை தெரியவில்லை,............தாக்கித் தாக்கியா திருத்தமுடியும்......... சாகடிக்கலாம்......

மா:- இப்படிப்பட்ட ஈனர்கள் செத்தால் என்ன.........சாகடித்தால் என்ன...

வ:- ஒன்றுமில்லை.....எந்தப் பெண்ணுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடுகிறீரோ, அந்தப் பெண்ணின் கதி என்ன ஆகும்.....நாசமாய்ப் போகும்......அழிக்கத்தான் தெரிகிறது உமக்கு.....வாழவைப்பது இந்த முறையால் அல்ல...

மா:- (வெறுப்புடன்) இந்த முறையால் அல்ல! வேறேஎன்னவாம், ஒரு பள்ளிக்கூடம் நடத்தி இவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கச் சொல்கிறாயா .... பெண்ணே! உனக்குப் பேசத் தெரிகிறது...சும்மா இரு...

[சோமுவின் கழுத்தைப் பிடித்திழுத்து]

யார் அந்தப் பெண், உண்மையைச் சொல்லு...உதைபட்டுச் சாகாதே...

வ:- சொல்லய்யா, யார் அந்தப் பெண்...இதோ பார். ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்குவது தர்மமா, நியாயமா,...... உங்களை எவ்வளவு நம்பி தன்னை ஒப்படைத்தாள், துரோகம் செய்யலாமா...

மா:- இந்தக் கல்நெஞ்சனிடம், உன் கனிவான பேச்சு, பலிக்குமா அம்மா......அவனுக்குப் புரிவது ஒரேஒரு பாஷை...தான்.

[தாக்குகிறான். வள்ளி குறுக்கிட்டுத் தடுக்கிறாள்.]

மா:- (கோபமாக) தா! பெண்ணே! இதிலே குறுக்கிடாதே...நீஅல்ல, இவனிடம் ஏமாந்தவள்......பிறகு உனக்கென்ன வேலை இங்கே... போ, பேசாமல்...நான் பார்த்துக் கொள்கிறேன்.

வ:- தெரிகிறதே நீங்கள் பார்த்துக் கொள்கிற இலட்சணம். பக்குவமாகப் பேசி, உண்மையைத் தெரிந்துகொள்ளத் திறமை இல்லை. புத்தி புகட்டி, மனதை மாற்றத் தெரியவில்லை...

அமெரிக்கத் தவளையின் சாகசம்

ஒவ்வொரு ஆண்டிலும் கலாவெராஸ் கிராமப் பகுதியில் நடைபெறும் தவளை குதிக்கும் போட்டி நடைபெற்றபோது 'இம்பாலா' என்ற பெயர் கொண்ட தென் ஆப்பிரிக்கத் தவளை 11 அடி 5 அங்குலம் தாண்டிக் குதித்து வெற்றிவாகை சூடிக்கொண்டது.

வெளி நாட்டுத் தவளைகளுக்கான போட்டியில் இம்பாலா கலந்து கொண்டது.

'ஹாப்ஸ்' என்ற பெயர் கொண்ட கலிபோர்னியா தவளை 14 அடி 9 அங்குளம் தூரம் தாண்டிக் குதித்து உள்நாட்டுத் தவளைகளுக்கான போட்டியில் பரிசைத் தட்டிக்கொண்டுவிட்டது.

சுமார் ஐம்பதாயிரம் பேர் போட்டியைக் காண குழுமியிருந்தனர்.

மா:- அம்மா, மகராஜி! அந்தத் திறமை எல்லாம், உங்களோடு இருக்கட்டும்...என் திறமை அவனுக்குத் தெரியும் (சோமு அடிபட்ட இடத்தைத் தடவிக் கொள்கிருன்) உனக்கு எப்படித் தெரியும்......உனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்...தலையிடாதே ...போ, பேசாமல்.

வ:- எனக்குச் சம்பந்தமில்லாத விஷயமா...சரி...உமக்கு மட்டும், என்ன சம்மந்தம்......இவனுல் கெடுக்கப்பட்டவள் யார்,? உன் அக்காவா, தங்கையா?...

மா:- யாராக இருந்தால் என்ன? ஒரு ஏமாளிப் பெண்—அது போதும், நான் தலையிட...

வ:- நீதிக்காகப் போராடுபவர்கள் லட்சத்தில் ஒருவர் கூட இருப்பது கஷ்டம்..ஆடவர்களிலே இப்படிப் பட்ட ஒரு அபூர்வ மனிதர் இருப்பது கண்டு நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறேன் தெரியுமா...பெண் குலத்தின்சார்பிலே வாதாட, போராடா இப்படிப் பட்ட வீரர்கள் தேவை...நிரம்பத் தேவை...வீரம் இருக்கிறது தங்களிடம் நிரம்ப.........விவேகம் இல்லை...

மா.- முட்டாள், முரடன்-நான்...... அதைத்தானே அம்மா, நாசுக்காகச் சொல்கிருய்...சரி, நான் இவனை இழுத்துக் கொண்டு போய், முச்சந்திக்கு முச்சந்தி நிறுத்திப் பேசப் போகிறேன்... அந்தப் பெண்ணின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கும் வரையில், வேறு வேலை எனக்குக் கிடையாது...

வ:- நீ முச்சந்திகளிலே இவனை நிறுத்தி வைத்து முரட்டுத்தனமாக நடத்துவாய்—ஊரார்—இவனுக்குவேண்டியவர்கள்-போலீஸ் —எல்லாம், கைகட்டி வாய் புதைத்து, ஓஹோ! ஒரு இலட்சிய வீரன் போராடுகிருன், நாம் குறுக்கிடக்கூடாது என்று இருப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிருய். உள்ளத்திலே நல்ல எண்ணம் இருக்கிறது......உலகம் தெரியவில்லையே...யாரும் துணை இல்லாததால், இவன் சும்மா இருக்கிருன்....நாலுபேர், தெரிந்தவர்களைக் கண்டால் போதுமே, காகா வென்று கூச்சலிட்டு, திருடன! திருடன்! முரடன்! கத்தியால் குத்த வந்தான் பணத்தைப் பறித்துக் கொண்டான் என்று கூவுவான்....ஊர் பூராவும் உன் மீது...உன் வலிவு பயன் படாது...போலீஸ் வரும் கோர்ட்டிலே நிறுத்துவார்கள்...கையில் விலங்குபோட்டு....நீ கூறுவாய், இவன் ஒரு பெண்ணைக் கெடுத்த பேயன், திருத்தப் பார்த்தேன் என்று கோர்ட்டிலே; கை கொட்டிச் சிரிப்பார்கள், ஆழ்வார்கள் நாயன்மார்களுக்குப் பிறகு அவதரித்திருக்கிருர் ஐயா இந்த மகான்!—என்று கூறி—வழிப்பறி நடத்திய குற்றத்திற்காக ஆறு வருடம் தண்டனை தருவார்கள்... இவன் வெற்றிச்சிரிப்புடன் வேறு வேட்டைக்குக் கிளம்புவான்— இவனுல் நாசமாக்கப்பட்ட பெண் குளத்தைத் தேடுகிருளோ விஷத்தைத் தேடுகிருளோ, யார் கண்டார்கள்...

மா:- நன்ருகத்தான் பேசுகிருய்.... நியாயமாகத்தான் பேசுகிருய்... உலகம் அப்படித்தான் இருக்கிறது...ஆனுல்,...அந்தப் பெண்ணின் வாழ்வு நாசமாகலாமா... நீயும் ஒரு பெண்...சொல்லம்மா, சொல்லு......இந்தப் பேயனைச் சும்மாவிடலாமா...

வ:- (சோமுவிடம் கனிவாக) ஐயா! பழிபாவத்துக்கு அஞ்சவேண்டாமா...அடுக்குமா உமது போக்கு அபலையை நாசமாக்கலாமா...... உம்மிடம் கொஞ்சி இருப்பாள், கெஞ்சி இருப்பாள்........சத்தியம் சத்யம் என்று கூறி நம்ப வைத்திருப்பீர்...அவளைக் கைவிட்டால் அவள் மானமழிந்து வாழ்வாளா ......நமது சமூகத்துக்கே இழிவு அல்லவா...ஐயா!

தாயின் வயிற்றில் பிறந்தீர் தாய்க்குலத்துக்கு இழிவு தேடலாமா! அக்கா தங்கை இல்லையா உமக்கு! உமது காதலை நம்பினுளே அந்தப்பெண், அவளிடம் சரசமாடிக்கொண்டிருக்கும்போதே, அவளைச் சாகடித்துவிட்டிருக்கலாமே......அது எவ்வளவோ மேல்! இதைவிட...

[சோமு கண்கலக்கமடைகிருன். மாகாளி அதைக் காண்கிருன்.]

வ:- அவளுடைய அழகுகண்டீர்... உமது மனம் அவளை நாடிற்று... அருகே அழைத்தீர்......ஆயிரம் தடவை, அவள், தடுததிருப்பாள் ஆகாது, அடுக்காது, முறையல்ல நெறியல்ல, என்று, என்னென்ன கூறினீரோ,..கவிதை பாடி இருப்பீர், கதை சொல்லி இருப்பீர், கைநீட்டடி, சத்யம் என்று சொல்லி இருப்பீர்......... நம்பினுள்...அவளை நாசமாக்கா தீர்............நான், அவளுடைய தமக்கைஎன்று வைத்துக்கொள்ளும்....காலில் விழச்சொன்னுல் கூட விழுகிறேன்.

சோ:- (விம்மும் நிலையில்) அம்மா! என்னை மன்னித்துவிடு......மன்னித்துவிடம்மா, மன்னித்துவிடு.

வ:- அவளை உமது நிரந்தர விருந்தாக்கிக்கொள்ளுமய்யா .... அவளிடம், பெற்ற அன்புக்குக் கட்டுப்படுவதுதான் தர்மம். அந்த அன்பு ஒன்றுக்கு ஆயிரமாக ஓங்கிவளரும்......குடும்பம் தழைக்கும்.

[வள்ளி கண்கசிகிருள், அதைக்கண்ட மாகாளி]

மா:- நீ, ஏனம்மா அழுகிருய்...... பாரடா பார்! பேயனே! அந்தப் பெண்ணின் கண்ணீருக்காவது பயப்படு...

வ:- அந்தப் பெண் வீட்டிலே திருமணத்துக்கு எதிர்ப்பு இருந்தால் கூட, நான் கெஞ்சிக் கூத்தாடி, சம்மதம் பெற்றுத்தருகிறேன்...

ஆமை ஓட்டில் சீட்டு!

சீட்டாட்டம் உலகிலேயே மிகத் தொன்மையான விளையாட்டுக்களில் ஒன்று. ஒவ்வொரு நாட்டிலும் எத்தனையோ வகைச் சீட்டாட்டங்கள் உள்ளன. உலக முழுவதிலும் எத்தனை சீட்டாட்ட முறைகள் உள்ளன என்று அறிவதை மேற்கு ஜெர்மன் வரலாற்று ஆராய்ச்சிநிபுணர் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிருர். சீட்டாட்டத்தில் 3,500 விளையாட்டுக்கள் உள்ளதாக இவர் கணக்கிட்டிருக்கிருர்.

பண்டைக்காலம் முதல் இன்று வரை பயன்படுத்தப்பட்ட சீட்டுக்களையும் அவர் சேகரித்து வைத்திருக்கிருர். இதுவரை 1,10,000 சீட்டுகளை அவர் சேகரித்திருக்கிருர் இந்தியாவில் பண்டைக்காலத்தில் ஆமை ஓடுகளில் சீட்டுத் தயாரித்து நான்கு விதமான ஆட்டங்களை ஆடினுர்கள். பிறகு தோலில் செய்த சீட்டுக்கள் பிரபலமாயின. ஆரம்பத்தில் இந்தியாவில் ராணுவ வீரர்கள்தான் சீட்டாடினுர்கள், சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதியை குடிப்பதிலும், சூதாட்டத்திலும் இந்திய இராணுவத்தினர் செலவிட்டார்கள் என்று ஜெர்மன் நிபுணர் கூறுகிருர்.

[வேறோர் சைகலில் வேறோர் பெண் வருகிறாள். வள்ளியைப் பார்த்துவிட்டு]

வள்ளி! வள்ளி! எங்கே...... இப்படி...

[சோமுவைப் பார்த்தபடி தலை குனிகிறாள். சோமு கூச்சமடைந்து தலையைக் கவிழ்த்துக்கொள்கிறான்.

மாகாளியும் வள்ளியும் அதைக்கண்டு ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்கின்றனர்.

மாகாளி, பெண்கள் அறியாமல், சோமுவை இடித்து வந்தவளைக்காட்டி, இவளா? என்று ஜாடையால் கேட்கிறான்.

வெட்கமும் புன்னகையும் கொண்ட நிலையில், சோமு ஆமாம், என்று தலையை அசைக்கிறான்.]

வ:- நீதானா...நளினா......என்னிடம் கூட இத்தனை நாள் மறைத்து வைத்தாயே...

நளி:- சொல்லிவிட்டாரா...

மா:- உம்......உம்! சொல்லி நாள் பார்க்கச் சொல்லுகிறார்...

வ:- வாருங்கள், நளினி வீட்டுக்குப் போவோம்......பெரியப்பாவிடம் பேசலாம்...

மா:- பெரியப்பாவா...?

வ:- ஆமாம், நளினியின் அப்பாவை நான் செல்லமாகப் பெரியப்பா என்றுதான் கூப்பிடுவது......... நானும் நளினியும் ஒன்றாகப் படித்தவர்கள்...

மா:- (குறும்புப் புன்னகையுடன்) நான் நம்பமாட்டேன்......இதோ இவ...ரும் நம்பமாட்டார் உனக்குத் தெரிந்ததில் ஆயிரத்தில் ஒருபகுதிகூட.......அதுக்கு...... நளினிக்குத் தெரியாது...

வ:- இந்தமாதிரி, சாந்தமாக வருஷத்திலே எத்தனை தடவை ......ஒரு மூன்று நாலு தடவை யாவது இருப்பது உண்டா?

மா:- மனதிலே குமுறல் இருக்கும் போது, சாந்தி எப்படி ஏற்படும்? ......

வ:- ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மா:- அதற்கு ஒன்று உணர்ச்சி யற்ற மரக்கட்டை ஆகிவிட வேண்டும்... அல்லது செத்துத் தொலைக்க வேண்டும்.

[இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் சோமு, நளினாவின் கரங்களை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொள்கிறான்.]

மா:- என் கதை கிடக்கட்டும்... இனி இந்தப் பெண் விஷயம்.

வ:- நான் பொறுப்பு ... திருமணம் நடக்கும்...

மா:- மனம் நிம்மதி அடைந்ததம்மா, நான் வருகிறேன்...அபலை அழியாது பார்த்துக்கொள்ள முடிந்தது......என்றும் ஏற்படாத மகிழ்ச்சி எனக்கு...

வ:- கோபம், ஏன் வருகிறது தெரியுமா...

மா:- நமக்குப் பிடிக்காதது நடக்கும்போது, கோபம் வரத்தானே வரும்...

வ:- நமக்குப் பிடிக்காதது மட்டுமல்ல...நம்மால் தடுக்க முடியாதது நடந்தாலும், கேபாம் வரும் ......நம்மால் தடுக்க முடியவில்லையே என்பதாலே, கோபம், வெட்கம், இரண்டும் சேர்ந்து கொட்டுகிறது.

மா:- உண்மைதான் ...... எனக்கு, அக்ரமத்தைக் கண்டால் கட்டோடு பிடிக்காது...கோபம்தான் வரும்...

வ:- அக்ரமத்தைப் போக்க முடிவதில்லை...

மா:- ஆமாம்...முடிவதில்லை.

வ:- ஏன்? முயலுவதில்லை......நம்மால் ஆகுமா, என்ற பயம்.

மா:- அதுவும் உண்மைதான்...

வ:- ஆனால், கோபத்தால் என்ன பலன்? அக்ரமம் ஒழிகிறதா? உம்! அதுதான் இல்லை. கோபம் நம்மையே அக்ரமம் செய்ய வைக்கிறது...

மா:- வலியோர் எளியோரை வாட்டும்போது ... எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்...

வ:- முடியாது...கூடாது ... ஆனால் அதற்காக நாமே, துடுக்குத் தனம் செய்வதா...?

மா:- அப்போதுதானே, அக்ரமக்காரன், அடங்குகிறான்...

வ:- சரியாகச் சொன்னாய் ... அக்ரமக்காரன் அடங்குகிறான்...அக்ரமம் அழிவதில்லையே ... அக்ரமம் கூடாது என்பதுதானே உன் நோக்கம்...

மா:- ஆமாம்......ஆனால் வழி தெரியக் காணோமே...

வ:- அடேயப்பா! அவ்வளவு சுலபத்திலா, வழி கிடைத்துவிடும்...

○

அவ்வளவு சுலபத்திலா வழி கிடைத்துவிடும் என்று வள்ளி சொன்னது போலத்தான், நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நளினாவைத் திருமணம் செய்துகொள்ள சோமு இணங்கினான், ஆனால் சோமுவின் தந்தை சீறினார், சோமுவின் தாய் மாமன் படை திரட்டினான். வள்ளியின் தூண்டுதலே இதற்குக் காரணம் என்று தூற்றினான். வள்ளிக்கும் மாகாளிக்கும் கள்ளக் காதல் என்று கதை கட்டிவிட்டான். இது வள்ளியை மணந்துகொண்டவன் காதிலே விழுந்தது; விவாக விடுதலைக்கான வழக்குத் தொடுத்துவிட்டான்; சோமுவின் மாமன் சாட்சி.

நளினாவின் திருமணத்தன்று ஒரே கலவரம் — மூட்டிவிடப்பட்ட கலவரம். அதிலே மாகாளிக்குத் தான் பலமான தாக்குதல்.

அந்தத் தாக்குதலில் கிடைத்த காயங்களுக்காகத்தான், மாகாளிக்கு உடலெங்கும் கட்டுப்போட்டிருந்தார்கள்.

மாகாளியின் உடல்நிலை தேறுவதற்காக வள்ளி மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டாள். அவள் அடிக்கடி மருத்துவ மனை சென்று வந்ததையே கூடக் காரணமாக்கிக் காட்டினார், வழக்கறிஞர், விவாக விடுதலைக்காக.

மாகாளியின் மனம் எரிமலையாகக் கொதித்தது; வள்ளியோ அமைதியை இழக்கவில்லை; புன்னகையைக்கூட இழக்கவில்லை.

தூற்றுகிறார்கள், அதனால் என்ன! என் உள்ளத்தில் தூய்மை இருக்கிறது; எனக்கு ஒரு அண்ணன் கிடைத்ததாக எண்ணி நான் பெருமைப்படுகிறேன் என்று வள்ளி சொன்னபோது, எதற்கும் அழுது பழக்கப்படாத மாகாளி கசிந்து கண்ணீர் வடித்தான். நான் இத்தகைய பாச உணர்ச்சியை, நேச உணர்ச்சியைக் கண்டதே இல்லையம்மா, கண்டதே இல்லை, என்று கூறி, வள்ளியின் கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான்.

மருத்துவர், 'மாகாளி! உனக்கு இனி ஆபத்து இல்லை. ஆனால் உடலில் பல இடங்களிலே தழும்புகள் இருக்கும், மறைய நெடுங்காலம் பிடிக்கும்' என்றார்.

"தழும்புகளா! அவை மறையவே வேண்டாம் டாக்டர்! அவை அப்படியே இருக்கவேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். நான் பெற்ற பரிசுகள் அல்லவா அவை! அக்ரமத்தை எதிர்த்து நிற்கும் என் கடமையை என்னால் முடிந்தமட்டும் செய்தேன் என்பதற்கான அடையாளங்கள்!" என்றான்.

டாக்டருக்கு அவன் கூறியதன் முழுப் பொருள் விளங்கவில்லை.

"என் தங்கை மட்டும் எனக்கு அனுமதி கொடுத்தால், இன்னும் ஒரே ஒரு தழும்பு, கடைசீ தழும்பு பெற முனைவேன்...இந்தக் குணவதியைத் தவிக்கச் செய்து, தூற்றித் திரிபவனைத் தாக்கித் தாக்கித்............" என்று கூறியபடியே, களைப்பால் மாகாளி மயக்கமுற்றான்.

அவன் விரும்பிய கடைசீ தழும்பை அவன் பெறமுடியவில்லை; வள்ளி அதற்கு அனுமதி கொடுக்காததால் அல்ல; வள்ளியை மணந்தவன், சதி செய்து, மாகாளியின் உணவில் நஞ்சு கலந்து கொடுத்ததால், மாகாளி மாண்டுபோனான்.

அவன் மறைந்தாலும் அவன் பெற்ற தழும்புகள் எவர் மனதையும்விட்டு மறையக்கூடாது, அவை உணர்த்தும் பாடங்களும் மங்கிவிடக்கூடாது என்பதற்காகவே 'தழும்புகள்' பற்றிய இந்தத் தகவலைத் தந்திருக்கிறேன்.

●

காதல்!

[சிங்கை முகிலன்]

பூத்துக் குலுங்கும் மலர்களின் மணம், அந்தத் தோட்டமெங்கும் பரவிக்கொண்டிருந்த நேரம்!

அன்றலர்ந்த மலர்களின் பொலிவும் அதை நாடிவரும் வண்டுகளின் மொழியும் மலர்க் கூட்டத்திற்கே மகிழ்ச்சி தரும் நன்னாட்களைப்போல் காட்சியளித்துக் கொண்டிருந்தன!

உதிர்ந்துவிட்ட மலர்களைப் பற்றியோ, இனி உதிரவிருக்கும் மலர்களைப்பற்றியோ கவலைப்படாத மலர்க்கூட்டங்கள், நாடிவரும் வண்டினங்களின் மோக மொழியைக் கேட்டு மெய்மறந்து கிடந்தன!

அப்போதுதான் இதழ் விரித்த ஒரு மலர் நேற்றுவரை அடிக்கொருதரம் வந்து பார்த்துவிட்டுச் சென்ற காதல் வண்டார், இன்று ஏன் வருவதற்குத் தாமதம் என்று சிந்திக்க ஆரம்பித்தது.

புதுமலரின் பொலிவைக் கண்டு புன்னகை புரிந்தவண்ணம் அங்கு வந்த காதல் வண்டு, 'நான் வரத் தாமதமாகி விட்டதால் என்மேல் வருத்தமா! என்று கேட்டவாறு அதனருகில் நெருங்கியது.

'எவ்வளவுநேரம்காத்திருப்பது! இப்படியா என்னைச் சோதிக்க வேண்டும்!' என்று வருத்தத்துடன் கூறிவிட்டு வண்டாரின் அணைப்பிறகு இடம்கொடுத்து இன்பத்தில் மூழ்கியது!

'வரும் வழியில் ஒன்றா இரண்டா! எவ்வளவோ வேலை! எதிர்ப்பட்டதற்கெல்லாம் ஏற்றவாறு வேறு நடந்துகொள்ள வேண்டும். இந்தவகையில் தாமதப்படுவது இயற்கை தான் என்றாலும் நீ புதிதாகஇருப்பதால் புரிந்துகொள்ள நாளாகும்' என்று வண்டு கூறிவிட்டு, மீண்டும் அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றது.

✲

மறுநாள்....

காலை மலர்ந்தது. உயிரினங்கள் விழித்தெழுந்தன.

நேற்றிருந்த பொலிவு இன்று தனக்கில்லாததையறிந்த அந்த மலர் 'காதலர்வருவாரா? அல்லது கைவிட்டு விடுவாரா?' என்ற கவலையால் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது.

அப்போதுதான் அப்பக்கமாக வந்த அந்த வண்டு, இந்த மலரின் நிலையைப் பார்த்தும் பார்க்காதது போல் வேறு மலரை நாடிச் சென்றது. இந்தத் துரோகத்தைக் காணச் சகியாத அந்த மலர். மேலும் சோபையிழந்து தலையைச் சாய்த்தவாறு காட்சியளித்தது.

'நாளை வீழ்ந்துவிட விருக்கும் அந்த மலரை கடைசிமுறையாகச் சந்தித்து, ஏதாவது ஆறுதல் சொல்லவேண்டும்' என்று நினைத்த காதல் வண்டு மீண்டும் அந்த மலரிடம் நெருங்கியது.

சோகமே உருவாகநின்ற அந்த மலர், 'இதுதான் நீ என்மேல் கொண்ட காதலா?' என்று கேட்டது.

இந்த வார்த்தையைக் கேட்ட வண்டு, அதற்காக வருந்தவில்லை, வளையவில்லை! சிரிக்க ஆரம்பித்தது!

'எதற்காகச் சிரிக்கிறாய், எனது நிலையைக் கண்டா? உனது நிலையைக் கண்டா? எதற்காக?' என்று மலர் ஆத்திரமாகக் கேட்டது.

'யார் நிலையைக் கண்டும் நான் சிரிக்கவில்லை. இன்றைய காதல் எப்படிப்பட்டதென்பதை நீ புரிந்துகொள்ளாமலிருக்கிறாயே, என்பதை எண்ணித்தான் நான் சிரித்தேன்' என்று அமைதியாக வண்டு பதில் கூறியது.

இந்த வார்த்தையைக் கேட்ட மலர், மேலும் தன் பொலிவையிழந்துவிட்டதுபோல் காட்சியளித்தது!

வண்டு, மேலும் அங்கு நிற்பதற்கு விரும்பாததால் 'வருகிறேன்' என்று கூறிவிட்டு வேறு மலரை நாடிச்சென்றது!

✲

வண்டு மட்டுந்தானா இப்படி?

ஊர்ப்பெயர்கள்

[டாக்டர். மா. இராசமாணிக்கனார்]

முன்னுரை

தமிழக வரலாற்றில் கடைச்சங்க காலம் ஏறத்தாழக் கி. மு. 300 முதல், கி. பி. 300 என்று சொல்லலாம். அக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தரும் அவர்கட்கு அடங்கியும் அடங்காமலும் இருந்த சிற்றரசர் பலரும் தமிழகத்தை ஆண்டனர் என்பதைச் சங்கநூல்களால் அறிகிறோம். அச் சிற்றரசருள் அதிகைமான்கள், மலையமான்கள், மழவர், தொண்டைமான்கள் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இக்குறுநில மன்னர் சங்ககாலம் முதல் பிற்காலச் சோழர் காலம்வரை (கி. பி. 1300 வரை) தமிழகத்தில் தொடர்ந்து வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இக்குறுநில மன்னர் பிற்காலச் சோழர் ஆட்சியில் அவர்க்கு அடங்கிய சிற்றரசராயும் படைத்தலைவராயும் அமைச்சராயும், நாடு காவல் அதிகாரிகளாகவும் இருந்து வந்தனர் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

இவர்கள் ஆண்ட நிலப்பகுதியிலும் இவர்கள் அதிகாரிகளாக இருந்த தமிழக மாவட்டங்களிலும் இவர்களுடைய பெயரால் சில ஊர்கள் அமைந்துள்ளன. அவற்றைக் கீழே காண்க:

அதிகைமான்கள்

சேலம் மாவட்டத்துத் தருமபுரியையும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியையும் ஆண்டுவந்தவர்கள் அதிகைமான்கள் எனப்பட்டனர். இவருள் சங்ககாலத்து நெடுமான் அஞ்சி என்பவன் ஒளவையாரைப் போற்றி வளர்த்த வள்ளல். அதிகைமான்கள் மழவர் மரபினர்.

எண்	அதிகைமான்கள்	மாவட்டம்	வட்டம்
1.	அதிகமநல்லூர் (அதிகைமான் நல்லூர்)	செங்கல்பட்டு	செங்கல்பட்டு
2.	அதியனூர்	வடஆர்க்காடு	வந்தவாசி
3.	திருவதிகை	தென்னார்க்காடு	கூடலூர்
4.	நெடுமானூர் (நெடுமான் அஞ்சி)	தென்னார்க்காடு	கள்ளக்குறிச்சி
5.	நெடுமானூர் (நெடுமான் அஞ்சி)	தென்னார்க்காடு	திருக்கோவிலூர்
6.	அதமன்கோட்டை	சேலம்	தருமபுரி
7.	அதகப்பாடி	சேலம்	தருமபுரி

மலையமான்கள்

திருக்கோவலூரையும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியையும் மலையமான்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் காலப்போக்கில் வடநாட்டில் வாழ்ந்த சேதி அரசர்களின் மரபைத் தங்களுக்குரியதாக வைத்துக்கொண்டனர். பிற்காலச் சோழர் காலத்தில் அவர்கள் தங்களைச் சேதிராயர் என்று கூறிக்கொண்டனர். இப்பெயர் காலப்போக்கில் சேதுராயர், சேதுவராயர் எனவும் வழங்கலாயிற்று. இந்த முகவுரையை உளத்திற்கொண்டு கீழ்வரும் ஊர்ப்பெயர்களைக் காண்க:

எண்	மலையமான்கள்	மாவட்டம்	வட்டம்
1.	மலையனூர் செங்கடி	வடஆர்க்காடு	திருவண்ணமலை
2.	சேதராகுப்பம் (சேதிராயர்குப்பம்)	வடஆர்க்காடு	வந்தவாசி
3.	மலையனூர்	தென்னார்க்காடு	செஞ்சி
4.	சேதுராயநல்லூர் (சேதிராயநல்லூர்)	தென்னார்க்காடு	செஞ்சி
5.	மலையனூர் (கீழ்)	தென்னார்க்காடு	திண்டிவனம்
6.	மலையனூர் (வட, தென்)	தென்னார்க்காடு	திருக்கோவலூர்
7.	மலையம்பட்டு	தென்னார்க்காடு	திருக்கோவலூர்
8.	(செம்பட்ட) மலையனூர்	தென்னார்க்காடு	திருக்கோவலூர்
9.	மலையனூர்	தென்னார்க்காடு	விருத்தாசலம்
10.	சேதுவராயங்குப்பம் (சேதிராயன்)	தென்னார்க்காடு	விருத்தாசலம்
11.	சேத்துராயன் ஏந்தல் (சேதிராயன்ஏந்தல்)	தஞ்சை	அறந்தாங்கி
12.	சேதுராபட்டி (சேதிராயர்பட்டி)	திருச்சி	திருச்சி
13.	சேதுராயன் ஏந்தல்	இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை
14.	சேதுராயபுதூர்	திருநெல்வேலி	திருநெல்வேலி

தொண்டைமான்கள்

இவர்கள் சங்ககாலத்தில் காஞ்சியைத் தலைநகராய்க்கொண்டு தொண்டைநாட்டை ஆண்டனர். இவருள் தொண்டைமான் இளந்திரையன் சிறந்த தமிழ்ப் புலவன். இவன்மீது பாடப்பெற்றதே பெரும்பாண் ஆற்றுப்படை என்பது.

ஆற்றுப் படையாவது வழிப்படுத்துவது என்றுபொருள்படும். பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒரு வனைப் பரிசில் பெற்றுஞெருவன் காஞ்சி நகரத்தில் செங்கோல் செலுத்திக் கொண்டிருந்த தொண்டைமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனர் பாடியது இது. ஐநூறு அடிகள் கொண்ட இப்பாடலில் பண்டைத் தமிழகத்தின் இயற்கை வளமும், மக்களின் பண்பாடும், வாழ்க்கை முறையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பரிசில் பெற்ற ஒருவன் உள்ளத்தில் பொருமை யில்லாது இருந்தமையால் எதிர்ப்பட்டான் ஒருவனை இங்குச் செல்க என்று ஆற்றுப்படுத்த இயன்றது.

எண்	தொண்டைமான்கள்	மாவட்டம்	வட்டம்
1.	தொண்டைமான் நல்லூர்	செங்கற்பட்டு	மதுராந்தகம்
2.	சின்ன தொண்டைமானூர்	செங்கற்பட்டு	மதுராந்தகம்
3.	தொண்டப்பட்டு	செங்கற்பட்டு	பொன்னேரி
4.	தொண்டைமான் துளசி	வட ஆர்க்காடு	குடியாத்தம்
5.	தொண்டைமானூர்	வட ஆர்க்காடு	திருவண்ணாமலை
6.	தொண்டைமானத்தம்	தென்னார்க்காடு	சிதம்பரம்
7.	தொண்டைமானத்தம்	தென்னார்க்காடு	கடலூர்
8.	தொண்டங்குறிச்சி	தென்னார்க்காடு	விருத்தாசலம்
9.	தொண்டைமான் ஏந்தல்	தஞ்சை	அறந்தாங்கி
10.	தொண்டைமாங்கணம்	திருச்சி	குழித்தலை
11.	தொண்டைமான்குளம்	இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை

மழவர்

திருச்சி மாவட்டத்தில் காவிரியின் வடபாலுள்ள நிலப்பகுதி மழநாடு எனப்பட்டது. அந்நாட்டுத் தலைவன் கொல்லி மழவன் எனப் பட்டான். சங்ககால மழவர் மூவேந்தரிடத்தும் தனிப் படையினராக விளங்கிவந்தனர். சங்ககால வள்ளல்களாகிய ஓரியும் அதியமான் நெடுமான் அஞ்சியும் இம்மழவர் மரபினரே ஆவர். இவர்கள் பிற்பட்ட சோழர் காலத்தில் பல உயர்பதவிகளைப் பெற்றிருந்தனர். அரியலூர் சமீன்தார்கள் இம் மரபினரே ஆவர்.

எண்	மழவர்	மாவட்டம்	வட்டம்
1.	மழவங்கரணை	வட ஆர்க்காடு	வந்தவாசி
2.	மழவராயநல்லூர்	தென்னார்க்காடு	சிதம்பரம்
3.	மழவந்தாங்கல்	தென்னார்க்காடு	செஞ்சி
4.	மழவராயனூர் (திருக்கோவலூர் அருகில்)	தென்னார்க்காடு	திருக்கோவலூர்
5.	மழவராயனூர் (எல்வானசூர் அருகில்)	தென்னார்க்காடு	திருக்கோவலூர்
6.	மழவராயனூர்	தென்னார்க்காடு	விழுப்புரம்
7.	மழவராயநல்லூர்	தஞ்சை	குடந்தை
8.	மழவராயநல்லூர்	திருச்சி	பெரம்பலூர்
9.	மழவராயனேந்தல்	இராமநாதபுரம்	அருப்புக்கோட்டை
10.	மழவராயனேந்தல்	இராமநாதபுரம்	சிவகெங்கை
11.	வேளூர் மழவராயனத்தம்	திருநெல்வேலி	திருச்செந்தூர்

முகில்

(உலகு தாசன்)

நிலமெனும் நல்லாள் தன்னில் நீள்குழ லாகி விட்டாய்!
உலவையாம் கைகள் தன்னால் உயர்த்தினாள் உன்னை வானில்
அலகையாம் நினது கையின் தூரிகை இழைத்த வில்லின்
பலகலை வண்ணம் கண்டேன்; படைத்தவள் திறமும் கண்டேன்!

மயிலெலாம் ஆடும் உன்னால், மழையென வந்தக் காலை;
வயலெலாம் மலரும்; எங்கும் வளமது தொடரும்; வாவின்
கயலெலாம் துள்ளும்; தோய்ந்த கவலைகள் பறக்கும்; சீறும்
புயலுக்கும் துணைநீ நல்லோர் பொறுமையின் முடிவைக் காட்டும்!

வானத்தில் ஊர்வாய்; வந்து வளமலை யூர்வாய்; ‘சோசோ’
கானத்தில் உள்ளம் ஈர்ப்பாய் கடல்நீரும் உண்டே வாழ்வாய்!
தானத்தில் உயர்ந்தோய்; நீயும் உனக்கென எதுவும் கேளாய்!
மோனத்தில் மிதப்பார் கண்டு முழுநிலா ஒளிம றைப்பாய்!

பற்றலை காட்டும்; இந்தப் புவியதும் செழிப்பைக் காட்டும்!
பொற்சிறார் கைப்பந் தென்ன பூத்திடும் காளான்! நன்கே
முற்றிய கதிர்கள் உன்றன் முகங்கண்டு தலைவ ணங்கும்
எற்றவம் பெற்றா யேயோ எங்ஙனம் புகழ்வேன் நின்னை!

சிங்கத்தின் உறுமல் கொண்டாய் தென்றலின் குளுமை சேர்ப்பாய்!
தங்கத்தின் உருக்காம் மின்னல் தனையுமே கொண்டி யற்கை
அங்கத்தின் உருவைக் காட்டி அகிலத்தைப் புரக்கின் றாய்!நின்
பங்கமில் லாத வாழ்வைப் பாடற்கே வலிவி லான் யான்!

கருவான பலவண்ணத்தைச் செவ்வானம் தன்னில் கண்டேன்!
திருவான கடல்ம ணல்மேல் நடமிட்ட காற்றி னாலே
உருவான நெளியேற் றத்தை உயர்வானில் கண்டேன் உன்னால்
‘கரு’வான முகிலே, மூன்று காலமும் வென்றே வாழி!



சிறுகதை மன்னன் என்று பாராட்டப்படும் ஓ. என்ரியின் பெயர், ஓ. ஹென்றி அல்ல!

சிறு கதைகளில் அந்தப் புகழ்மிக்க எழுத்தாளன் எடுத்துக் காட்டும் மக்கள்-ஏழை, பாட்டாளி, ஏமாளி, எத்தன் இப்படிப்பட்டவர்கள். கைதிகள் கூடத்தான்!

தம்முடைய கதைகளிலே வரும் பாத்திரங்களைத் துள்ளி விளையாடிக் கலகலப்பாக இருப்பவர்களாகக் காட்டினர் ஓ. ஹென்றி-ஆனல் அவர் கலகலப்பாக இருந்திடும் சுபாவக்காரர் அல்ல.

உலகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான "ஓ. ஹென்றி"யைப்பற்றிச் சிலமுக்கிய சம்பவங்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

இவரது உண்மையான பெயர், "வில்லியம் ஸிட்னி போர்டர்" என்பதாகும். வில்லியம் ஸிட்னி போர்டர் 1869-ல் "வடக்கு கரோலினவில்," "கிரீன்ஸ் பொரோ" என்னும் இடத்தில் பிறந்தார். தனது பத்தொன்பதாவது வயதில் உடல் நலத்திற்காக "டெக்ஸானுக்குச்" சென்று குடியேறினர் அவர். அங்குள்ள பெரிய மாட்டுப் பண்ணைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டார். அங்கு இருந்தபடியே பல கதைகளை எழுதினர்.

ஹென்றியை அவரது இரசிகர்கள் சாமர்த்தியமற்ற, புத்தி நுட்பமுள்ள எழுத்தாளர் என்றே கருதினர். அவருடைய இரசிகர்கள், வாடகை வண்டிகள் ஓட்டுபவர்களும், மற்றும் பல வேலைகள் செய்வோருமே யாவர். ஆனல் அவர்கள் யாரும் இவரை நேரிடையாக அறிந்ததேயில்லை. சாதாரணமாகவே வெளியிடங்களில் அதிகமாகப் பேசவும், பழகவும் மாட்டார். அன்புள்ளம் படைத்தவர். ஆனல் கலகலப்பற்றவர். இவரிடம் உள்ள இந்தக் குணத்தினல் இவரிடம் நெருங்கிப்பழகும் நண்பர்கள் கூட இவரைப்பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஹென்றியின் புகழ்பெற்ற கதைகளில் ஒன்ருன, "மாஜியின் பரிசு," என்பது உருவான விதமே விசித்திரமானதாகும். ஒருமுறைஹென்றி தன்னுடைய நெருங்கிய நண்பரான லிண்ட்ஸி என்பவரை அழைத்து வந்து சிறிது நேரம் நாற்காலியில் அமரும்படி சொன்னர். அந்த நண்பர் ஒன்றும் புரியாமல் ஏன் என்று கேட்க, "நான் என் மனதில் ஒரு கதையைக் கற்பனை செய்து வைத்துள்ளேன். அதில் வரும் பாத்திரங்களை நேரிடையாக வைத்து சீக்கிரமாக ஒரு கதை எழுதப்போகிறேன். கதையில் வரும் கணவனும் மனைவியும் உங்களைப் போலவும் உங்கள் மனைவியைப் போலவும் ஒருவர்மேல் ஒருவர் உயிரையே வைத்திருந்தனர்." என்று கூறி நண்பரை அமரச்செய்து விட்டு, மூன்றே மணி நேரத்தில் மாஜியின்பரிசு கதையை எழுதினர். அந்தக் கதையில், மனைவி தனது அழகிய நீண்ட கூந்தலைக் கத்தரித்து விற்றுவிட்டு தனது கணவனின் கைக் கடிகாரத்துக்காக ஒரு 'செயினை' பரிசாகத்தர வாங்கினள். ஆனல் அவளது கணவனே தனது மனைவிக்குச் சிறந்த பரிசு தர எண்ணி, தன்னுடைய கெடிகாரத்தை விற்றுவிட்டு தனது மனைவியின் அழகிய நீண்ட கூந்தலில் சொருகிக் கொள்ளும் சில அழகு சாதனப் பொருள்களைவாங்கினன். இருவரும் தங்களது பரிசைக் கண்டபோது மிக்க ஏமாற்றமடைந்தனர். இது போன்ற ஆச்சரியமான முடிவுகளையே, ஹென்றியின் அனேக கதைகள் கொண்டிருக்கும்.

ஹென்றியிடம் குறிப்பிடத்தக்க குணம் என்னவென்ருல் ஒரு கதையை எழுதிவிட்டால் அதைத் திருத்தி மறுமுறை எழுதுவது இல்லை; அதைத்திருப்பிப்படிப்பதும் இல்லை. ஒருமுறை எழுதியதை அப்படியே பத்திரிகைகளுக்கு அனுப்பி விடுவார்.

இப்படிப்பட்ட குணங்களையும், கற்பனைத் திறனையும் உடைய ஹென்றியின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க சம்பவம் ஒன்று நடந்தது. அப்பொழுது ஹென்றிக்கு ஸிட்னிபோர்டர் என்று பெயர் இருந்தது.

போர்டர் டெக்ஸாஸிலே இருந்தபோது ஆஸ்டின் தேசத்துப் பெண்ணைக் காதலித்து மணம் முடித்துக்கொண்டார். திருமணம் ஆனபிறகு தனது பழைய வேலையிலிருந்து நீங்கி, ஆஸ்டின் நகரத்துக் கூட்டுறவு பாங்கியில் "காஷியர்" வேலையில் அவர் அமர்ந்தார். வேலையில் இருந்து கொண்டே ஒருவாரப் பத்திரிகையை நடத்தி வந்தார். அவர் வேலை செய்த பாங்கியில் கண்டிப்பே கிடையாது. அப்படி இருந்த போதிலும் அந்தப் பாங்கு ஒழுங்காகவே நடந்து வந்தது. அப்படி இருக்கையில் ஒரு சமயம் போர்டர் ரூ. 100 எடுத்துக்கொண்டு அதைக் கணக்கில் எழுத மறந்துவிட்டார். பாங்கின் அதிகாரி திடிரென்று அந்த வேளையில் சோதனை செய்து கணக்கில் பணம் குறைவதை அறிந்து

போர்டரை வேலையிலிருந்து நீக்கி விட்டார்.

போர்டர் அந்த வேலையை விட்டு வந்து ஒரு பெரிய பத்திரிகையில் வேலை பார்த்தார். அங்கு இருந்த போது அவர் சிறந்த பத்திரிகையாளர் என்ற பெயர் பெற்றார். இந்த நேரத்தில் திடீரென்று அவர் ஆஸ்டின் தேசத்து அரசாங்கத்தால் நீதி மன்றத்திலே குற்றவாளியாக நிறுத்தப்பட்டார். இவர் ஆஸ்டினின் கூட்டுறவு பாங்கியிலிருந்து விலகுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னால் ஒரு பெருந்தொகை காணால் போனதாகக் கண்டு பிடிக்கப்பட்டு அதை இவர்தான் எடுத்து இருப்பார் என்று நினைத்துக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டார்.

சந்தர்ப்பங்கள் சதி செய்துவிட்டன. போர்டர் விசாரணை முடியும் வரை வாயைத் திறவாமலேயே இருந்தார். இதனால் தவறேதும் செய்யாமலேயே நான்கு வருடச் சிறைத் தண்டனையை ஏற்றார்.

போர்டர் சிறையுள் நுழையும் போது எழுத்தறிவு பெற்றவராகவும் சகல கலா வல்லவராகவும் தீரச் செயலைப் புரிந்தவராகவும் உள்ளே சென்றார். நான்கு வருடங்களைச் சிறையில் கழித்துவிட்டு வெளியே வரும்போது சளைக்காத உழைப்பாளியாகவும், தேர்ச்சி அடைந்த எழுத்தாளராகவும் வந்தார். அவருடைய கதைகள் அவர் சிறையை விட்டுவந்த இரண்டாவது வருடத்தில் பிரசுரிக்கப்பட்டன. அந்தச் சமயத்தில்தான் தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார். சிறைக் கைதிகளுக்குள்ள அதிகாரிகளின் தலைவரான "ஓரின் ஹென்றி" என்பவனின் பெயரிலிருந்து ஓ ஹென்றி என்று மாற்றி தன்னுடைய பெயராக மாற்றிக் கொண்டார்.

சிறையில் உள்ள கைதிகளுக்கான மருத்துவர் "தாமஸ்" என்பவர் ஒரு சமயம் பின் வருமாறு கூறினார், "நான் என்னுடைய வாழ்க்கையில் எந்தப் பொருளையும் திருடியதில்லை" என்றார்.

ஹென்றி தன்னுடைய ஒரு புகழ் பெற்ற கதை ஒன்றில், தண்டனை பெற்ற "ஜிம்மி வாலண்டைன்" என்பவனைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஜிம்மி முதலில் திறமைஉள்ள உழைப்பாளியாகத்தான் வாழ்க்கையை நடத்தி வந்தான். அவன் ஒருஅழகிய பெண்ணைக் காதலித்து மணமுடித்தான். அவர்களுக்கு அருமை மகன் பிறந்தான். சில காலத்திற்குப் பின் தனது நண்பனான சிறுவன் ஒருவனை ஒரு பாங்கியின் கஜானா அறையில் போட்டு மூடிவிட்டான். அவனைக் காப்பாற்றச் சென்ற ஜிம்மி போலீசில் அகப்பட்டுத் தண்டனை பெற்றான். இந்தக்கதை பின்பு புகழ் பெற்ற நாடகமாகி விட்டது.

சிறையிலிருந்து வந்த பிறகு ஹென்றி சில பெரிய பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதினார். அதன் மூலம் அவரது புகழ் மிக வேகமாகப்பரவியது. இதனால் ஏராளமாக எழுதி அவர் உடல் நிலை வேறு கெட்டு விட்டது. அவரைப் பல நோய்கள் சேர்ந்து வாட்டின. ஹென்றி வைத்தியத்துக்காக "நியூயார்க்"குக்கு வந்தார்.

அவரது கடைசி கால வாழ்க்கை துன்பகரமானதாய் இருந்தது. ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைத்துக்கொண்டிருந்தார். இவர் எழுதிய 'கனவு' என்ற கதை பாதியிலே எழுதாமல் நிறுத்தப்பட்டது. அதில் தூக்குத்தண்டனை பெறப் போகும் கைதி ஒருவன், தான், தன்னுடைய மனைவி, குழந்தை ஆகியோருடன் இருப்பதாகவே கருதுகிறான். அது போல் கனவுலகில் இருக்கையில் அவனுக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. அவன் இனிய நினைவுகளுடனே இறந்து விட்டான், என்று எழுதி இருந்தார்.

இப்படிப்பட்ட பல இன்சுவை படைத்த கதைகளை உலகத்திடையேவிட்டு "ஹென்றி' காலிடோனியாவில் தன்னுடைய வீட்டில் 1910-ம் வருடம் ஜூன் மாதம் 5-ந் தேதி தன்னுடைய பூத உடல் இழந்து புகழ் உடல் பெற்றார்.

❋

இலக்கியத்தில் மகளிர் வாழ்வு

காதல் ஆடவருக்கு வெறும் பொழுது போக்காகத் தோன்றுவதுண்டு. அதுவே பெண்ணுக்கு முதலும் முடிவுமான முழுமையான வாழ்வாகிறது. ஒருவனை அவள் நம்பிவிட்டால் பின்அதற்கு மாற்றே கிடையாது. இது பண்டைய மகளிரிடம் காணப்பட்ட தனிச் சிறப்பாகும். இளமையினால் எழும் புது மோகம் தீரும்வரை அவளுடன் சல்லாபம் செய்து வாழ்ந்த தலைவன், பின் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி அவளைப் பிரிந்து செல்கிறான். எல்லாக் காதலனைப்போல், விரைவில் வந்து 'வதுவை புரிவேன். வருந்தாதே' என்று கூறித்தான் அவனும் சென்றான். ஆனால் நாட்கள் பல சிறகடித்தும், அவன் சுவடே தென்படவில்லை. தன் முழு எதிர்காலத்தையும், இளமையையும் தலைவனிடம் ஒப்படைத்திருந்த தலைவி 'இலவு காத்த கிளியானேனோ' என்று துடித்துக் கொண்டிருந்தாள்.

பைங்கிளியும் பெண் கிளியும்

தலைவி: என்னடி தோழி! விரைவில் வருவேனென்றவரைக் காணேனே! எனது அழகும் இளமையும் வனப்பு, பெண்மை அனைத்தும் புதியனவாக இருந்த போது அவர் அனுபவித்தார். அதீத நம்பிக்கையினால் நானும் உளமிழந்தேன். இன்னமும் கல்யாணம செய்துகொண்டு என் துயர் தீர்க்க அவர் வரக் காணேனே?'

தோழி: இன்னும் சில நாள் பொறுத்திருந்து பார்ப்போமே?

தலைவி: என்னடி பொறுமை வேண்டிக் கிடக்கிறது. தினைப்புனத்திலே தினைவிதைக்கிறான் குறவன். பொன்போல் கதிர் விடுகிறது. அத்தருணத்தில் கிளி வந்து அக் கதிரை உண்டு செல்கிறது. கூழையாகி நிற்கிறது தினை. பின் மழை பெய்ய தினை மீண்டும் தளிர்க்கிறது. அம்மாதிரியல்லவா இறந்து பிழைத்து, துடித்து வாழ்கிறேன்.

"புனவன் துடவைப்
பொன்போல்-சிறுதினை
கிளிகுறைத்து உண்ட
கூழை-இருவி
பெரும்பெயல் உண்மையில்
இலை-ஒலித்தாங்கு, என்
உரம் செத்தும் உளேனே
தோழி-என்
நலம் புதிது உண்டது
புலம்பினனே."

—முதுகண்ணன்.

நான் வாழ வேண்டும்!

பரி

என் இருதய அறுவை சிகிச்சை நடக்கும் போது நான் விழித்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன். நான் பிழைப்பேனா? அது எனக்குத் தெரியவில்லை ஏன். டாக்டர்களுக்கே அது தெரியாது!!

இரவு மணி 8!

நான் இன்று இரவு நிம்மதியாகத் தூங்கவேண்டும். நாளை காலை எனக்கு அறுவை சிகிச்சை! இருதய அறுவை சிகிச்சை!!

பத்து நாட்களுக்கு முன் என் இடது மார்பிலும், இடது கையின் உள் பக்கத்திலும் வலி எடுத்தது. டாக்டரை சந்தித்தேன், அவர் சொன்னார், உங்களின் இருதயத்திற்குப் போதிய இரத்த ஓட்டம் இல்லை. இதற்கு அறுவை சிகிச்சை செய்யவேண்டும். ஆனால் மிகவும் கடினமான அறுவை சிகிச்சை. நாளை எனக்கு அந்த ரண சிகிச்சை நடக்கப்போகிறது. இன்று மாலை இரண்டு 'சர்ஜன்'கள் வந்து என்னைக் கேட்டார்கள். உங்களுக்கு மனோதைரியம் இருந்தால் நீங்கள் அறுவை சிகிச்சையைப் பார்க்கலாம். அதாவது நாங்கள், அந்த இடத்தை மட்டும் உணர்ச்சியில்லாமல் செய்து, அறுவை சிகிச்சை செய்வோம். இல்லையென்றால் உங்களை முழுக்க நினைவில்லாமல் செய்து, சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

நான் முதல் முறையையே ஏற்றுக்கொண்டேன்! அதாவது நாளை என் மார்புக்கூடு திறக்கப்படுவதை என் கண்களாலேயே பார்க்கப் போகிறேன். ஆனால் நான் பிழைப்பேன் என்று நிச்சயமில்லை.

அதை டாக்டர்கள் என்னிடம் கூறவில்லை!

O

நான் அறுவை சிகிச்சை மேசை மேல் படுத்துக்கொண்டிருக்கிறேன்.

காலை மணி 8!

என்னைச் சுற்றி எட்டு பேர்! எல்லோரும் வெள்ளை உடையில்! அவர்களின் முகத்தில் ஏற்படும் உணர்ச்சியை என்னால் பார்க்க முடியவில்லை. காரணம், அவர்கள் வெள்ளைத் துணியில் முகமூடி போன்று ஒன்றை அணிந்திருந்தனர்.

சர்ஜன் என்னைப் பார்த்துக் கேட்டார். துணிவுடன் இருக்கிறீர்களா? சிறிது வலி இருக்கும். வலி அதிகமாகத் தெரியும்போது சொல்லுங்கள். உங்களைத் தூங்கவைத்து விடுகிறோம்! இல்லை. நான் துணிவுடன் தான் இருக்கிறேன், என்றேன்.

எனக்குநடக்கவிருக்கும் அறுவை சிகிச்சையில் முக்கியமானவை, மூன்று பாகங்கள். எனது இருதயம் சரியான—போதுமான இரத்த ஓட்டத்தைப் பெறவில்லை. அதனால் தன் வேலையைச் சரிவரச் செய்ய முடியவில்லை.

அறுவை சிகிச்சையின் முக்கியமான முதல் பாகம்-இருதயத்திற்கு மேலே செல்லும் ஒரு இரத்தக் குழாயை (இன்டர்நல் மேமரி) அறுத்து அந்த முனையைக் கட்ட வேண்டும். அதனால் இருதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் அழுத்தம் அதிகரித்து இருதயத்திற்கு நிறைய இரத்தம் செல்லும். இரண்டாவது முக்கியமான பாகம்—ஐந்தாவது விலா எலும்பை மார்பு எலும்புடன் இணையும் இடத்தில், சிறிது வெட்டி எடுத்துவிட வேண்டும். இதனால் இருதய தசைகள் மார்பில் உள்ள முக்கியமான தசையுடன் சேர வாய்ப்பு ஏற்படும். இதனால் மார்பின் முக்கியமான தசைக்குச் செல்லும் அபரிமிதமான ரத்தம், இருதய தசைகளுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மூன்றாவதும் மிக மிக முக்கியமானதுமான பாகம்—இருதயத்தை மூடியிருக்கும் மெல்லியபாகம் கிழிக்கப்படும். இருதய தசைகளுக்கும் இந்த மூடியிருக்கும் மெல்லிய பாகத்திற்கும் நடுவில் ஒரு 'இரசாயனப் பொருள் வைக்கப்படும். அதன் பெயர் 'மக்னீஷியம் சிலிகெட்' (Magoesium Silicate) இந்த 'ரசாயன'ப்பொருள் எப்போதும்இருதய தசைகளுக்கு ஒரு ஊக்கத்தைக்

கொடுத்துக் கொண்டிருக்கும். இதைச் செய்யும் நேரத்தில் இருதய தசைகளின்மேல் ஏற்படும் சிறு கீரல்கள் புதிய இரத்தக் குழாய்களை ஏற்படுத்தி, இருதய தசைகளுக்கு அதிக ரத்தம் பாய்ச்ச ஏதுவாகும்!!! இவைகள் எல்லாம் சர்ஜன்கள் சொல்லி நான் தெரிந்து கொண்டவை!!

எனக்குநன்றாக வேர்த்துவிட்டது. ஒரு 'நர்ஸ்' என் வேர்வையைத் துடைத்துக்கொண்டு இருந்தார். எனக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டார்கள். ஆனால் நான் முழு நினைவை இழக்கவில்லை.

மார்பின் ஒரு பாகத்தில் மட்டும் உணர்ச்சி இழந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

சர்ஜன் ஒரு பஞ்சில் ஏதோ ஒன்றைத் தோய்த்து என் இடது மார்பில் தடவினார்.

அறுவை சிகிச்சை நடக்கப் போகும் இடத்தைத் தவிர மற்ற இடங்களை 'பாண்டேஜ்' துணியால் மூடிவிட்டார்கள்.

சர்ஜன் என் விலா எலும்புகளை எண்ண ஆரம்பித்தார். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து...!

ஏதோ ஊசி குத்துவதைப் போன்று எனக்குத் தோன்றிற்று. நர்ஸிடம் இருந்து ஒவ்வொரு பொருள்களாக சர்ஜனின் கைகளுக்குப் போவதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

நான் பிழைப்பேனா? என் மனதில் இந்தக் கேள்வி. எந்த எண்ணம் என்மனதில் ஏற்படக்கூடாது என்று சொன்னார்களோ அதே எண்ணம்! மறக்கமுயற்சிக்கிறேன். சர்ஜனும் அவருடைய உதவியாளர்களும் குனிந்து என் மார்பைப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தலை, மூக்குக்கண்ணாடி, முகமூடி இவைதான் எனக்குத் தெரிகிறது.

முதல் கோடு கத்தியால் கிழிக்கப் பட்டுவிட்டது. என்னுடைய அறுவை சிகிச்சை ஆரம்பமாகி விட்டது.

சர்ஜன் என்னைக் கேட்டார். 'ஏதாவது உணர்ச்சி தெரிகிறதா?

'ஒன்றுமில்லை, கொஞ்சம் அழுத்துவதுபோல் தெரிகிறது அவ்வளவுதான்!' என்று நான் சொன்னேன்!

சர்ஜன்கள் பேசிக்கொள்வது எனக்குத் தெளிவாகக் கேட்கிறது. ஒருநர்ஸ் என் நெற்றிவேர்வையைத் துடைத்துக்கொண்டு இருந்தார். மயக்க மருந்து கொடுத்த டாக்டரின் கை என் தோளின்மேல் இருந்ததை என்னால் நன்றாக உணர முடிந்தது!

அவர் சொன்னார் மற்றொரு டாக்டரிடம் "நான் மயக்க மருந்தை 'இன்ஜெக்ஷன்' மூலமாக உள்ளே செலுத்தப்போகிறேன்."

இன்னொரு டாக்டர் சொன்னார், "நான், இப்போது நுரையீரலை மூடியிருக்கும்உறைபோன்ற பாகங்களை ஐந்தாவது விலா எலும்பில் இருந்து பிரித்துக்கொண்டிருக்கிறேன்."

நான் திடீரென்று மூச்சு முட்டித் திணறினேன். ஏதோ ஒரு கனமான பொருள் என் மார்புக்கூட்டுக்குள் போனதைப்போன்ற ஓர் உணர்ச்சி!

என் கண்களுக்கு எதிராக இரண்டு 'சர்ஜன'களின் தலைகள் தான் எனக்குத் தெரிந்தன. அறுவைச் சிகிச்சையின் அடுத்த கட்டம்தான் மிகவும் கடினமானது என்று டாக்டர்கள் நேற்று சொன்னது எனக்கு கவனம் வந்தது! இருதயத்தின் தசை கிழிக்கப்பட்டது. முன் சொன்ன அந்த இரசாயனப் பொருளும் உள்ளே வைக்கப்பட்டது! திடீரென்று இருதயம் மிக வேகமாகச் சுருங்கிவிரிவது எனக்கு நன்றாக தெரிந்தது. டாக்டர் சொன்னார், "உங்கள் இருதயம் இவ்வளவு வேகமாகச்சுருங்கிவிரிவதற்குக்காரணம், ஏதோ ஒரு புதிய பொருள் தன்னிடம் வந்திருப்பதை இருதயம் புரிந்துகொண்டுவிட்டது. அதை வெளியே தள்ளுவதற்காகத்தான் அது இப்படி வேகமாகச் சுருங்கி விரிகிறது. அநேகமாக இப்போது உங்களுக்குக்கொஞ்சம் வலி அதிகமாகும் என்று நினைக்கிறேன். அதனால் உங்களைமுழுக்க நினைவிழக்கச் செய்வது நல்லது என்று நினைக்கிறேன்" என்றார்.

'வேண்டாம், டாக்டர்' என்றேன் நான்.

ஆனால் அதற்குள் மயக்கமருந்து கொடுககும் டாகடர் ஒரு 'இன்ஜெக்ஷன' கொடுத்துவிடடார்.

எனக்கு நினைவு தப்பிவிட்டது. சிறிது நேரத்திற்குள், பயங்கரக் கனவு கண்டவன்போல் விழித்துக் கொண்டேன். நர்ஸ் என் நெற்றி வேர்வையைத் துடைத்துக்கொண்டிருந்தார். சர்ஜன் மட்டும் ஏதோ மும்முரமான வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அதாவது, இருதய தசைகளைத் தைத்துக்கொண்டிருந்தார். மிகக் கடினமானவேலை! ஒவ்வொரு முறையும் இருதயம் சுருங்கிவிரியும் போதும் ஒரு தையல் போடவேண்டும்! மிக, மிகக் கடினமான வேலை. திடீரென்று சர்ஜனின் தலை நிமிர்ந்தது.

அவர் புன்சிரிப்புடன் சொன்னார் "யாவும் முடிந்துவிட்டது" அவருடைய உதவியாளர்கள்பழையபடி மார்பில்உள்ள பாகங்கள் அனைத்தும் தைத்துவிட்டார்கள். அறுவை சிகிச்சை முடிந்தது! இதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 31- நிமிடம்!! சர்ஜன் தன் முகமூடியையும், தலையில் உள்ள துணியையும் விலக்கிவிட்டார், அவர் முகத்தில் வழியும் வேர்வையைத் துடைத்துக் கொள்ள!

நான் என் அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டேன்.

இவையெல்லாம் நடந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. இப்போது நான் புதிய மனிதன்.

புதிய இருதயத்துடன் இருக்கிறேன். என் புதிய இருதயம் நன்றாக வேலைசெய்வதாகவும், அதிக வேலைசெய்யும் சக்தியடைந்துவிட்டதாகவும் டாக்டர்கள் சொல்லுகிறார்கள். ஏன் நானே உணர்கிறேன்!

இறந்துவிடுவேன் என்று நினைத்த என்னை டாக்டர்கள் பிழைக்க வைத்துவிட்டார்கள்!

எந்திரங்களில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், அதைப் பழுதுபார்த்து புதிப்பித்துக்கொள்வதுபோல், என் இருதயமும் புதுப்பிககப்பட்டதை நினைதது, நினைதது நான் வியப்படைகிறேன!

வாழ்வா, சாவா என்று நினைத்துக் கொண்டிருநத என்னை டாக்டர்கள் வாழவைததுவிட்டார்கள்! நான் வாழத்தான் வேண்டும்!!

—ஆதாரம்: ரீடர்ஸ் டைஜஸ்ட்.

நாவலர் தந்திடும்

காலங்காட்டும் கருவிகள்

பண்டைத் தமிழர்கள் காலத்தைப் பெரும்பொழுது என்றும், சிறுபொழுது என்றும் இரண்டாக முறைப்படுத்தினர். பெரும் பொழுது என்பது ஒரு ஆண்டுக் காலத்தைக் குறிப்பதாகும். சிறு பொழுது என்பது ஒருநாட் பொழுதைக் குறிப்பதாகும். பெரும் பொழுது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறுவகைப்படும். ஒவ்வொரு காலமும் இரண்டு இரண்டு திங்கள்களின் கால அளவைக் கொண்டனவாகும். ஆவணி, புரட்டாசித் திங்கள்களை உள்ளடக்கியது கார் காலம் என்றும், ஐப்பசி, கார்த்திகை இரண்டையும் உள்ளடக்கியது கூதிர்காலம் என்றும், மார்கழி, தை இரண்டையும் முன்பனிக்காலம் என்றும், மாசி, பங்குனி இரண்டும் பின்பனிக்காலம் என்றும், சித்திரை, வைகாசி இரண்டும் இளவேனிற்காலம் என்றும், ஆனி, ஆடி இரண்டும் முதுவேனிற்காலம் என்றும் அழைக்கப்பெறும். சிறுபொழுது வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று ஆறுவகைப்படும். ஒவ்வொரு சிறுபொழுதும் பத்துப்பதது நாழிகைகளைக் கொண்டனவாகும். காலை, நண்பகல், எற்பாடு மூன்றும் பகல் முப்பது நாழிகைகளைக் குறிக்கும். மாலை, யாமம், வைகறை மூன்றும் இரவு முப்பது நாழிகைகளைக் குறிக்கும்.

பொழுதைக் கண்டறிவதற்குப் பண்டைத் தமிழர்கள் இயற்கைக் கருவிகளையும், செயற்கைக் கருவிகளையும் பயன்படுத்திவந்தனர்.

நள்ளிரவில் கோழி கூவும். கோழியின் கூவுதலைக் கேட்டவுடன் யாமப்பொழுது வந்துவிட்டது என்று அறிந்துகொள்வார்கள். யாமத்தில் கூவுகின்ற காரணத்தினாலேயே, அத்தகைய கோழிக்கு 'யாமக்கோழி' என்று பெயர். காக்கை கரைவதை வைத்துக் கொண்டு, வைகறைப் பொழுது வந்துவிட்டது என்று தெரிந்து கொள்வார்கள். கோட்டானின் கூவுதலைக் கேட்டவுடன் மாலைப் பொழுது போய், யாமப் பொழுது துவங்கிவிட்டது என்று புரிந்து கொள்வார்கள். பறவைகள் நீர்நிலைகளைவிட்டும், காடு கழனிகளைவிட்டும் கூட்டங்கூட்டமாகத் தம் கூடுகளை நோக்கிப் பறந்துசெல்வதைப் பார்க்கும்போது, எற்பாடு நீங்கி மாலைப்பொழுது வந்துவிட்டதை உணர்வர்.

பண்டைத் தமிழர்க்குப், பொழுதினைப் புலப்படுத்துவதற்குப் பூக்கள் பெரிதும் பயன்பட்டுவந்திருக்கின்றன. அவைகள் மலர்வதும், கூம்புவதும், வாடுவதும், உதிர்வதும் ஒவ்வொரு வகைப் பொழுதினைப் புலப்படுத்தக் காரணமாக இருந்திருக்கின்றன. இதுகாரணம் பற்றிதான் 'பொழுதின முகமலர்வுடையது பூவே' என்னும் இலக்கணமும் எழுந்துள்ளது.

மக்கள் காலையில் கண்மலர்ந்து எழுந்தவுடன், உலகெங்கும் பூக்கள் மலர்ந்திருப்பதைக் காண்கிறார்கள். மரங்களும், செடிகளும், கொடிகளும், நீர்நிலைத் தண்டுகளும் பல வண்ணப் பூக்களைத் தாங்கி நிற்கின்றன. இதுகாரணம்பற்றித்தான் தமிழ்ச் சான்றோர் உலகைப் 'பூ' என்று அழைத்தார்கள்போலும்.

ஒவ்வொருவகை மலர்கள் ஒவ்வொரு காலத்தில் பூக்கத்தொடங்குகின்றன. அந்தந்த மலர்களைக் கொண்டு அந்தந்தக் காலத்தைக் கணிக்க இயற்கையில் முடிகிறது. அதுபோலவே ஒவ்வோர்வகை மலர்கள் ஒவ்வோர்பொழுது மலர்கின்றன. அப்படி மலரும் அந்தந்தப் பொழுதை அறிந்துகொள்ள முடிகிறது. பூக்களைக்கொண்டே பெரும் பொழுதையும், சிறுபொழுதையும் கணக்கிடுவதில், நாகரிகம் முதிர்ந்த பண்டைத் தமிழர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்து வந்திருக்கின்றனர்.

இந்தக் காலத்திலுள்ள மரநூல் வல்லுநர்கள்கூட குறிப்பிட்டகாலத்திலும், குறிப்பிட்ட பொழுதிலும், குறிப்பிட்ட மலர்கள் மலர்கின்றன என்பதை ஆராய்ச்சி வடிவில் தெள்ளத்தெளியக் கண்டறிந்து வைத்துள்ளனர். காசி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். என். கே. என்பார் பல ஆண்டுகளுக்கு முன்பு 'மலர்க் கடியாரம்' [The Floral clock') என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதினார். அந்தக் கட்டுரையில் குறிப்பிட்ட சில மலர்கள் எந்த எந்த நேரத்தில் மலர்கின்றன என்பதை அறுதியிட்டுக் கூறியுள்ளார். தாமரை மலர் கதிரவன் எழும் வைகறைப் போதிலும், சண்பக மலர் காலை ஆறு மணியிலிருந்து ஏழுமணிக்குள்ளாகவும், வாழைப்பூ மாலை ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள்ளாகவும், பவழ மல்லிகைப்பூ மாலை ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளாகவும், மல்லிகை மலர் இரவு ஏழு மணியிலிருந்து எட்டு மணிக்குள்ளாகவும் மலர்கின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'பொழுதை' அதாவது 'போதை' அறிவிக்கக் காரணமாக இருப்பதால்தான், மலரும் பக்குவத்திலிருக்கும் முதிர்ந்த அரும்பைப் 'போது' என்று பெயரிட்டுப் பண்டைத் தமிழர் அழைத்தனர்போலும். மலர் பெரும் பொழுதை உணர்த்துவதற்கு அறிகுறியாக இருந்ததால் தான், அதனை 'நாள்' என்று அழைத்தனர்போலும்.

பண்டைத் தமிழர் ஞாயிறு இருக்கும் இடம்நோக்கிப் பகற்பொழுதின் நாழிகைகளையும், உடுக்களும் திங்களும் இருக்கும் இடம்நோக்கி இராப்பொழுதின் நாழிகைகளையும் கணக்கிட்டனர். உடுக்களின் அமைப்பையும் அவற்றினிடையே திங்கள் தங்கும் இருப்பையும் நோக்கித் 'திங்களை'க் கணக்கிட்டு வந்தனர். திங்களைக் கொண்டு கணக்கிடப்பட்டதால், 'மாதம்' என்பது தமிழர்களால் 'திங்கள்' என்று அழைக்கப்படுகிறது.

கதிரவனையும், திங்களையும் முகிற்கூட்டங்கள் மறைத்துவிடும் நேரத்தில், பொழுதைப் புலப்படுத்த பல்வேறுவகைப் பூக்கள் பயன்பட்டுவந்திருக்கின்றன. பண்டைத் தமிழர்கள் பூக்கள் மலருவதைக் கொண்டு பொழுதுகளை அறிந்துகொண்ட குறிப்புக்கள், சங்க இலக்கியங்களில் ஆங்காங்கு காணப்படுகின்றன.

கூதிர்காலம்! எங்கும் மப்பும் மந்தாரமுமாக இருக்கின்றன. கதிரவனின் இருப்பிடமோ, வெளிச்சமோ அறவே தெரியவில்லை. இல்லற மகளிர் இரவு வருவதற்கு முன்பே வீட்டில் விளக்கேற்றி வைக்க எண்ணுகிறார்கள். மாலைப்பொழுது வந்துவிட்டதா? நாழிகை என்ன? என்பது தெரியவில்லை அதனால் மகளிர், வீட்டின் அருகே உள்ள பிச்சியின் அரும்புகளைப் பறித்து வந்துப் பூந்தட்டிலே வைக்கின்றனர். அவை சிறிதுநேரத்தில் இதழ் விரித்து மணம்வீசத் தலைபடுகின்றன. பிச்சியின் அரும்புகள் மலர்ந்தவுடனே, மாலைப்பொழுது வந்துவிட்டது என்பதை அறிந்துகொண்டு, மகளிர் விளக்கேற்றிவைத்து, நெல்லும் மலரும் தூவி, ஒளியை வழிபடுகின்றனர். இதனைப் பத்துப்பாட்டில் ஒன்றான 'நெடுநல் வாடை' அழகுற விளக்கிக்காட்டுகிறது.

மடவரல் மகளிர் பிடகைப் பெய்த

செவ்வி அரும்பின் பைங்காற் பித்திகத்து

அவ்விதழ் அவிழ்பதம் கமழ்பொழுதறிந்து

இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக்கொளீஇ

நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது

மல்லல் ஆவணம் மாலை அயர...

[மென்மையையுடைய பெண்கள் பூந்தட்டிலே வைத்த, பக்குவத்தையுடைய அரும்பையுடைய பிச்சியின் அழகிய இதழ்கள் மலரும் பருவத்திலே மணம் வீச, அதனால் பொழுதை உணர்ந்து. இரும்பினால் செய்த விளக்கில் எண்ணெயால்ஈரமான திரியைக் கொளுத்தி. நெல்லும் மலரும் தூவிக் கைதொழுது வணங்கி. வளப்பம்மிக்க கடைத்தெரு மாலைப் பொழுதைக் கொண்டாட]

இதனால் பிச்சிப்பூ மாலைப்பொழுதை அறிவிக்கும் ஒருகருவியாக இருந்து வந்திருக்கிறது என்பதை உணரலாம்.

தாமரை கதிரவனின் தோற்றத்தையும் அல்லி மதியத்தின் தோற்றத்தையும் பொதுவாக உணர்த்துவனவாகும். தாமரை வைகறைப் போதில் மலர்ந்து மாலைப்போதில் குவியும். அல்லி மாலைப்போதில் மலர்ந்து வைகறைப்போதில் குவியும். இதனால்தான் தாமரையைப் பகலரசி என்றும், அல்லியை இரவரசி என்றும் கூறுவர்.

நெய்தல்பூ வைகறைப் போதில் மலர்கின்ற மலராகும். இதனைத் திருமுருகாற்றுப்படை ஆசிரியர் நக்கீரனார் ''வைகறை கட்கமழ் நெய்தல் ஊதி'' என்று உணர்த்துகிறார்.

சூரியகாந்தி என்னும் விரிந்து பரந்திருக்கும் பூ ஞாயிறு செல்லுகிற பக்கம்நோக்கித் திசைதிரும்பி நிற்கும். அந்தப் பூ நோக்கும் திசையில் ஞாயிறு இருக்கும் என்று ஊகித்தறிந்துகொள்ளலாம். முன்பகலுக்கும் பின்பகலுக்கும் வேறுபாடு தெரியாமல் மப்பு சூழ்ந்த நேரத்தில், நாழிகையையும். பொழுதையும் கணக்கிட்டுக் கொள்ள சூரியகாந்தி உதவும்.

சூரியகாந்தியைப் போலவே நெருஞ்சி மலரும் பரிதியை நோக்கித் திசைதிரும்பி நிற்கும் மலராம். ''நெருஞ்சிப் பசலை வான்பூ, ஏந்தரு சுடரினெதிர்தந் தாங்கு'' என்று புறநானூறும், ''சுடரொடு திரிதரும் நெருஞ்சி'' என்று அகநானூறும் குறிப்பிடுவதைக் காணலாம்.

அந்திக் காலத்தில் மலரும் காரணத்தாலேயே ஒருவகை மலர் ''அந்தி மந்தாரை''. என்று அழைக்கப் பெறுகின்றது. அது போலவே நள்ளிருளில் மலரும் ஒருவகை மலர் 'இருவாட்சி பூ' (இருள்வாசி) என்றும். 'நள்ளிருள் நாறு' என்றும அழைக்கப்படுகின்றது.

பகலவன் மறையும் பொழுதுக்கு முன்னதாகிய எற்பாட்டில் அந்தி மந்தாரை மலர்கிறது :'வெந்தாறு பொன்னின அந்தி பூப்ப'' என்று அகநானூறு குறிப்பிடுவதைக் காணலாம.

முல்லைப்பூ மாலைப்பொழுதில் மலரும் மலராகும. இதனை ''முல்லை மலரும் மாலை'' என்று குறுந்தொகை உணர்த்துவதன் மூலம் அறியலாம்.

முல்லை மலரைப்போலவே, செங்காந்தள் பூவும மாலைப்பொழுதில் பூக்கும் மலராகும். மாலைப்பொழுது என்பது முப்பது நாழிகைக்குமேல் நாற்பது நாழிகைக்குள்ளாக, அதாவது எற்பாட்டிற்கும் யாமத்

'இந்தியா செல்ல வழி' என்ற ஒரு பெரும் நவீனத்தை எழுதிப் புகழ்பெற்றவர் இ எம். பாரஸ்டர் என்னும் நாவலாசிரியர். இந்த நாவல் எழுதப்பட்டு நாற்பது ஆண்டுகள் ஆகியும் இன்னும் அது ஆவலோடு படிக்கப்படுகிறது. இந்திய மக்கள்மீது அதிக அனுதாபம் காட்டி எழுதப்பட்டது என்பதற்காக இந்நூலை ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் வெறுத்தனர்.

ஆனால் ஹாலிவுட் இதை ஒரு பிரும்மாண்டமான திரைப்படமாக்க விரும்பி, படமெடுக்கும் உரிமைக்காகப் பாரஸ்டருக்குப் பத்து லட்சம் வெள்ளி தருவதாகவும், திரைப்படமாக்கும் உரிமை தர வேண்டுமென்றும் எழுதிக் கேட்டது பாரஸ்டர் மறுத்துவிட்டார்.

'ஹாலிவுட் வேண்டுகோளை ஏன் ஏற்கவில்லை?' என்று ஒரு நண்பர் கேட்டதற்குப் பாரஸ்டர் மறக்க முடியாத ஒரு பதில் கொடுத்தாராம்.

'பத்து இலட்சம் வெள்ளி தருவதாகச் சொல்கிறார்கள். அவ்வளவு வெள்ளியையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது?'

திற்கும் இடையில் அமைந்த பொழுதாகும். முல்லையும், செங்காந்தளும் மாலைப்பொழுதில் மலர்கின்றன என்ற உண்மையை, நற்றிணைப் பாடல் ஒன்று அழகுறத் தெரிவிக்கிறது.

'பல்கதிர் மண்டிலம் பகல்செய்து ஆற்றிச்
சேயுயர் பெருவரைச் சென்றவண் மறையப்
பறவை பார்ப்புவயின் அடைய
... ...
முல்லை முகைவாய் திறப்பப் பல்வயிற்
றோன்றி தோன்றிபு புதல்விளக் குறுஅ
... ...
ஐதுவந் திசைக்கும் அருளில் மாலை"

இதில் 'தோன்றி' என்பது செங்காந்தளைக் குறிப்பதாகும்

இவைபோன்றே ஆம்பல், குருக்கத்தி, செம்முல்லை, பிடவு. புன்னை போன்ற மலர்கள் மாலைப்பொழுதில் மலர்வனவாகும் என்று இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

தாமரை, நெய்தல் முதலிய மலர்கள் மாலைப்பொழுதில் குவியும் மலர்களாகும்.

நெச்சிப்பூ நள்ளிருளில் உதிரும் என்று குறுந்தொகை 138-ஆம் செய்யுள் குறிப்பிடுகின்றது.

சிறுபொழுதுகளை உணர்த்த மலர்கள் பயன்படுவதைப்போலவே பெரும்பொழுதுகளை உணர்த்தவும் மலர்கள் பயன்படுகின்றன.

முல்லை, கொன்றை, கடம்பு, பிடவு, பிச்சி, குருந்து, தெறுழம்பூ முதலியன பூக்கத் தொடங்கி விட்டன என்றால், கார்காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

முசுண்டையும், பீர்க்கும் கூதிர் காலத்தில் மலர்வதாக நெடுநல்வாடை உணர்த்துகிறது.

அவரை, ஈங்கை, கருவிளை முதலியன முன்பனிக் காலத்தில் மலரும் என்றும், பகன்றை பின்பனிக்காலத்தில் மலரும் என்றும், அசோகு, கோங்கு, மா, பாதிரி போன்றவை இளவேனிற் காலத்தில் பூக்கும் என்றும், இருப்பை, அதில் போன்றவை இளவேனில், முதுவேனில் ஆகிய இரு காலங்களிலும் பூக்கும் என்றும், இலக்கியங்கள் செப்புகின்றன.

காலத்தோடு சேர்த்துப் பூக்களை உணர்த்தும் மரபு இலக்கியங்களில் திகழ்கின்றது. 'கார்நறும் கடம்பு' என்று நற்றிணையிலும், "கார் நறுங் கொன்றை' என்றுபுறநானூற்றிலும், 'வேனிற் பாதிரி' என்று குறுந்தொகையிலும், 'வேனில் அதிரல்' என்று அகநானூற்றிலும் கூறப்பட்டு உள்ளது.

மலைகளில் உள்ள வேங்கை மரங்கள் இளவேனிற் காலத்திற் பூக்கும் என்றும், வேங்கை பூப்பதைக்கொண்டு மலைவாழ் மக்கள் இளவேனிற் காலம் வந்துற்றதை அறிந்து காதலன் காதலியரின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வர் என்றும் இலக்கியச் செய்திகள் கூறுகின்றன.

மலையில் வளரும் குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறைதான் பூக்கும் என்றும், அந்தப் பூ மலர்வதை வைத்துக்கொண்டு மலைவாழ் மக்கள் தம் ஆயுட்காலத்தைக் கணக்கிடுவர் என்றும் சொல்லப்படுகிறது.

பொழுதைக் கண்டறிவதற்கு பூக்கள், ஞாயிறு, திங்கள் உடுக்கள் போன்ற இயற்கைக் கருவிகள் பயன்பட்டதைப் போலவே, பண்டைத் தமிழர்கள் செயற்கைக் கருவிகள் பலவற்றையும் பயன்படுத்தினர் என்று தெரிய வருகின்றது.

பண்டைத் தமிழகத்தில், பொழுதை அளந்தறிவதற்கு 'கன்னல்' என்னும் ஒரு கருவியைத் துணையாகக் கொண்டிருந்தனர். நீர் நிறைந்த கலத்தின் அடியில் துளையை இட்டு, அதன் வழியே ஒரே சீராக நீர் கசிந்து இறங்கும் நேரத்தைக் கொண்டு நாழிகைகளைக் கணக்கிட்டு வந்திருக்கின்றனர்.

சிறுசிறு துளியாக நீர் ஒழுகிவந்த காரணத்தால், அந்தக் காலம் காட்டும் கருவியைக் 'குறுநீர்க் கன்னல்' என்று வழங்கினர். அதனையே 'நாழிகை வட்டில்' என்றும் அழைத்தனர். அரசனுடைய அரண்மனையில் நாழிகையைக் கணக்கிட்டு அறிந்து, அவ்வப்போது பொழுதை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டோர் 'நாழிகைக்கணக்கர்' என்று அழைக்கப்பட்டனர்.

நாழிகைக் கணக்கர் குழிநீர்க் கன்னியின் துணைகொண்டு நாழிகையை அறிந்து கூறும் நிகழ்ச்சியை 'முல்லைப்பாட்டு' அழகுபட விளக்கிக் காட்டுகிறது.

"பொழுதளந்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய் நின்
குறுநீர்க் கன்னல் இனைத்தென்று இசைப்ப"

(பொழுது அளந்து அறியும் பொய் பேசாத வேலைக்காரர்கள் அரசனைத் தொழுது காணும் கையை உடையவர்களாய், வெளிப்படையாக வாழ்த்தி அலை வீசுகின்ற நீரை எல்லையாக உடைய உலகத்தை வெல்லும் பொருட்டுச் செல்லும் மன்னர் பிரானே, நீ செய்வதற்கு ஏற்றதென்று குறுநீர்க் கன்னல் செல்லும் காலம் இன்ன அளவுடையது (இத்தனை நாழிகை என்று கூற) என்பதிலிருந்து அறியலாம்.]

நீர்க்கன்னலைப் போலவே நீருக்கு மாற்றாக மணலைப் பயன்படுத்தும் கன்னல்களும் இருந்திருக்கின்றன. காலேந்திரம், கடிகையாரம் போன்ற கருவிகள் காலத்தைக் காட்டும் கருவிகளாக இருந்து வந்தன என்று பெருங்கதை என்னும் இலக்கியம் குறிப்பிடுகின்றது

காட்டுததூரும் பெருத்துக் கண்டம் பதினூருக்கி
நீட்டிக் கிடந்ததுபோக நின்றது நாழிகை'

என்ற முறையில் கதிரவனின் வெய்யிலில் விழும் நிழலைக் கொண்டும் நிழலை ஏற்படுத்தும் துரும்பினை நிற்கும் பகுதியைக் கொண்டும் நாழிகைகள் கணக்கிடப்பட்டு வந்தன என்று தெரிய வருகிறது.

'எச்சில் துப்பிக் காயும் நேரம்,' 'பாக்குவெட்டும் நேரம்' 'உலையில் கொதி வரும் நேரம்' போன்றவைகள் நேரத்தின் அளவைக் குறிப்பிட மேற்கொண்ட முறைகளாகும்.

பண்டைத் தமிழர்கள், காலத்தைக் காட்டும் கருவிகளாக இயற்கைக் கருவிகளையும் செயற்கைக் கருவிகளையும் எவ்வளவு பாங்குறப் பயன்படுத்தி வந்தனர் என்பதிலிருந்து, அவரது நாகரிகச் செம்மையை நன்கு அறியலாம்.

O

பிரார்த்தனை உண்டியல்

மு. கருணாநிதி

“என்னங்க பெரியவரே; இவ்வளவு பெரிய உண்டியல் எந்த ஊர்க்கோயிலுக்குக் காணிக்கை?” என்று ஆவல் பொங்கிட வினவினுன் அந்த வாலிபன்.

பெரியவரின் பதிலை முந்திக்கொண்டு பெருமிதமும் புன்னகையும் கண்களின் பேரொளியும் அவர் முகத்தில் தோன்றின.

“திருப்பதி ஏழுமலையானுக்குத் தானப்பா” என்று அவர் கூறியபோது பக்திப்பரவசப் பெருவெள்ளத்தில் மிதந்தார். அவரது இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியுணர்ச்சி ஊற்றெடுத்துக்கொண்டிருந்தது. அப்போது, ‘தாத்தா’ என்று மழலைபொழிந்தவாறு நாலு வயது அரும்பு ஒன்று அங்கே வந்தது. அதன் பிஞ்சுக்கரத்தில் ஏழெட்டுப் புதுக்காசுகள் இருந்தன. பேரப்பிள்ளையைக் கண்டதும் பெரியவர் அள்ளி அணைத்துக்கொண்டு திருப்பதி உண்டியலின் அருகே அமர்ந்தார். குழந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு அவன் வைத்திருந்த காசுகளை ஒவ்வொன்ருக உண்டியலுக்குள் போட வைத்தார். நாள்தோறும் உண்டியலில் காசு போடுவதை உற்சாகம் மிகுந்த வேடிக்கையாகக் கருதி மகிழும் பேரப்பிள்ளையும் தன்வேலையை முடித்துவிட்டுத் தளிர்க்கரங்களைத் தட்டித் தாத்தாவின் மடியில் குதிக்கத் தொடங்கினுன்.

“இந்தப்பயல், திருப்பதியான் முகம் பார்க்காவிட்டால் ஆறுமாதங்களுக்கு முன்பே எங்களை விட்டுப் போயிருப்பான். குழந்தை பிழைப்பான் என்றே யாரும் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று ஒருநாள் கை காலை முடக்கிவிட்டது. மருத்துவர்கள் படாத பாடுபட்டுப் பார்த்தார்கள். வீடே சோகத்தில் மூழ்கியிருந்தது. என் மகனையும் மருமகளையும் பார்த்து ஆறுதல் சொல்லக்கூட என் இருதயத்திற்குச் சக்தி இல்லை. ‘இந்த மருந்தில் குணம் தெரியாவிட்டால் பிள்ளை பிழைப்பது கஷ்டம் தான்’ என்று டாக்டர், கடைசி மருந்தையும் கொடுத்துவிட்டார். கைகழுவியாகிவிட்டது என்று முடிவு செய்துவிட்டார்கள் எல்லோரும்! எனக்கு மட்டும் நம்பிக்கை அடியோடு பட்டுப்போகவில்லை. திடீரென்று திருப்பதியான் நினைவு வந்தது. “பிள்ளையைப் பிழைக்க வைத்துவிடு பெருமானே! அவன் கையாலேயே ஆறுமாதம் உண்டியலுக்குக் காசு போட்டு, அது நிரம்பியதும் உன் கோயிலுக்குக்கொண்டு வந்து பிரார்த்தனை செலுத்துகிறேன்” என்று வேண்டிக்கொண்டேன். மறுநாள் பொழுது நல்ல பொழுதாகவிடிந்தது. கருகிவிடுமோ எனறு பயந்த எங்கள் வீட்டு முல்லை மொட்டு தப்பித்துக்கொண்டது. அப்போது வைக்கப்பட்ட உண்டியல்தானப்பா இது!”

என்று மலர்ந்த முகத்துடன் பெரியவர் விளக்கம் கூறி நிறுத்தினுர்.

‘‘பிரார்த்தனையை நிறைவேற்றத் திருப்பதிக்கு எப்போது பிரயாணம்?”

என்று வாலிபன், புன்முறுவல் ததும்பிடக் கேட்டான்.

“இந்த மாதக் கடைசியில்—அதாவது இருபத்தெட்டாம் தேதி புறப்படலாமென்றிருக்கிறேன்,” பெரியவர் உறுதி தொனித்திடப் பதில் கூறிவிட்டுப் பேரனைப் பார்த்து, “ஏண்டா பயலே! திருப்பதிக்குப் போகலாமா?” என்று கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சத் தொடங்கினுர்.

‘‘அப்படியானுல் நான் வந்த காரியம்?” வாலிபன் பேச்சை ஒரு மாதிரி இழுத்தான்.

“என்னப்பா?”-இது பெரியவர்.

“அதுதான் சொன்னேனே; கழகத் தேர்தல் நிதிக்கு ஏதோ உங்களால் முடிந்தது......!”

“ஓ! அதுவா? அதற்கென்ன பார்ககலாம். எனக்கு முதல் வேலை, திருப்பதிப் பிரார்த்தனை! பிறகுதான் கழகமோ, காங்கிரசோ, தேர்தலோ, நிதியோ, எல்லாமே!”

“சரி; நான் பிறகு வருகிறேன்.” வாலிபன் ஏமாற்றத்தைக் காட்டிக் கொளளாமல் விடைபெற்றுப் புறப்பட்டான்......

[பெரியவருக்கும் வாலிபனுக்கும் இடையே இந்த உரையாடல் பிப்ரவரித் திங்கள் முதல் வாரத்தில் நடைபெற்றது. மீண்டும் அந்த வாலிபன் மார்ச் திங்கள் முதல் வாரத்தில் அந்தப் பெரியவரைச் சந்தித்தான் அவரது இல்லத்தில்]

“என்ன பெரியவரே; முகமெல்லாம் கருத்துப் போயிருக்கிறது? திடீரென்று மிகவும் மெலிந்துவிட்டிருக்கிறீர்கள்? உடல்நலக் குறைவு ஏதாவது ஏற்பட்டதா?”

என்று திகைப்புடன் பேச்சைத் தொடங்கினுன். பெரியவரால் பேச முடியவில்லை. நாக்குத் தழுதழுத்தது மேனி நடுங்கிற்று. விழிகளில் நீர்வீழ்ச்சிகள்.

கேட்கக்கூடாத ஒன்றைக்கேட்டு விட்டோமோ என்று சங்கடப்பட்ட அந்த வாலிபன், பெரியவரின் முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

"தம்பி! ஏன் இப்படி ஆடிப்போயிருக்கிறேன் என்று தெரியாமல் திகைக்கிருயா? அன்று நீ வந்த போது மகிழ்ச்சியின் உச்சியில் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தேன். இன்று சோகப் பள்ளத்தில் சுருண்டு கிடக்கிறேன்."

அதற்குமேல் பெரியவரால் பேச இயலவில்லை. தேம்பித் தேம்பி அழுதார். வாலிபன், உணர்ச்சிவயப்பட்டுப் பரபரப்புடன், "என்ன நடந்தது சொல்லுங்கள் பெரியவரே!" என்று அவரைத் தழுவிக்கொண்டான் ஆறுதலாக!

"போன தடவை நீ, நிதி கேட்க வந்தபோது ஓடிவந்தானே என் பேரப்பிள்ளை; அவனை நான் கொன்றுவிட்டேன்!"

"என்ன?"

"ஆமாம்ப்பா நான்தான்கொன்று விட்டேன். அந்த நாலு வயதுச் செல்வத்தை நடுத்தெருவில் போட்டு நான்தான் கொன்றுவிட்டேன்."

"அய்யோ! நீங்கள் கொன்றிருக்க மாட்டீர்கள். உங்கள் கைகள் மென்மையானவை. அதைவிட உங்கள்நெஞ்சம் மென்மையானது. நீங்கள் கொன்றிருக்கமாட்டீர்கள். என்ன நடந்தது சொல்லுங்கள்?"

"நான்தான் கொன்றதாக நான் நினைக்கிறேன் .....இல்லை......நான் கொல்லவில்லை! நான் கொல்லவில்லை!"

பெரியவர் ஆவேசம் வந்தவரைப்போலக் கத்தினுர். பிறகு அவராகவே அடங்கினுர்.

"தம்பி! நாட்டில் இந்தியை எதிர்த்து மாணவர்கள் தொடங்கிய கிளர்ச்சியில் அடக்குமுறையும் அராசக அமளிகளும் நல்லோர் கண்டிக்கத்தக்க அளவுக்குத் தலை விரித்தாடியதல்லவா? அந்த நேரத்தில்தான் என் பேரக்குழந்தையை நான் இழந்தேன். கடைத்தெருவுக்குப் போய்வரலாம் என்று பிள்ளையுடன் புறப்பட்ட நான் அவன் கொழுந்து விரல்களைப் பிடித்துக் கொண்டு மெல்லத் தெருவில் நடந்துகொண்டிருந்தேன். வீதியில் உள்ள வேடிக்கைகளை விழிகளைச் சுழற்றிச் சுழற்றிப் பார்த்துக் கொண்டு வந்தான் என் பேரன். அந்தச்சமயம், திடீரென்று "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!!" என்ற பேரொலி நாலா திக்கிலும் எழுந்தது. அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வெடிச்சப்தங்கள். ஒரு பெருங்கூட்டம் சிதறி ஓடியது. போலீஸ் படை "திபுதிபு"வென்று பல திசைகளிலும் நுழைந்தது. குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடலாமென்று கீழே குனிந்தேன். அதற்குள்....அய்யோ; என் பேரனைப் பிணமாக்கிவிட்டது அந்தப் பாழும் துப்பாக்கிக் குண்டு! இளந்தளிர் தெருப்புழுதியில் இரத்தம் சொட்டச் சொட்ட விழுந்தது. தூக்கிக்கொண்டு ஓடினேன். அய்யோ; நான் தூக்கி வளர்த்த தும்பைமலர் என் தோளிலேயே உயிர்விட்டு வாடி வதங்கிப்போனது ......"

பெரியவர் விம்மி விம்மி அழுதார். வாலிபன் சிலைபோல நின்றுகொண்டிருந்தான், வடிந்த கண்ணீரைத் துடைக்கவும் செயலற்று! பிறகு நீண்ட அமைதி! பெரியவர் பேசினுர். இப்போது அவர் பேச்சில் தெளிவு இருந்தது. உறுதி முழங்கியது. ஒரு சபதத்தின் சாயல் தெரிந்தது.

"தம்பி! ஆண்டவன் என் பேரனுக்கு உயிரைக்கொடுத்தான். ஆண்டு கொண்டிருப்பவர்களோ அந்த உயிரைப் பறித்து விட்டார்கள். அமளியை அடக்கத் துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாததாகக் கூட இருக்கலாம். அதற்காகத் துப்பாக்கி ரவை களையே நம்பி ஒரு துரைத்தனம் நடைபெறுவதா? இந்த ஆட்சியில் என் பேரனைப்போல எத்தனைக் குருத்து ஓலைகள் குழிக்குள் போயிருக்கின்றன? இந்தத் துரைத்தனம் தொடரலாமா? தொடருவது நியாயமாகுமா?"

பெரியவர் அழுத்தமாகவும் ஆத்திரமாகவும் கண்டிப்பாகவும் பேசினுர்.

"நீங்களேதான் கேள்வி கேட்க வேண்டும். நீங்களேதான் பதிலும் சொல்லவேண்டும்" என்று அமைதியாகக்கூறிக்கொண்டே வாலிபன் நகர்ந்தான்.

"இரு! இரு! போய்விடாதே!" என்றவாறு உள்ளேசென்ற பெரியவர், சில விநாடிகளில் உண்டியலை ஏந்தியவாறு வாலிபனிடம் வந்து, "இந்தா; நீகேட்ட தேர்தல் நிதி! பேரனைப் பிழைக்கவைத்த பெருமானுக்கு நான் சேர்த்த காணிக்கை; எதிர்காலத்தில் என் பேரனைப் போல் தமிழ்நாட்டுக் குழந்தைகள் நடுதெரு நாய்களெனச் சுட்டுக் கொல்லப்படாமல் இருக்க — நல்லாட்சி அமைய — பொல்லாதார் ஆட்சி விலக — ஜனநாயகம் தழைக்க — அன்புவழி வென்றிட — அறநெறி நிலைத்திட — என்னுலான சிறுஉதவி; ஏற்றுக்கொள்!" என்று அவனைத் தழுவிக்கொண்டு கண்ணீர் சொரிந்தார்.

வாலிபன் உண்டியலைப் பெற்றுக் கொண்டு அதனையே உற்றுப் பார்த்தான்.

அன்று தாத்தாவின் மடியில் கண்ட அந்தப் பேரக் குழந்தை போல உண்டியல் காட்சியளித்தது. வாலிபன் கண்ணீர்மழை பொழிந்தான்; கண்ணீர்த் துளிகள் உண்டியல்மீது உருண்டோடின.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத
கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்ற குறள் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

இந்தியாவில் மொத்தம் 50 இலட்சம் குருடர்கள் இருக்கிறுர்களாம்; கண்ணிருந்தும் குருடர்களாக உள்ளவர்கள் இந்தக் கணக்கில் சேர்க்கப் படவில்லை.



சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.





லுங்கி என்றதும் ஞாபகத்திற்கு வருபவை
''சங்கு மார்க்''

வனப்பு, வண்ணம், இழை, நீடித்த உழைப்பு இவையாவும் ஒருங்கே அமைந்தவை. எமது இதர தயாரிப்புகள் சோளிகள் புடவைகள் மற்றும் கைக்குட்டைகள்

K.E.Mo ABOOBACKER
சங்கு
TRADE MARK
கோ இ முகமமது அபுபககா

சங்கு மார்க்

லுங்கிகள்

முகம்மது அபூபக்கர் & கம்பெனி

95, தம்பு செட்டி தெரு, மதராஸ்-1

மெயின் ரோடு
கொல்லம்

65/11-12, லோயர் சிட்பூர் ரோடு
கல்கத்தா

84, கீழவெளி வீதி
மதுரை

MAS. 169-TA

Regd. No. M. 7894 KANCHI ANNUAL NUMBER, 1965

எந்த விழாவிற்கும் சந்தர்ப்பத்திற்கும்

எல்லோரும் சால விரும்புவது

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி துணிகள்

தமிழ் நாடு.
கைத்தறி
நெசவாளர்
கூட்டுறவு
சங்கம்.
லிமிடெட்.
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், சென்னை-8

ELEGANT